REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 பெப்ரவரி 20 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 56 | Monday 20, February, 2023 | 16பக்கங்கள் | 50/-

தேர்தலை ஒத்திவைக்க கோரும் மனு பரிசீலனை

இன்று உயர் நீதிமன்றுக்கு வருகிறது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் 06

திருக்கேதீஸ்வரத்தில் மஹா சிவராத்திரி விழா

மன்னார் மாதோட்டத்தின் பாலாவிக்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில், (18) மஹாசிவராத்திரி தினம் சிறப்பாக இடம்பெற்றது. இதில், சுமார் 07 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றனர். மஹா சிவராத்திரி தினத்தன்று அழகிய தோற்றத்துடன் காட்சியளித்த ஆலயத்தைப் படத்தில் காணலாம். (படம் மன்னார் குறூப் நிருபர், லெம்பர்ட் ரொசேரியன்)

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கே முன்னுரிமை

நாடு அராஜகங்களுக்குள் சிக்க அனுமதிக்க முடியாது

சட்டம், ஒழுங்கு மிகக்கடுமையாக பேண அரசு நடவடிக்கை

இலங்கை மாலைதீவுக்கான ரோட்டரி கழக மாவட்ட மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தின் மீட்சிக்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்குமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார். அதேவேளையில் நாடு அராஜகங்களுக்குள் சிக்கிவிடுவதற்கு இடமளிக்காமல் சட்டம் ஒழுங்கு பேணப்படுமென்றும் அவர், உறுதியளித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் 06

அரசாங்கத்தின் பங்களிப்புடன் இவ்வருட வெசாக் பண்டிகை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இம்முறை வெசாக் பண்டிகையை அரசாங்கத்தின் பங்களிப்புடன் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார். மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, 06

கடந்த கால அனுபவங்களை பாடமாகக் கொள்ளுங்கள்

தமிழ் தரப்புக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

தென்னிலங்கையின் அரசியல் தரப்புக்கள் கடந்த காலங்களில் கையாண்ட அனுபவங்களின் அடிப்படையில், தற்போது தமிழ் தரப்புக்களின் அணுகுமுறைகள் அமைய வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

தேர்தல்களில் அதிக பணம் செலவு செய்யும் வேட்பாளர்களுக்கு சிக்கல்

ஆராய குழுவை நியமிக்க ஜனாதிபதி எதிர்பார்ப்பு

தேர்தலின் போது வேட்பாளர் ஒருவர் அதிக பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத வகையில், தேர்தல் முறையை உருவாக்குவது குறித்து 06

தேர்தலை சீர்குலைக்கும் செயல்களுக்கு கண்டனம் 03

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு

போதைப் பொருட்களுடன் **சிவனொளிபாத மலைக்கு சென்ற 35 பேர் கைது** 03

வருமான வரி திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டிய

ரூ.20,000 கோடி நிலுவை பணத்தை வசூலிக்க விசேட குழு நியமனம்

திறைசேரி உயரதிகாரிகள் அதிரடி நடவடிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டின் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்கள் தேசிய வருமான வரித் திணைக்களத்துக்கு இதுவரை 20,000 கோடி ரூபாவை வரிப் பணமாக செலுத்தவேண்டியுள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அவ்வாறு வரி செலுத்தத் தவறியுள்ள நபர்களில் சுமார் 100 பேர் இதுவரை மரணமடைந்துள்ளதாகவும் அந்த திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 06

கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாத ஒன்று

நீர்க் கட்டண உயர்வை குறைப்பதற்கு திட்டமொன்றை வகுக்க எதிர்பார்ப்பு

நாட்டின் நலன் கருதி மக்கள் பொறுமை காப்பது அவசியம்

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், நீர்க்கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய கட்டாயசூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று தெரிவித்தார். எனினும், மக்கள் நலன்கருதி குறுகிய காலப்பகுதிக்குள் நீர்க் கட்டண உயர்வை 06

உள்ளூராட்சி சபை நிர்வாகங்கள் விசேட ஆணையாளர்களின் கீழ்

கொண்டுவருவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபை தேர்தல் எதிர்வரும் மார்ச் (09) ஆம் திகதிக்கு முன்பதாக நடத்த முடியாதநிலை காணப்படுவதால் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களை விசேட ஆணையாளர்களின் கீழ் கொண்டுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. 06

கொழும்பு இந்திய விசா

IVS விநியோகப்பிரிவு இன்று மீண்டும் திறப்பு

கொழும்பிலுள்ள இந்திய விசா விநியோகப்பிரிவு இன்று (20) முதல் சேவைகள் மற்றும் வழமையான செயற்பாடுகளுக்காக மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. விசா 06

2022 ஆண்டுக்கான இறுதித் தவணையாக

பாடசாலைகள் அனைத்தும் இன்று மீண்டும் ஆரம்பம்

நாடுமுழுவதுமுள்ள அனைத்து பாடசாலைகளிலும் 2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் முன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை (20) ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையை முன்னிட்டு ஜனவரி 23 ஆம் திகதி தொடக்கம் கடந்த 17 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய இன்று திங்கள் முதல் மூன்றாம் 06

விவசாய அமைச்சு முடிவை மாற்ற வேண்டும்

விலங்குகளை கொலை செய்யும் தீர்மானத்துக்கு CWC எதிர்ப்பு

தலைவர் செந்தில் தொண்டமான் கடும் கண்டனம்

விவசாய நிலங்களுக்குள் உட்புகும் விலங்குகளை கொல்வதற்கு விவசாய அமைச்சு வழங்கியுள்ள அனுமதிக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். குரங்குகள், மயில்கள், 06

நகைச்சுவை நடிகர் மயில்சாமி காலமானார்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

தென்னிந்திய பிரபல நகைச்சுவை நடிகரும், மிமிக்கிரி கலைஞருமான ஆர். மயில்சாமி நேற்று (19) காலமானார். சென்னை, கேளம்பாக்கத்தில் 06

இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது புலம்பெயர்

பறவைகள் பூங்காவுடன் சுற்றாடல் சுற்றுலா வலயம்

கண்டி, ஹந்தானையில் இன்று திறப்பு

கண்டி, ஹந்தானையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சுற்றாடல் சுற்றுலா வலயம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

"ஹந்தானை சர்வதேச பறவைகள் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு மையம்" என பெயரிடப்பட்டுள்ள இந்த பூங்கா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இன்று 06

மட்டக்களப்பில் டெங்கு நோய்க்கு ஒருவர் பலி

ஏறாவூர் இளைஞன் பரிதாப மரணம்

டெங்கு நோய்க்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 22 வயது இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவர் மட்டக்களப்பு ஏறாவூரில் (18) அதிகாலை உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாத்திரம் 06

நீதிமன்றுக்கு விரைவில் மனு தாக்கல் தேர்தலை நடத்த முடியாத சூழல்

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சி ஹேவா

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஏற்கனவே உறுதியளித்துள்ளபடி எதிர்வரும் மார்ச் ஒன்பதாம் திகதி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளதென, உச்ச நீதிமன்றத்திற்கு மனு ஒன்றைத் தாக்கல் செய்ய, தேர்தல் ஆணைக்குழுத் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள 06

ஹக்கலயில் 13,200 லீற்றர் டீசலுடன் எரிபொருள் பவுசர் வீழ்ந்து விபத்து

80 அடி பள்ளத்தில் விழுந்ததால் சேதம்

ஹக்கல பகுதியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் பவுசரொன்று விபத்துக்குள்ளானது. வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து 06

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய ஆண்டு திருவிழா தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி குறூப் நிருபர்

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருவிழாவானது 08.03.2023 புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10.03.2023 வெள்ளிக் கிழமை நற்கருணை வழிபாடும், பவனியும் நடைபெற்று,

11.03.2023 சனிக்கிழமை திருவிழா திருப்பலியுடனும், புனிதரின் திருச்சுரூப ஆசீருடனும் இனிதே நிறைவுபெறவுள்ளது. பாலைதீவு அந்தோனியார் ஸ்தலம், தவக்கால யாத்திரை ஸ்தலமாக விளங்குவதால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தவக்கால தியானத்திற்காகவும், திருச்சிலுவைப்பாதை தியானத்திற்காகவும், தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காகவும் ஏராளமானவர்கள் அங்கு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய 128ம் ஆண்டு திருவிழாவினை சிறப்பான முறையில் முன்னெடுத்துச்செல்வதற்காக வேண்டி முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக திருவிழா காலங்களில் திருத்தலத்திற்கு வருகை தரும் பொதுமக்களுக்கான பொது வசதிகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி

இலங்கையின் தான் தோன்றீஸ்வரங்களில் ஒன்றாகிய ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் மகா சிவராத்திரி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் நகரில் தான்தோன்றி ஈஸ்வரராக இருந்து மக்களுக்கு அருள்பாலித்து வருகின்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகா சிவராத்திரி வைபவம் நேற்று மாலை விசேட பூஜைகளுடன் ஆரம்பமாகியுள்ளது.

மாலை 6 மணி அளவில் முதலாம் சாம பூஜை விசேடமாக இடம்பெற்றதை தொடர்ந்து தொடர்ச்சியாக நான்கு சாம பூஜைகளும் அதனை தொடர்ந்து காலையிலே அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கி இந்த மகா சிவராத்திரி மிக சிறப்பாக இடம்பெற்றது.

பேராசிரியர் விக்னேஸ்வரனின் இறுதிச் சடங்கு செவ்வாயன்று

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத்துறைப் பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரனின் இறுதிக் கிரியைகள் நாளைய செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

கோண்டாவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடல் செவ்வாய்க் கிழமை காலை 7:30 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ள அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து, முற்பகல் 9:30 மணிக்கு பூதவுடல் மீண்டும் அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு முற்பகல் 10:30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடாத்தப்பட்ட பின்னர் தகனக் கிரியைகளுக்காக இனுவில் கிழக்கு, காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தமிழ்ச்சங்கம் அறிமுகம்!

முல்லைத்தீவு மாவட்ட தமிழ் சங்க அறிமுக நிகழ்வும் சிவராத்திரி நிகழ்வும் முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயத்தில் சிவராத்திரி அன்று சிறப்புற நடைபெற்றுள்ளது.

18.02.23 அன்று மாலை முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா.சண்முகதாசன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழத்தின் பிரபல எழுத்தாளர் நிலக்கிளி பாலமனோகரன் கலந்து சிறப்பித்துள்ளார்.

நிகழ்வில் மங்கள விளக்கினை ஆலய குருக்கள் ரகுநாதக்குருக்கள் அவர்களும் நிலக்கிளி பாலமனோகரன் மற்றும் அவரின் பாரியார் கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா.சண்முகதாசன் முல்லைத்தீவு மத்தியஸ்த சபை தலைவர் மு.உதயசங்கர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

திருக்கேதீச்சர ஆலயத்துக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை

தலைமன்னார் விஷேட நிருபர்

மன்னார் மாதோட்டத்திலே பாலாவியின் கரையிலே கௌரி அம்பாள் எழுந்தருளியிருக்கும் திருக்கேதீச்சர ஆலயத்தில் இவ்வருடத்துக்கான மகா சிவராத்திரி பெருவிழா சனிக்கிழமை (18) காலை 5 மணிக்கு திருவனந்தல் பூசையை தொடர்ந்து விஷேட பூசை வழிபாடுகள் அபிஷேகங்கள் இடம்பெற்றன.

பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் சனிக்கிழமை காலை தொடக்கம் கடும் வெயில் என்றும் பாராது பாலாவியில் நீராடிவிட்டு தங்கள் கரத்தினால் தீர்த்த காவடி எடுத்துக் கொண்டு மிக நீண்ட வரிசையாக திருக்கேதீஸ்வர ஆலயத்தில் வீற்றிருக்கும் மகாலிங்க பெருமானுக்கு அபிஷேகம் செய்தனர்.

இந்த தீர்த்தக் காவடி வழிபாடானது காலை 5.30 மணி தொடக்கம் நடைபெற்ற வண்ணம் காணப்பட்டது. அத்துடன் அர்ச்சனை வழிபாடுகளில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் மாலை 3 மணி முதல் விஷேட அபிஷேகமும் 4.30 மணிக்கு மகா பிரதோஷகால பூசையும் இதனைத் தொடர்ந்து நான்கு சாமப் பூசைகளும் அபிஷேகங்களும் அர்ச்சனை வழிபாடுகளுடன்

மறுநாள் விஷேட பூசைகளுடன் வசந்த மண்டப அலங்கார பூசையைத் தொடர்ந்து எம்பெருமான் பாலாவிக்கு எழுந்தருளி தீர்த்த உற்சவம் நடைபெறுவதற்கான எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாள் வெட்டு சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரு இளைஞர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சிவனொளிபாதமலைக்கு வந்த யாத்திரிகர்கள் திரும்பிச் சென்றனர்

தலவாக்கலை குறூப் நிருபர்

சிவனொளிபாதமலைக்கு வழிபட நேற்று (19) உட்பட கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளிலிருந்து அதிகளவான யாத்திரிகர்கள் வருகை தந்தமையால் பெரும்பாலானோருக்கு அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாக நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

ஹட்டன், நல்லதண்ணி வீதியில் அதிகளவான யாத்திரிகர்களின் வருகை அதிகரித்தமையால் பெரும் அளவிலான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

யாத்திரிகர்கள் நல்லதண்ணியிலிருந்து சிவனொளிபாதமலை வரை பயணிக்க 12 மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட்டதாகவும், பெருமளவான யாத்திரிகர்கள் சீதங்குள பகுதியிலிருந்து இடைநடுவே திரும்பிச் சென்றுள்ளனர். கடும் போக்குவரத்து நெரிசல் காரணமாக குறிப்பிட்ட சில யாத்திரை ஸ்தலங்களில் மக்கள் தொலைந்து போகும் சம்பவங்களும், சில யாத்திரிகர்களின் பணப்பைகள் மற்றும் தங்க உடமைகளை இழந்த சம்பவங்களும் அதிகம் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை விடுமுறை மற்றும் வார இறுதி சனி, ஞாயிறு விடுமுறைகள் காரணமாக பெருமளவான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலையை தரிசிக்க வந்துள்ளதாகவும் அவர்கள் தாங்கள் எதிர்பார்க்காத பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர் என அவர் தெரிவித்தார்.

சிவனொளிபாதமலைக்கு பெருமளவான யாத்திரிகர்கள் வருகைதந்தமையினால் அவர்கள் பயணித்த பேருந்துகள் மற்றும் ஏனைய வாகனங்கள் நல்லதண்ணியிலிருந்து மவுஸ்ஸாக்கலை சந்தி வரை 10 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் நிறுத்தப்பட்டதோடு பல வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்துவதற்கு இடம் கிடைக்காமல் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாக மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவர் சண்முகம் செம்பகவள்ளி தெரிவித்தார்.

மரம் ஏறி பலாக்காய் பறிக்க முற்பட்ட 50 வயதுப் பெண் பலி

அக்குறணை குறூப் நிருபர்

கம்பளை பிரதேசத்தில் பெண் ஒருவர் உணவுக்காக பலாக்காய் பறிக்க மரமேறி, பலாக்காய் பறிக்க முற்பட்டபோது தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

இது பற்றித்தெரிய வருவதாவது, கம்பளை நாரன்விட்ட பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் பீ.ஜீ. சாந்தி குமாரி என்ற 50 வயதடைய 4 பிள்ளைகளின் தாயே மரணித்துள்ளார்.

அவரது கணவர் தனியார் தறையில் தொழில் புரிபவர். இருப்பினும் நான்கு பிள்ளைகளும் பெண்களாகும். அதில் இருவர் பாடசாலை செல்பவர்கள்.. இதன் காரணமாக அவரது வாழ்க்கைச் செலவுகளில் சற்று சிரமம் காணப்படுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே இவர் வழமையாக பலாக்காய், வடு பலாக்கா (பொலஸ்) போன்றவற்றை அடிக்கடி நாடுவதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையிலே மேற்படி சம்பவம் நடந்துள்ளது.

பலா மரத்திற்கு பக்கத்தில் இருந்த சாதிக்காய் மரத்தில் ஏறி பலாக்காய் பறிக்க முயற்சித்து முடியாத போது, அசாதாரண துணிவுடன் பலா மரத்தில் ஏறிய போதே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயடைந்த மேற்படி பெண் ஐந்து தினங்கள் கம்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போதும் அது பயனளிக்காது மரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலைச்சாரலி

பின்னவலை உடகம பிரதேசத்தில்

மாணவர்களுக்கு கஞ்சா போதை வில்லைகள விநியோகிக்கும் 3 சந்தேக நபர்கள் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை பின்னவல பிரதேசத்தில் கஞ்சா மற்றும் போதை வில்லைகளைத் தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர்கள் மூவரை பின்னவலைப் பொலிசார் கைது செய்துள்ளனர். மூன்று கிலோவுக்கு அண்மித்த கஞ்சாத் தொகையை வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களை பின்னவலை ஹேன்யாய பிரதேசத்திலும் மாணவர்களுக்கு போதை வில்லைகளை விற்பதற்குத் தயாராக வைத்திருந்த வியாபார நிலைய உரிமையாளர் ஒருவரை பின்னவலை உடகம பிரதேசத்திலும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவற்றை பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ள மை ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் மீது விசாரணை இடம் பெற்று வருவதுடன் இவர்கள் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ள தாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு ஹட்டன் ஜோதிலிங்க ரத பவனி

ஹட்டன் விசேட நிருபர்

மஹா சிவராத்திரியினை முன்னிட்டு மலையகத்தில் உள்ள சிவ ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மஹா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு ஹட்டன் ஜோதிலிங்க ரத பவனி நேற்று முன்தினம் (18) ஹட்டனில் இடம்பெற்றது.

தலவாக்கலை சென் கூம்ஸ் தோட்டத்தில் மேல் பிரிவு ஆலயத்தில் கடந்த 13 திகதி ஆரம்பித்த குறித்த ரத பவனி தலவாக்கலை கொட்டகலை ஹட்டன் வட்டவளை, நோர்வூட், பொகவந்தலாவை, மஸ்கெலியா உள்ளிட்ட ஏழு நகரங்களையும் நகரங்களை சுற்றியுள்ள தோட்டப்பகுதியில் 128 ஆலயங்களுக்கும் சென்று 22ம் திகதி மஸ்கெலியா நல்லத்தண்ணீ சிவனொளிபாதமலை அடிவாரத்தில் லக்ஸபான பிரதேசத்தில் கண்காட்சி கூடத்துடன் பிரதிஸ்டை செய்து வைக்கப்படவுள்ளது.

குறித்த ரத பவனியினை ஹட்டன் பிரம்மகுமாரிகள் நிலையம் ஏற்பாடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பூஜை வழிபாடுகளை கொட்டகலை கொமர்சல் துர்க்கை அம்மன் ஆலயத்தின் பிரதம குரு வேலு சுரேஸ்வர சர்மா நடத்தி வைத்தார்.

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வர ஆலயத்தில் பால் அபிஷேகம்

ஹட்டன் விசேட நிருபர்

மஹா சிவராத்திரியினை முன்னிட்டு மலையகத்தில் உள்ள சிவ ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் பல்வேறு நிகழ்வுகளும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

மஹா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு ஹட்டன் லிங்க நகர் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆலயத்தில் பால் அபிசேகம் நேற்று முன்தினம் (18) காலை முதல் நண்பகல் வரை இடம் பெற்றது. அதனை தொடர்ந்து சிவ லிங்கப்பெருமானுக்கு பால் தேன் தைலம், தயிர், திரவியம், வில்வ இலை, பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பூஜை பொருட்களால் அர்ச்சனை செய்து விசேட பூஜைகள் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து நாடு மற்றும் நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிணி வறுமை நீங்கி சீறும் சிறப்பும் பெற்று ஆரோக்கியத்துடன் வாழ பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்த பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் விபூதி பிரசாதம் ஆகியன வழங்கப்பட்டன.

குறித்த ஆலயத்தில் நேற்றுநான்கு சாம பூஜைகளும் நடைபெற்றதாக ஆச்சிரமத்தின் பிரதம குரு கணபதி யோகி தெரிவித்தார். இந்த பூஜை வழிபாடுகளில் ஏராளமான பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 20 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

10 முதல் 13 வரை

சுபஹ்	05.04
லுஹர்	12.22
அஸர்	03.38
மஃரிப்	06.22
இஷா	07.32

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க ஒழுக்கமும் அர்ப்பணிப்பும் அவசியம்

தேசிய மாணவர் படையணியின் வர்ணம் சூட்டும் விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



ஒரு நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்பதற்கு ஒழுக்கமும் அர்ப்பணிப்பும் அவசியம் எனவும், ஒழுக்கமான சமூகத்தின் ஊடாக இலங்கையை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்வதற்கான திட்டங்களை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தேசிய மாணவர் படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் மற்றும் படையணி வர்ணம் வழங்கும் முகமாக நேற்று (19) ரன்தம்பே தேசிய மாணவர் படையணி பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி,

இன்று மக்கள் பொருளாதார ரீதியாக சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இது,ஒரு குறுகிய காலத்திற்கான சிரமங்களே! இந்த வருட இறுதிக்குள் நாட்டு மக்களின் பொருளாதாரத்தை சிறந்த நிலைக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.நாட்டில் வலுவான பொருளாதாரம் மற்றும் புதிய சமூகமொன்று உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் இளைஞர்களுக்காக உருவாக்கப்படும் புதிய சமூகத்துக்கு, ஒழுக்கமான தலைமைத்துவத்தை மாணவர் படையணி வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில்,142 வருட வரலாற்றைக் கொண்ட தேசிய மாணவர் படையணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதி வர்ணம் மற்றும் படையணி வர்ணம் என்பன சூட்டப்பட்டன.

ஜனாதிபதி மற்றும் படையணி வர்ணங்களை வழங்கிய பின்னர், மாணவர் படையணியின் அணி வகுப்பை ஜனாதிபதி கண்டுகளித்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், 06

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டாலும் வேட்புமனுக்கள் செல்லுபடியாகும்

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலை உரிய தினத்தில் நடத்த முடியாமல் போனாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் வாக்களிப்பு நடைபெறும் வரை செல்லுபடியாகுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும் இவ்வாறே நடத்தப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழுவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேநேரம், நிதி இல்லாத காரணத்தினால், உள்ளூராட்சித் தேர்தலை உறுதியளித்தவாறு நடத்த முடியாமல்போகும் நிலை ஏற்படுமென தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை உரிய வாறு நடத்த நடவடிக்கை எடுப்பதாக, தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் கடந்த (10) உறுதிப்பாட்டை வழங்கியிருந்தது.

எவ்வாறிருப்பினும், அந்த உறுதிமொழிக்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரையில் நிதி கிடைக்கவில்லையென மனு ஒன்றின் மூலம் உயர்நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்த தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

பௌத்த, பாலி பல்கலைக்கழகம் மீண்டும் இம்மாதம் 27இல், திறப்பு

பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தை எதிர்வரும் 27ஆம் திகதி மீண்டும் திறக்க பல்கலை நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இதனை மீண்டும் ஆரம்பிக்கும் போது, கல்வி நடவடிக்கைகளுக்காக மாணவர்களை அனுமதிக்கையில் மாணவர், பாதுகாவலருடன் வருகை தருவது கட்டாயமென பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நெலுவே சுமனவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இதன்படி முதலாம் ஆண்டு மாணவர்களே முதலில் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தற்காலிகமாக கலைக்கப்பட்டுள்ளதாகவும் உபவேந்தர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி முதல் பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ராகம ரயில் நிலையத்தில் கையடக்கத் தொலைபேசிகள் திருடி வந்தவர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

ராகம ரயில் நிலையத்தில் பயணிகளிடம் கையடக்கத் தொலைபேசிகளைத் திருடியவரை பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர்.

36 வயதுடைய மேற்படி சந்தேக நபர், ராகம தம்புவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் அவரிடமிருந்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான 10 கையடக்கத் தொலைபேசிகளை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் ராகம ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகளிடம் திருடியுள்ள 06

சிறுபோகத்தில் MOP உரத்தை 10,000 ரூபாவுக்கு வழங்க நடவடிக்கை

அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சிறுபோகத்திற்காக இம்முறை MOP உரம் 50 கிலோகிராம் கொண்ட மூடையொன்றை 10,000 ரூபாவாக குறைத்து விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, அமைச்சரின் பணிப்புரையின் கீழ் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக விவசாய அமைச்சின் அதிகாரிகள் அமைச்சரவைப் பத்திரமொன்றை தயாரித்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2022 / 2023 பெரும் போகத்திற்காக 42,000 மெற்றிக்தொன் MOP உரம் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு அந்தர் MOP உரத்தின் விலை 19,500 ரூபாவென்றும் இந்த உரத்தை கொள்வனவு செய்யும் போது உலகளவில் உரத்தின் விலை நடைமுறையிலிருந்ததற்கிணங்க அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதிகரித்த விலை காரணமாக பெரும்பாலான விவசாயிகள் அந்த உரத்தை கொள்வனவு செய்யவில்லை என்றும் அவர்,தெரிவித்துள்ளார்.

அந்த MOP உரத்தில் இதுவரை 3,000 மெற்றிக்தொன் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், முழு உரத் தொகையில் இது, 10 வீதமாக அமைவதாகவும் அதுவே இம்முறை வயல்களில் நெல் விளைச்சல் குறைவடைவதற்கு காரணமானதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற இராணுவ மேஜரின் வீட்டில் தங்க நகைகள் திருட்டு

வாழைச்சேனை, புணானையில் சம்பவம்

வாழைச்சேனை, புணானை பகுதியில், ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஒருவரின் வீட்டில், சுமார் 07 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 04 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.இதைத் திருடிய நபரை (18) பொலிஸார் கைது செய்தனர்.

இப்பிரதேசத்திலுள்ள ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் வீட்டில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் (25) வீட்டில் அனைவரும் இருந்த போது, இத்திருட்டு நிகழ்ந்தது. அங்கு வந்த நபரே, தங்கச் சங்கலி, காப்பு, தோடு என்பவற்றை திருடிச் சென்றுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு, இந்தக் கைது இடம்பெற்றது.

திருடப்பட்ட தங்க ஆபரணங்களை, நீர் கொழும்பிலிள்ள அடகுக் கடைகளில் அடகு வைத்து இவர்,05 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பெற்றுள்ளார். அடகு வைக்கப்பட்ட பொருட்களை கைப்பற்றுவதற்காக, நீதிமன்ற அனுமதியை பெறும், நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு

மின் குமிழ்களை இன்றிரவு அணைக்குமாறு கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்றிரவு 7.00 மணிக்கு அனைத்து மின் குமிழ்களையும் அணைக்குமாறு, பொது மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு நாட்டு மக்களைக் கேட்டுள்ளது.

பொது மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தேசிய ரீதியான ஏற்பாட்டாளர் அனுருத்த சோமதுங்க அதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்றைய தினம் இரவு 7.00 மணிக்கு வீடுகளில் மின் கட்டமைப்பின் டிப் சுவிச்களை முழுமையாக அணைத்துவிடுமாறும், அதேவேளை மின் விளக்குகள் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் உபகரணங்களை பாவிப்பதை நிறுத்துமாறும் அதன்மூலம் மின் கட்டமைப்பிலிருந்து நீங்கி செயற்படுமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

அனைவரும் இணைந்து ஒரு அடையாள பகிஷ்கரிப்பு நடவடிக்கை யாக இதனை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

அதிகரித்துள்ள மின் கட்டணத்தில் திருத்தங்களை ஏற்படுத்தி மீண்டும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 2 தினங்களாக நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுன நகரசபை முன்னாள் உறுப்பினர் ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெறுள்ளது. அத்துடன் அநுராதபுரம் வாராந்த சந்தைக்கருகிலும் மற்றும் சில பகுதிகளிலும் இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மோப்ப நாய் பிரிவின் உதவியுடன் நடவடிக்கை

போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு சென்ற 35 பேர் கைது

ஹற்றன் விசேட நிருபர்

சிவனொளிபாதமலைக்குச் சென்ற சுமார் 35 பேர் பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக ஹற்றன்.குற்றத்தடுப்பு பிரிவினர் சுற்றுலா பயணிகளை சோதனை செய்த போதே, இவர்கள் கைதாகினர்.

கைது செய்யப்பட்டவர்கள் தங்களது நண்பர்களுடனும் அயலவர்களுடனும் இணைந்து சிவனொளிபாதமலைக்கு வந்தவர்களாவர். இவர்கள் சுமார் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்டூவட் என்ற பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் (18) இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில், யட்டிபேரிய பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலே இவர்கள் கைதாகினர்.

கொழும்பு, ஹோமாகம, பொலன்னறுவை உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்தவர்களென்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களிடமிருந்து 50 கிராம் கேரள கஞ்சா, 120 கிராம் மதன மோதக லேகியம், 12 போதை மாத்திரைகள், 500 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், உள்ளிட்டவை மீட்கப்பட்டன. இவர்களை ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தோனேஷிய கடற்படை கப்பல்

நாளை செவ்வாய் மீண்டும் நாடு திரும்புகிறது

இந்தோனேஷியாவின் கடற்படைக் கப்பலொன்று உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கிரி.ரேடன் ஏடி மாடாடினடா 331 எனப்படும் கப்பல் நேற்று (19) இலங்கை கடற்படையினரால் சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்பட்டது. இந்த போர்க் கப்பல் 105.02 மீற்றர் நீளம் கொண்டது. 138 பேர் கொண்ட குழாமில் கட்டளை அதிகாரியாக கப்டன் நோப்ரியாடி எம் டியார் ஹன்லா பணியாற்றுவதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கப்பல் நாளை இலங்கையிலிருந்து புறப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்னு அஸுமத்தின் "நீ கூறுகிறாய் இறந்து விட்டாயாம் நீ" எனும் சிங்கள கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீடு நேற்று (19) ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு 7 சுவாமி விவேகானந்தா கலாச்சார நிலையத்தில் நடைபெற்றது. சுவாமி விவேகானந்தா கலாச்சார நிலையத்தில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில், நூலின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசீம் உமர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இருந்து பெறுவதையும் ஞானம் ஆசிரியர் டாக்டர் ஞான சேகரன், கவிஞர் மேமன் கவி மற்றும் நூலாசிரியரின் இப்னு அஸுமத் ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: இன்பாஸ் சலாவுதீன்)

தேர்தலை சீர்குலைக்கும் செயல்களுக்கு கண்டனம்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு

தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப்பட வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை சீர்குலைக்க, அரச அதிகாரிகள் அண்மைக்காலமாக மேற்கொண்ட முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அனைத்து தேர்தல்களும் மிகவும் முக்கியமானவையென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துயுள்ளது.

அரச நிதியை கையாள்வதாகக் கூறி கடந்த வாரங்களில் அரசாங்கம் எடுத்த பல தீர்மானங்கள், தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் விளைவை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கப்படுவதற்கு 06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	238.54	249.41
கனடியன் டொலர்	256.80	267.07
யூரோ	340.83	352.42
ஜப்பான் யென்	2.5659	2.6696
சிங்கப்பூர் டொலர்	239.52	248.06
ஸ்டேலிங் பவுன்ஸ்	423.68	438.67
சுவிஸ் பிராங்க்	344.01	357.45
அமெரிக்க டொலர்	322.72	334.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	831.93	கட்டார் ரியால்	85.92
குவைத் டினார்	1,028.76	சவூதி ரியால்	83.64
ஓமான் ரியால்	814.75	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	85.39

தினகரன்
THINAKARAN
திகைரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் மாசி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 26

குறள் தரும் சிந்தனை

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போலும் அளவுமோர் நோய்

சொந்தப் புத்தியும் இல்லாமல், சொல் புத்தியும் கேட்காதவருக்கு அதுவே அவர் வாழ்நாள் முழுதும் அவரை விட்டு நீங்காத நோயாகும்.

டெங்கு அச்சுறுத்தல் அதிகரிப்பதால் மக்கள் மத்தியில் அவதானம் தேவை

இலங்கையில் டெங்கு நோய்க்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை கடந்த ஜனவரியில் அதிகரித்துக் காணப்பட்ட அதேநேரம், பெப்ரவரி மாதத்திலும் இதே நிலைமை நீடிப்பதை சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இப்பிரிவின் தரவுகளின்படி, இந்நாட்டில் கடந்த வருடம் (2022) டிசம்பர் மாதம் டெங்கு நோய்க்கு 7912 பேர் உள்ளானவர்களாகப் பதிவாகினர். அவர்களில் கொழும்பு, கம்பஹா, புத்தளம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தலா ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளாகியுள்ளனர். ஏனைய மாவட்டங்களிலும் இந்நோய்க்கு உள்ளானவர்கள் பதிவாகி இருக்கின்றனர். கடந்த டிசம்பரில் 7,912 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாகப் பதிவான போதிலும், முழு வருடத்திலும் 66,604 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதமும் மழையுடன் கூடிய காலநிலை நிலவியதால்தான் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜனவரி மாதத்திலும் 6,763 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் கொழும்பு, கம்பஹா, புத்தளம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தலா ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர். அத்தோடு இம்மாதமும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்க முடிகிறது.

டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதற்கு மழையுடன் கூடிய காலநிலையே காரணமாகும். டெங்கு வைரஸை பரப்பும் நுளம்புகள் மழைநீர் தேங்கும் பொலித்தீன் உறைகள், யோகட் கப்கள், சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள், உள்ளிட்ட சுற்றுசூழலில் காணப்படும் மழைநீர் தேங்கக்கூடிய திணமக்கழிவுப் பொருட்களில்தான் பல்கிப்பெரும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. இந்நுளம்புகள்தான் இவ்வைரஸை பரப்பக் கூடியனவாக உள்ளன.

அதனால் இவ்வைரஸைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்துக் கொள்வது அவசியம். அதன் ஊடாக இவ்வின நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டு நிலையில் பேணிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அப்போது டெங்கு நோய் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கப் போவதில்லை.

இருந்த போதிலும், சுற்றுச்சூழலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருப்பதில் பெரும்பாலானவர்கள உரிய கவனம் செலுத்தத் தவறி விடுகின்றனர். அதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் இவ்வின நுளம்புகள் மழைநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகி டெங்கு வைரஸை பரப்பி மக்களைப் பாதிக்கின்றன. சிலருக்கு உயிராபத்து அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி விடுகின்றன.

ஆனால் இந்நோயை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் கண்டு உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளும் போது நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். தற்போது நாட்டில் டெங்கு மாத்திரமல்லாமல் வேறு பல நோய்களும் காணப்படுகின்றன. அந்நோய்களுக்கும் காய்ச்சல் பிரதான அறிகுறியாக உள்ளது. அதனால் காய்ச்சல் என்றதும் சாதாரண ஒரு காய்ச்சலாக இருக்கலாம் எனக் கருதும் மனநிலை பரவலாகக் காணப்படுகிறது. இது முற்றிலும் பிழையானதும் தவறானதுமான பார்வையாகும்.

காய்ச்சல் என்றதும் தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதன் ஊடாக டெங்கு நோய்க்கு உரிய சிகிச்சையைப் பெற்று நோயைக் குணப்படுத்திக் கொள்ள முடியும். இதைவிடுத்து டெங்கு நோய்க்கு உரிய நேர காலத்தில் சிகிச்சை அளிக்கத் தவறும்பட்சத்தில்தான் அது உயிராபத்து அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்து விடுகிறது.

அண்மையில் ஏறாவூரில் ஒருவர் டெங்கு நோய் காரணமாக துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளார். இன்றைய காலகட்டத்தில் காய்ச்சல் என்பதை சாதாரண நோய் அறிகுறியாகக் கருதலாகாது. அந்த அறிகுறி தொடர்பில் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும். உரிய மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்று நோயைக் குணப்படுத்திக் கொள்வதில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். அப்போது டெங்கு ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கப் போவதில்லை. அத்தோடு சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையுடனும் வைத்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தும் போது டெங்கு வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் பெருகவும் வாய்ப்பும் இருக்காது. அப்போது இவ்வைரஸ் நோய்க்கு உள்ளாவதையும் அதன் உயிராபத்து அச்சுறுத்தலுக்கு முகம்கொடுப்பதையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

உலக வங்கி நிதியுதவி -PSSP திட்ட பணிப்பாளர் குழுவினர் திருகோணமலைக்கு திடீர் விஜயம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்ப சுகாதாரப் பிரிவினை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக PSSP திட்டக்குழுவினர் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

PSSP என்றழைக்கப்படும் ஆரம்ப சுகாதாரப் பிரிவினை வலுவூட்டும் திட்டக் குழுவினர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார பிரிவினை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் 19 வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான சிறுநீரகப் பரிசோதனை,குருதி அமுத்தம், இருதயநோய் மற்றும் ஏனைய இரத்த பரிசோதனைகளை பரிசோதித்து தொற்றா நோய்களைக் கண்டறிந்து எதிர்காலத்தில் நோயற்ற சமூகமாக மாற்ற வேண்டும் என்ற நோக்குடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டத்தினை நேரடியாக பார்வையிடுவதற்காக அத்திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் ஜயசுந்தர பண்டார மற்றும் அவரது குழுவினர் இரு தினங்களுக்கு முன்னர் களவிஜயமொன்றை மேற்கொண்டனர்.

இத்திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று 35 வயதுக்கு மேற்பட்டவர்களின் இரத்த மாதிரிகளைப் பெற்று குறித்த மாதிரிகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் கரிசனை காட்டி நோயாளர்களை நோய்த் தாக்கங்களிலிருந்து குறைப்பதற்காகவே இத்திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அக்குழுவினர் தெரிவித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மக்களுக்கு இத்திட்டத்தின் ஊடாக தொடர்ச்சியான சேவைகளை வழங்க வேண்டும் எனவும், திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார். இக்கள விஜயத்தின் போது கிழக்கு மாகாண திட்டமிடல் மருத்துவ அதிகாரி டொக்டர் வீ. குகன், டொக்டர் கோகுலன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அப்துல்சலாம் யாசீம்
(ரொட்டவெவ குறூப் நிருபர்)

வடஇந்தியாவின் முதலாவது அணுமின்நிலையம் ஹரியானாவில்

வடஇந்தியாவின் முதலாவது அணுமின் நிலையம், தலைநகர் டெல்லிக்கு வடக்கேசுமார்150கிலோ மீட்டர் தொலைவில் ஹரியானாவில் உள்ள கோரக்பூரில் அமைக்கப்படுகிறது. மத்திய அணுசக்தித் துறை இணை அமைச்சர் டொக்டர் ஜிதேந்திர சிங், ஹரியானா அணுமின் நிலையம் தொடர்பாக கூறுகையில் , முன்பு பெரும்பாலும் தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் அல்லது நாட்டின் மேற்குப் பகுதியான மகாராஷ்டிரா போன்ற இடங்களில் மட்டுமே அணுமின் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவின் அணுசக்தித் திறனை அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், கடந்த 8 ஆண்டுகளில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. 10 அணு உலைகளை நிறுவுவதற்கு ஒரே நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றார்.

இந்தியாவில் நாளுக்குநாள் மின்சாரத்தின் தேவை அதிகரித்து வருகின்ற போதிலும், அந்நாடு பல்வேறு வழிகள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றது. இதன் காரணமாக இந்தியாவில் மின்சாரப் பற்றாக்குறை நிலவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிக்கான பாதையை கண்டறிய உதவும் EDEX EXPO கண்காட்சி

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பின்னர் தங்கள் தகுதிகளை மேம்படுத்தி வேலை தேட திட்டமிடுவோர், அதற்கான அனைத்துத் தெரிவுகள், விருப்பங்கள், வாய்ப்புகளை அறிந்து கொள்ள EDEX Expo 2023 ஐப் பார்வையிட வேண்டும். கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் (SLECC) பெப்ரவரி 24_ 26 வரையும், மார்ச் 04, 05 ஆம் திகதிகளில் கண்டியில் உள்ள கண்டி சிட்டி சென்டரிலும் (KCC) இக்கண்காட்சிகள் நடைபெறுகின்றன.

EDEX என்பது இலங்கையின் மிகப் பெரிய, முன்னணி உயர்கல்விக் கண்காட்சி மற்றும் வேலைவாய்ப்பு கண்காட்சியாகும். இது இலங்கையில் உள்ள முன்னணி உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல முக்கிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மூலம் வழங்கப்படும் பல்வேறு தெரிவுகள் மற்றும் வாய்ப்புகளை (தரம் மற்றும் அளவு ஆகிய இரண்டிலும்) கொண்டதாகும். சுமார் இரண்டு தசாப்தங்களாக "Empowering the Sri Lankan Youth to be Globally Competitive" (இலங்கை இளைஞர்களை உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை மிக்கவர்களாக ஆக்குதல்) எனும் அதன் வாக்குறுதியை EDEX நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில் அது தனது 19ஆவது பதிப்பை 2023 இல் கொண்டாடுகிறது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட EDEX தலைவர் மஹிந்த கலகெதர, "தனது புத்தாக்கமான மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஒன்லைன் கல்விக் கண்காட்சியை அறிமுகப்படுத்தியதன் மூலம், கொவிட்19 தொற்று மற்றும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் உள்ளூர் இளைஞர்களுக்கு டிஜிட்டல் நிகழ்வு அனுபவத்தை EDEX வழங்கியது. அந்த வகையில், 2022 மார்ச் மாதம் இலங்கையில் முதன்முறையாக ஒரு ஹைப்ரிட் கண்காட்சி மூலம் தனது இருப்பை EDEX வெளிப்படுத்தியது" என்றார்.

இவ்வருடம் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் (SLECC) நடைபெறும் EDEX Expo கண்காட்சி, மீண்டும் ஒரு முறை உள்நாட்டு மற்றும் அவுஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ், துபாய், பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் உள்ளடங்கிய பாரிய அளவிலான உயர்கல்வி நிறுவனங்களை கொண்டிருக்கும். EDEX Expo 2023 கண்காட்சியில் பிரத்தியேகமாக அனைத்து சாத்தியமான பங்கேற்பாளர்களுக்கும் 1,000 இற்கும் மேற்பட்ட புலமைப்பரிசில் உள்ளிட்ட பல்வேறு நன்மைத் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன.

EDEX Entrepreneurship தொழில் முனைவோர் பிரிவினால், EDEX Expo 2023 உடன் இணைந்ததாக 'Entrepreneurs Club' (தொழில்முனைவோர் கழகம்) இனை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதில் கேமிங் வலயம் மற்றும் நாடு முழுவதும் உள்ள கிராமப்புற பாடசாலைகளில் தேவையுள்ள மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கும் 'நென பஹன' காட்சிக் கூடம் உள்ளிட்ட பல்வேறு தனித்துவமான மற்றும் அற்புதமான அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

EDEX Think Green இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Sustainability Quiz (நிலைபேறான கேள்வி பதில்) போட்டியையும், EDEX Sithuwam சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வுகளையும் EDEX Expo 2023 கண்காட்சியில் நீங்கள் காணலாம்.

வீட்டு மின்கட்டணத்தைக் குறைப்பதற்கு உதவும் MEP சக்தித்திறன் கொண்ட குளிர்சாதன பெட்டிகள்

வீடுகளின் மின்சாரக் கட்டணத்தில் மிகப்பெரிய செலவாக அமைவது குளிர்சாதனப்பெட்டியாகும். குளிர்சாதனப்பெட்டி முதிர்ச்சியடையும் போது இந்த விளைவு அதிகமாகக் காணப்படும். குறிப்பாக பத்து வருட காலத்தை நிறைவு செய்த பின்னர் இச்செலவு அதிகரிக்கும். இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (SLSEA) முன்னோடி குளிர்சாதனப் பெட்டி மாற்றுத் திட்டத்தை 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி BMICH இல் ஆரம்பித்தது.

அதே நேரத்தில், மூன்று பெரிய உபகரண விற்பனையாளர்களால் வழங்கப்படும் 15 மாதிரி குளிர்சாதனப் பெட்டிகளுக்கு குறைந்தபட்ச சக்தி செயல்திறன் (MEP) பெயரிடல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது வாடிக்கையாளர்கள் தங்கள் அடுத்த கொள்வனவின் போது திறமையான மாதிரியைத் தேர்ந்தெடுக்க வழியமைக்கிறது. குளிர்சாதனப் பெட்டி விநியோகத்தர்களை தன்னார்வ முறையில் சக்தி பெயரிடல் திட்டத்தில் சேர ஊக்குவிப்பதற்காகவும், பொது மக்களிடையே குளிர்சாதனப் பெட்டிகளுக்கான MEP பெயரிடல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த வெளியீடு நடத்தப்பட்டது.

உபகரணங்களின் சக்தி பெயரிடல் திட்டம் SLSEA ஆல் நடத்தப்படும் முக்கிய திட்டங்களில் ஒன்றாகும். இந்தத் திட்டத்தின் நோக்கம், சக்தி திறன் கொண்ட தயாரிப்புகளை சந்தையில் நிறைவாக காணப்படுவதை ஊக்குவிப்பதன் மூலம் சாதனங்களின் சக்தி நுகர்வை படிப்படியாகக் குறைப்பதாகும். அதே நேரத்தில் சக்தி விரயம் செய்யும் பொருட்கள் சந்தையில் நுழைவதைத் தடுக்கிறது.

தற்போது LED விளக்குகள், கணினிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் சக்தி திறன் மற்றும் தொடர்புடைய தகவல்களை வழங்கும் அங்கீகார வகை பெயரிடல்களை கொண்டுள்ளன. அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச சக்தி திறன் மதிப்புக்கு மேல் சக்தி திறன் கொண்ட தயாரிப்புகள் மட்டுமே பெயரிடல்களைக் காட்ட அனுமதிக்கப்படுகின்றன. எனவே இது 'குறைந்தபட்ச சக்தி திறன் (MEP)' பெயரிடல் என அழைக்கப்படுகிறது. MEP பெயரிடல்களுக்கு சந்தை மாற்றியமைத்த பிறகு, நட்சத்திர மதிப்பீடுகளுடன் சக்தி பெயரிடல்கள் படிப்படியாக இந்த சாதனங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும். குளிர்சாதனப் பெட்டிகளில் MEP பெயரிடல்களைக் காட்சிப்படுத்துவது இந்த ஆண்டுக்குள் இது கட்டாயமாக்கப்படும்.

வீட்டு மின்சாரம் பயன்படுத்துபவர்கள், MEP சக்தி பெயரிடல்களுடன் கூடிய திறமையான குளிர்சாதனப் பெட்டிகளை வாங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். இது அவர்களது சொந்த மின்சாரக் கட்டணத்தையும், நாட்டின் எரிபொருள் இறக்குமதிச் செலவையும் குறைக்க உதவும்.

இந்த முன்னோடித் திட்டம் 1,000 பழைய குளிர்சாதனப் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய MEP இணக்கமான மற்றும் சக்தி திறன் கொண்ட குளிர்சாதனப்பெட்டிகளை மேல் மாகாணத்தில் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு 480,000 kWh மின்சாரம் சேமிக்கப்படுகிறது.

முன்னோடித் திட்டம் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்குள் 500,000 அலகுகளை அகற்றி, 500GWh மின்சாரத்தை (தேசிய மின்சார பயன்பாட்டில் சுமார் 3%) சேமிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாசி 'மகம்'

மாதங்களில் மகத்தான மாதம் மாசி மாதம். மாசி மாதத்தில் நாம் செய்யும் எந்த காரியமும் இரட்டிப்பு பலன்கள் தரும். எல்லா மாதங்களிலும் 'மகம்' நட்சத்திரம் வந்தாலும், மாசி மாதம் வரும் மகம் நட்சத்திரமே சிறப்புக்குரியதாக திகழ்கிறது. அன்றைய தினம் விரதம் இருந்தால் மறுபிறவி கிடையாது என்று புராணங்கள் சொல்கின்றன.

மக நட்சத்திரம் பெருமாளுக்கும் உகந்த நாள். நீர் நிலை உள்ள இடங்களில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெறுவது வழக்கம். இதற்குக் காரணமானவர் புண்டரீக மகரிஷிதான்.

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பெருமாளின் காலடியில் அன்றலர்ந்த தாமரை மலரை வைத்து வணங்க வேண்டும் என்ற ஆவலில் புண்டரீக மகரிஷி, மாமல்லை கடற்கரையில் மலரை வைத்துவிட்டு, பாற்கடலுக்கு வழி ஏற்பாடு

செய்ய முயற்சித்தார். அதற்காக கடல்நீரை தொடர்ந்து இரைத்துக் கொண்டிருந்தார். இவரின் தளரா முயற்சியையும் தாளாத பக்தியையும் கண்ட திருமால் ஒரு முதியவராக உருக்கொண்டு முனிவரிடம் வந்து, எனக்கு பசியும் களைப்புமாக உள்ளது. ஊருக்குள் சென்று உணவு வாங்கி வாருங்கள். அதுவரை நானே கடல்நீரை உமக்காக இரைக்கிறேன் என்று அனுப்பினார். முனிவரும் உணவு வாங்கிவந்து பார்த்தபோது கடல் உள்வாங்கி இருந்தது. முதியவரைக் காணோம். அப்போது ஒரு குரல் கேட்டது. முனிவர் அவ்விடத்தைப் பார்க்க, தான் வைத்த மலரை பாதங்களில் வைத்துக் கொண்டு திருமால் தரையில் பள்ளிகொண்டு ரிஷிக்கு காட்சி தந்தார். ஸ்ரீமன் நாராயணனே தன் திருக்கரத்தால் நீர் இரைத்த இந்த அர்த்தசேது கடலில் மகத்தன்று நீராடுவது பெரும் புண்ணியம்.

உமா தேவியார் மாசி மாதம் மக நட்சத்திரத்தில்தான் தட்சணின் மகள் தாட்சாயணியாக அவதரித்தார் என்பதால் மிகவும் புண்ணிய நாளாக கருதப்படுகிறது. பெண்களுக்குரிய விரத தினமாகவும் போற்றப்படுகிறது. பாதாளத்தில் இருந்த பூமியை பெருமாள் வராக அவதாரம் எடுத்து வெளிகொணர்ந்த நாளும் மாசி மகத்தன்றுதான்.

சோமசுந்தரக்குருக்களின் அமுதவிழா நிகழ்வு

இலங்கையின் மூத்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்க ளின் 80 ஆவது அகவை நிறைவையொட்டி அமுதவிழா நிகழ்வு (09.02.2023) அவரது குலதெய்வக்கோவிலான மட்டுவில் நெல்லியடி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. மட்டுவில் சரசாலை கல்வயல் என குருக்கள் தொடர்பு கொண்டிருந்த கிராமங்கள் பற்றிய அவரது பார்வையை உள்ளடக்கியதாக நாமும் நமது ஊர்களும் என்ற நூல் வெளியிடப்பட்டது. நிகழ்வில் குருக்களின் நெருங்கிய உறவினர்களும் அவரது பத்தியால் பயன்பெற்ற சரசாலை மட்டுவில் கல்வயல் கிராம ஆலயங்களின் பரிபாலகர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மூத்த மருத்துவர் லயன் அருளானந்தம் வாழ்த்துரை வழங்கினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார்.

குருக்கள் தற்போது தனது மகளுடன் கொழும்பில் வாழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19501) எவற்றை கையால் பரிமாறக் கூடாது?
அன்னம், உப்பு, நெய்

19502) கையால் பரிமாறப்பட்ட அன்னம், உப்பு, நெய் இவை எதற்கு சமம்?
கோ மாமிசத்துக்கு சமம்

19503) பெண்கள் வளையல் அணியாமல் எதையும் பரிமாறலாமா?
பரிமாறக் கூடாது.

19504) எப்போது எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது?
அமாவாசையன்று

19505) வெள்ளிக்கிழமை உப்பு வாங்கினால் என்ன நடக்கும்?
நன்மை உண்டாகும்

19506) இரவில் வீட்டைப் பெருக்கினால் என்ன செய்ய கூடாது?
குப்பையை வெளியே கொட்டக் கூடாது.

19507) பகலில் குப்பையை என்ன செய்யக் கூடாது?
வீட்டினுள் எந்த மூலையிலும் குவித்து வைக்கக் கூடாது.

19508) மங்கையர்கள் நெற்றிக்கு எது இன்றி ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது?
குங்குமம் இடாமல்

19509) விளக்கு ஏற்றிய பிறகு எதையெல்லாம் பிறர்க்குக் கொடுக்கக் கூடாது.?
பால், தயிர், உப்பு, ஊசி

புவக்பிட்டிய ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கலைவாணி அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது

மானுடவியல் (தொடர்)

சண்டேசுவர நாயனார்

105

அதனாலேயே எல்லாச் சிவாலயங்களிலும் சண்டிகேசுவரருக்கு என தனித் திருமுன் அமைக்கப்படுகின்றன. அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராக கருதப்படும் இவரது பெருமையை சமயகுரவர் நால்வரும் போற்றிப் பாடியுள்ளனர். மேலே கூறிய வரலாற்றை மிக எளிதாக நான்கு வரிகளில் சம்பந்தர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

வந்த மணலால் இலிங்கம் மண்ணியின் கண்
பாலாட்டும்
சிந்த செய்வேன் தன்கருமம் தேர்ந்து சிதைப்பான்
வருமத்
தந்தைதனைச் சாடுதலும் சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர் கொடுத்தான் கோளிலி எம்பெருமானே"
(திருமுறை: 1: 62: 4)

சண்டீச பதவி கொடுத்து தன் தலைக் கண்ணியான கொன்றை மலர்மாலையையும் இறைவன் சூடினான் என்னும் ஞான சம்பந்தரின் கூற்றை நாம் நேரில் பார்ப்பதற்கு கங்கைகொண்ட சோழ புரத்திலுள்ள சோழீசுவரர் கோயிலுக்குச் செல்ல வேண்டும். இந்த ஞானக் கவிதைக்கு ஏற்ற மோனச்சிலை அங்கு இருக்கின்றது. உண்மையான பக்தன் எப்படி இருக்க வேண்டும் என்பதனை சண்டேசுவரர் முகத்தில் காணப்படும் அமைதியும் பக்தி கலந்த அடக்கமும், இருகரம் கூப்பி இருக்கும் நிலையும் எடுத்துக் காட்டுகின்றன. சிவன் கருணை வழிந்தொழுக சண்டேசுவரருக்கு மாலை அணிவித்து அருள் பாலிக்கின்றார். மலர் மாலையில் உள்ள ஒவ்வொரு மலரின் இதழும் புதுமலர் போல் பொலிய சிற்பி தன் கைவண்ணத்தைக் காட்டி இருக்கின்றான். பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் இந்த மோனச் சிலையை சிற்பி, சம்பந்தரின் தேவாரத்தை பாடி இரசித்தே படைத்திருப்பான் போல் இருக்கின்றது.

ஞானசம்பந்தர் மட்டுமல்ல சுந்தரரும் "சண்டிக்கு உன்சடைமிசை மலர்அருள் செயக்கண்டு" தான் சிவனை வணங்குவதாகக் கூறியுள்ளார்.

"தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம்" (திருமுறை: 8: 15: 7)

என மணிவாசகரும் சண்டேசுவரருக்கு சிவன் அருள் புரிந்ததை திருவாசகத்தில் பாடிப் பரவசப்பட்டுள்ளார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

சைவ மஞ்சரி

"யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 27

உறுதியில்லாத மனிதன் பிறரைச் சார்ந்தே இருப்பான். தன் புத்தியையும் நம்ப மாட்டான்; தன் முடிவிலும் நிலையாக இருக்க மாட்டான். உறுதியான நிலைப்பாடு இல்லாமலும். ஒருமுகப் படுத்திய மனநிலைமை இல்லாமையினாலும் மனிதன் பலவிதமான இன்னலுக்கு ஆளாகிறான். இதனால், தன் ஆற்றல் முழுவதையும் இழக்கிறான். எந்த ஒரு செயலிலும் வெற்றியடைய, ஒருமுகப் படுத்தப்பட்ட ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

வெற்றி அடைவதில் உறுதி கொள்ள வேண்டும். தெளிவான ஒரு முடிவு எடுத்த பின் அதை நிறைவேற்றுவதில் நம் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். எந்த ஒரு செயலையும் முடிவெடுப்பதற்கு முன் தனது நலம் விரும்பிகள். நண்பர்கள். அறிவு ஜீவிகள் என் பலரிடமும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆலோசிக்கலாம். ஆனால் முடிவெடுத்த பின்னர், தயங்காமல் அச்செயலை முடித்து வெற்றி காண்பது ஒன்றே தன் முழு மூச்சாகக் கொள்ள வேண்டும். தனது தகுதி. தன்னுடைய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தன்னம்பிக்கையுடன் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தாம் மேற்கொண்ட செயல்களை துணிச்சலுடனும், கொள்கை உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும். ஆண்மையுடனும் கடமையாகும். அதன் பலனை ஆண்டவனிடத்தில் விட்டு விட செயல்படுத்துவது மட்டுமே நம் வேண்டும். கடவுள் நிச்சயம் நமக்கு முன்னேற்றத்தை தருவார். நாம் விரும்பிய வாழ்க்கையை நமக்குத் தருவார்.

சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வது என்பது. மனித வாழ்க்கைக்கு உகந்தது ஆகாது. சுயநலத்துடன் பிறந்து, சுயநலத்துடன் வளர்ந்து, தான் மட்டுமே உண்டு. உடுத்தி வாழ்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றது போல் தெரிந்தாலும், உண்மையில் அவன் தோற்றுப் போனவனே ஆவான்.

மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே. இப்படைப்பின் நோக்கமாகும். நீர்கடலிருந்து நீராவியாகி, மழை தரும் மேகம் உருமாறி தவித்த பூமிக்கு மழையாக பொழிந்து, பிறர் நலம் பேணுகிறது. பூமியில் பெய்த மழைநீர் நதிகளாகி, கடலின் மகத்துவத்தை உணர்ந்து அதனுடன் சங்கமிக்கின்றன. மற்றவர்களை இன்பமூட்டவே காற்றும் செயலாற்றுகிறது. சூரியன். சந்திரன். நக்ஷத்திரங்கள் அல்லும் பகலும் ஒளிவீசுவதும் தனக்காக அல்ல: பிறருக்காக இவ்வாறு இயற்கைகள் யாவும், பிறர் நலம் பேணும் போது மனிதன் மட்டும் சுயநலத்துடன் செயல்படுவது தகுமா? (தொடரும்)

தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்தில் மஹா சிவராத்திரி விரத சிறப்பு

தேற்றாத்தீவு

மஹா சிவராத்திரி விரத சிறப்பு நிகழ்வுகள் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் சனிக்கிழமை (18) காலை முதல் சிறப்பாக நடைபெற்றது.

கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு சித்தர்களால் நர்மதா நதிக் கரையில் இருந்து கொண்டு வரப்பட்டுபிரதிஸ்டை பண்ணப்பட்டிருக்கும் உயிர் லிங்கத்திற்கு அடியார்கள் ஆலய புனித கங்கையாகிய பாலாறு 'பால புஸ்கரணி' தீர்த்தக்கங்கையில் தீர்த்த நீர் எடுத்துவந்து தங்கள் கைகளினால் அபிஷேகம் பண்ணும் சிறப்பு நிகழ்வு காலை தொடக்கம் நள்ளிரவு வரை இடம் பெற்றது.

இதன் போது தங்களது ராசிகளுக்குரிய அபிஷேக திரவியங்களாலும் அபிஷேகம் பண்ணுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு இருந்தன.

மேலும் ஆலயத்தில் நான்கு சாமப் பூஜைகளும் லிங்கோற்பவர் காலத்தில் ஏகாதச ருத்ர மஹா வேள்வியும் இடம்பெற்றிருந்தது.

மாலை 6 மணி தொடக்கம் அதிகாலைவரை பஜனை, சங்கீதக்கச்சரி, நடனம், தாப்பிரசங்கம் சமய பேருரைகள் என்பன இடம்பெற்றன.

அத்துடன் 2005 ஆண்டுகல்விப் பொதுதராதர சாதாரண தர மாணவர்களின் ஏற்பாட்டில் 10 அடி உயரமான தென்னை ஓலையால் வடிவமைக்கப்பட்ட சிவலிங்கம் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது.

உடப்பு சின்னக்கொலனி தாழையடி ஸ்ரீகருமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகா சிவராத்திரி தின நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (19) அம்பாளின் தீர்த்த உற்சவம் நடைபெற்றது. இதன்போது பக்தர்கள் பலர் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.
உடப்பு குறூப் நிருபர்

கல்வியற் கல்லூரி நேர்முகத் தேர்வு தொடர்பான அறிவுறுத்தல்

(கொட்டகலை தினகரன் நிருபர்)

2019 மற்றும் 2020 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான பயிலுனர்களை உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வு தொடர்பான மேன்முறையீடுகள் 2023 பெப்ரவரி 28ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட உள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேல்முறையீடு செய்ய விரும்பும் மாணவர்கள், சம்பந்தப்பட்ட ஆண்டின் உயர்தர பரீட்சையின் பாடத்திட்டம் புதியதா அல்லது பழையதா, பரீட்சை சுட்டெண் மற்றும் நிலை (இசட் மதிப்பெண்ணுடன்), மேன்முறையீட்டுக்கான காரணம், விண்ணப்பதாரியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண், விண்ணப்பத்தின் கடித நகல், இயக்குநர் கல்வி (கல்வி கிளை), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 28 பெப்ரவரி 2023 க்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என அறிவிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால...

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பான விடயங்களை தென்னிலங்கையின் அரசியல் தரப்புக்கள் கடந்த காலங்களில் கையாண்ட அனுபவங்களின் அடிப்படையில், தற்போது தமிழ் தரப்புக்களின் அணுகுமுறைகள் அமைய வேண்டும்.

இல்லையேல், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போகுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இதனிடையே, அரசியல் ஆதாயங்களுக்காக ஒரு சிலர் வெளியிடுகின்ற கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்பதுடன், அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் முயற்சிகளுக்கும் தடங்கல்களை ஏற்படுத்தும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது பலதரப்பட்டவர்களுடனான சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்தை... 03ஆம் பக்க தொடர்...

மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு கமகே, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன, கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, தேசிய மாணவர் படையணிப் பணிப்பாளர் பிரிகேடியர் சுதந்த பொன்சேக்கா உள்ளிட்டோர் இந்தநிகழ்வில் கலந்துகொண்டனர்.

தேர்தலை சீர்குலைக்கும்... 03ஆம் பக்க தொடர்...

முன், அதற்கான நிதியை விடுவிக்குமாறு அரசஅச்சகம் விடுத்த கோரிக்கை மற்றும் தேர்தலுக்குப் பணம் இல்லையென திறைசேறி செயலாளர் கூறியமையும் இவற்றுள் அடங்குவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த சில வாரங்களாக திறைசேரி செயலாளர், அரச அச்சகர் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் நடவடிக்கைகள், தேர்தலை நிறுத்துவதற்கான முயற்சிகளாக அமைந்தமை தெளிவாக புலப்படுவதாகவும், அதனூடாக மக்களின் வாக்குரிமை நகைப்புக்குட்படுத்தப்படுவதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ராகம ரயில் நிலையத்தில்... 03ஆம் பக்க தொடர்...

கையடக்கத் தொலைபேசிகளை மாளிகாவத்தை பிரதேசத்தில் விற்பனை செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். அது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள விரும்புவோர் ராகம பொலிஸ் நிலையத்தில் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புத்திக ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நகைச்சுவை நடிகர்...

சிவராத்திரி தினத்தன்று இரவு நடிகர் மயில்சாமி சிவன் கோயிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு வீடு திரும்பியபோது, மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவந்த அவர், நேற்று ஞாயிற்றுக்கிழமை 75 வயதில் காலமானார். இந்த தகவலை மயில்சாமியின் மகன் அருமைநாயகம் (அன்பு) உறுதிப்படுத்தியுள்ளார்.

பல்வேறு படங்களில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் மயில்சாமி நடித்துள்ளார். தமிழில் படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்து பிரபலமானவர், நடிகர் மயில்சாமி.

1965 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி தமிழ்நாடு, ஈரோடு சத்தியமங்களத்தில் பிறந்த மயில்சாமி 1984 ஆம் ஆண்டு முதல் திரைப்படங்களுக்குள் பிரவேசித்தார்.

அருமைநாயகம் என்ற அவரது மகனை அன்பு என்ற பெயரில் சினிமாவுக்கு அறிமுகம் செய்துள்ளார். 2004 ஆம் ஆண்டு கண்களால் கைது செய் என்ற திரைப்படத்தில் சிறந்த நகைச்சுவை நடிகன் என்ற தமிழ் நாடு மாநில விருது அவருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நகைச்சுவை நடிகன், சிறந்த குணச்சித்திர நடிகன் என்பதையும் தாண்டி அவர் ஒரு சிறந்த மனிதர் என்பதே உண்மையென்றும் திரைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பறவைகள் பூங்காவுடன்...

(20) ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த பூங்கா வரும் (23) முதல் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படும்.

ஹந்தானை தேயிலை அருங்காட்சியக வளாகத்துக்கருகில் அமைந்துள்ள இந்த 27 ஏக்கர், புலம்பெயர் பறவை பூங்கா மற்றும் சுற்றாடல் சுற்றுலா வலயம் நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த பறவைகளின் இருப்பிடமாக உள்ளது.

வெளிநாடுகளுக்குச் சொந்தமான பறவைகள், புலம்பெயர் பறவைகள் போன்றவற்றை உள்ளடக்கிய பூங்காவில், காயமடைந்த பறவைகளுக்கு சிகிச்சை அளித்து விடுவிக்கும் பிரிவும் உள்ளது.

490 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள இந்த பறவை பூங்காவில் வெளிநாட்டு பறவைகள் பெரிய கூண்டுகளில் அடைத்து வைக்கபட்பட்டுள்ளன. அவற்றை பராமரிக்கும் பணிகளுக்கு சுமார் நூறு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த பூங்கா 40 வருட காலப்பகுதியில் இலங்கைக்கு சொந்தமான பறவைகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக புலம்பெயர்ந்த பறவைகளை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

விலங்கியல் மாணவர்களுக்கான கல்வி பயிற்சி நிலையம், பறவை காப்பகம், பறவைகள் தங்குமிடம் மற்றும் ஒரு தனிமைப்படுத்தல் பிரிவு என்பனவும் உள்ளன.

இந்த பூங்காவில் வெளிநாட்டு பறவைகளை இனப்பெருக்கம் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான அலகும், பாடசாலை மாணவர்களுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு மையம் மற்றும் இயற்கை பறவைகள் ஆய்வு மையம் என்பனவும் உள்ளன.

நாடு அராஜகங்களுக்குள்...

(18) நடைபெற்ற இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய ரொட்டரி கழகத்தின், மாவட்ட இலக்கம் 3,220 ஏற்பாடு செய்த 32 ஆவது ரொட்டரி மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி,

நாட்டின் பொருளாதாரம் விரைவில் வழமைக்குத் திரும்பும். ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு, சமூகங்கள் கட்டியெழுப்பப்படும்.

நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை தீர்த்துவிட்டால், மக்கள் துன்பப்படுவதற்கு இடமிருக்காது. இதற்கான சகல தீர்மானங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளும்.

ஜனநாயகத்தை உச்சளவில் மதிக்கும் தலைவர் நான். ஆனால் ஜனநாயகத்துக்கு முதலில் பொது அமைதி தேவை. இதற்குச் சட்டம் ஒழுங்கை பேணுவது அவசியம்.

சட்டம் ஒழுங்கு இல்லாமல், ஜஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்க முடியாது.

பொருளாதாரத்தை மீட்டெடுத்த பின்னர், அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

போலியோ தடுப்புப் பிரசாரம், சுனாமி மற்றும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி போன்றவற்றுக்கு இப்போது, முகம்கொடுக்க நேரிட்டது. இந்த நெருக்கடிகளின் போது ரொட்டரி கழகம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை பாராட்டுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாநாட்டின் தலைவரும் ரொட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான அனீஷா தர்மதாச, இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய 3220 மாவட்டத்தின் ஆளுநர் புபுது செய்சா, மாவட்ட ஆலோசகரும் முன்னாள் தலைவருமான பிரதீப் அமிர்தநாயகம் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

இந்நிகழ்வில், சர்வதேச ரொட்டரி தலைவர் திருமதி ஜெனிபர் ஜோன்ஸின் பிரதிநிதியான திருமதி வலேரி வேஃபர், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், முன்னாள் மாவட்ட தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நீர்க் கட்டண உயர்வை...

மீளக்குறைப்பதற்கான திட்டத்தையும் செயற்படுத்துவதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மாத்தளை மாநகர மேயர் சந்தானம் பிரகாஷ் மற்றும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் சிவஞானம் ஆகியோரின் ஏற்பாட்டில், மக்கள் சந்திப்பு நேற்று (19) குறித்த மாத்தளை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொண்டமான் மேலும் கூறியதாவது,

" நாட்டில் மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது. இதனால் விரைவில் நீர் கட்டணத்தையும் அதிகரிக்க நேரிடும். ஏனெனில் பெரும்பாலான நீர்வழங்கல் திட்டங்கள் மின்சாரத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதனால் நீர்வழங்கல் பொறிமுறைக்கான செலவீனங்களும் அதிகரிக்கும். அதனை ஈடுசெய்வதற்காகவே கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்கள் படும் கஷ்டமும் எமக்கு புரிகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், சூரிய சக்திமூலம், நீர் வழங்கல் திட்டத்தை இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் செலவீனம் குறையும். நீர் கட்டணத்தையும் குறைக்ககூடியதாக இருக்கும்.

நாட்டில் கல்வி, சுகாதாரம் உட்பட இலவசமாக வழங்கப்படுகின்ற அத்தியாவசிய சேவைகளை, எவ்வித தடையுமின்றி செயற்படுத்த வேண்டுமானால் அதற்கு அரசுக்கு வருமானம் அவசியம். இப்படியான நெருக்கடி நிலையால்தான் வரிகள் அதிகரிக்கப்படுகின்றன. எனவே ,நாட்டு நலன் மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி குறிப்பிட்ட காலத்துக்குள் பொறுமை காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டின் தற்போதைய நிலைமை நிலையானதல்ல. நெருக்கடி நிலை மாறும். அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, 1,000 ரூபா சம்பள உயர்வின் பின்னர், தொழிற்சங்கங்களுக்கும், கம்பனிகளுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இப்படி முரண்பட்டு பயணிக்கவும் முடியாது. கூட்டு ஒப்பந்தத்துக்கு வருகிறோம் என கூறும் கம்பனிகள், முதுகுக்குப் பின்னால் வேறொன்றை செய்து, வழக்கு தொடுக்க முற்படுகின்றது.

அரசுடன் பேச்சு நடத்தி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குவதற்கு கம்பனிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகின்றோம். இந்த வாய்ப்பை கம்பனிகள் தவறவிட்டால், நாம் சம்பள நிர்ணய சபைக்கு நிச்சயம் செல்வோம். 02 ஆயிரம் முதல் 2, 500 வரை சம்பள உயர்வு கோரப்படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தேர்தலுக்கு அஞ்சவில்லை. உள்ளாட்சித் தேர்தல் அல்ல ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தலே அவசியம். அதன்மூலமே மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றார்.

நிகழ்வின் போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். ராமேஷ்வரன், கட்சி தலைவர்கள், அமைப்பாளர்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

தேர்தல்களில் அதிக...

ஆராய குழுவொன்று நியமிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இளைஞர் குழுவொன்றுடன் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்திய சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் இந்த இளைஞர்கள் குழு, நாட்டின் பிரதான நாளிதழ் ஒன்றில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அது தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக அந்த கட்டுரையை எழுதி வெளியிட்ட இளம் ஊடகவியலாளர்களான அனுஷ்கா ஜெயசூரிய மற்றும் செனோன் சல்காது ஆகியோருடன் தன்னை சந்திக்க வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த இளைஞர் குழுவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த சந்திப்பு, இளைஞர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதற்கும் அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில், கலந்துரையாடுவதற்கும் ஜனாதிபதிக்கு வாய்ப்பாக அமைந்தது.

இதன்போது, இளைஞர் குழுவினர் தமது பிரச்சினைகளையும் யோசனைகளையும் முன்வைத்தனர். அவர்களின் கேள்விகள் மற்றும் கருத்துக்களை ஜனாதிபதி செவிமடுத்ததுடன் அவர்களுடைய கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பாடசாலை மட்டத்தில் முறையான மனநலக் கல்வி அவசியமானது எனவும் மாற்றுத்திறனாளிகளுக்கான முறையான கல்வி முறையின் அவசியத்தையும் இளைஞர் குழு வலியுறுத்தியதோடு கல்வித் துறையில் உள்ள குறைபாடுகள் குறித்து இங்கு பிரதானமாக ஆராயப்பட்டது.

பாடசாலைகளில் மனநலம் தொடர்பில் வழங்கப்படும் கவனம் போதுமானதாக இல்லை எனவும், மனநல குறைபாடு உள்ளவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் தொடர்பில் அதிகமாக விடயங்கள் செய்ய வேண்டியிருப்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். இத்துறைக்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆளணிகள் இல்லாததே நாடு எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் அதனை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பல நாடுகளில் வரி என்பது புதிய கருத்தல்ல. ஆனால் இலங்கையில் அவ்வாறில்லை என வரி விவகாரத்தை முன்வைத்து, இளைஞர்கள் கேள்வி எழுப்பினர்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத்தினால் ஆராய முடியும் எனவும் அதற்காக பல குழுக்களை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு மற்றும் பொது நிதிக் குழு உள்ளிட்ட மேலும் பல குழுக்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்த பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் கொண்டு வரப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

புதிய வரிகள் காரணமாக வெளிப்படைத்தன்மை பாரிய பிரச்சினையாக காணப்படுவதாகவும், திடீரென தமது சம்பளத்தில் பெரும் பகுதியை செலுத்த வேண்டியிருப்பதனால் மக்கள் அதனை கடுமையாக உணர்ந்துள்ளதாகவும் இளைஞர் குழு , ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"பெரிய வரவு செலவுத் திட்டத்தில் அனைத்தும் முறையாக ஒதுக்கப்படுவதால் வெளிப்படைத்தன்மை இருக்கிறது. எந்தவொரு வரவு செலவுத் திட்டத்திலும், பணம் முறையாக செலவிடப்படுவதை பாராளுமன்றந்தான் உறுதி செய்கிறது. எனவே, பாராளுமன்றம் தனது அதிகாரங்களை இப்போதே பயன்படுத்த வேண்டும். கடந்த முறையும் மேற்பார்வைக் குழுக்களின் தலைவர் பதவிக்கான வெற்றிடங்களை எதிர்க்கட்சிகள் நிரப்பவில்லை. இம்முறை அவர்கள் தெரிவுக்குழுக்களின் செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்திற்கு வரவில்லை. ஆனால் அதற்கு எதிர்க்கட்சியிலிருந்து சில பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. அதுதான் வெளிப்படைத்தன்மை. செலவுகள் மற்றும் ஏனைய விடயங்களைப் பற்றி நீங்கள் அவர்களிடம் கேட்கலாம்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தலை ஒத்திவைக்க...

ஒருவரினால் தாக்கல்செய்யப்பட்ட ரிட்மனு இன்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி மனுவானது நீதிபதிகளான எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனு மீதான விசாரணை கடந்த (10) நடத்தப்பட்ட போதும், அதன் முடிவில் இதுதொடர்பில் மேலும் கவனம் செலுத்தப்பட்டது. இந்நிலையில் மனுமீதான விசாரணையை (23) ஒத்திப்போடுவதற்கும் உச்சநீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும், மேற்படி மனு மீதான விசாரணையை எதிர்வரும் (23) முன்பதாக விசாரணைக்கு எடுக்குமாறு மேற்படி கேர்ணலினால் அவரது சட்டத்தரணிகள் மூலம் மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே மேற்படி மனுமீதான விசாரணையை இன்றைய தினத்தில் மேற்கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின்...

ஜனாதிபதி இதற்கு,தமது இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கண்டிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கண்டி ஜனாதிபதி மாளிகையில் மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன்போது மகா நாயக்க தேரர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கே ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

ரூ.20,000 கோடி...

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பெருமளவிலானோர் இவ்வாறு வரிப் பணத்தை செலுத்தத் தவறியுள்ள நிலையில் சில தரப்பினர் அதனை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு அறவிடப்படவேண்டிய வரி நிலுவையை அறவிடுவதற்கு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதற்காக திறைசேரியானது ஒரு தனி குழுவை நியமித்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நடைமுறையிலுள்ள தேசிய வருமான வரி கட்டளைச் சட்டத்தை காலத்துக்குப் பொருத்தமான வகையில் திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திருத்தப்படுவதையடுத்து கிடைக்கவேண்டிய வருமான வரியை குறைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு வருமானம் ஈட்டிவரும் டாக்டர்கள், சட்டத்தரணிகள், தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினர் நீண்டகாலமாக வரி செலுத்துவதிலிருந்து தவறிவருவதாகவும் அவர்களிடமிருந்து வரியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை...

ஒரு வருட காலத்துக்கு ஒத்திப்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் நிர்வாகக் காலம் எதிர்வரும் (19) திகதியுடன் நிறைவடைகிறது. அவற்றுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தலை எதிர்வரும் மார்ச் 09 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் அரசாங்கத்திடமிருந்து தேவையான நிதி கிடைக்காத காரணத்தினால் தேர்தலை நடத்தமுடியாத நிலை காணப்படுகிறது. எவ்வாறெனினும் உள்ளூராட்சி சபைகளுக்கான உத்தியோகபூர்வ காலம் மார்ச் 19 ஆம் திகதி நிறைவடைவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தவகையில் மாநகர சபைகளுக்கான நிர்வாகத்தை நகர ஆணையாளர்களுக்கும், நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கான நிர்வாகத்தை நகர செயலாளர்கள் மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்களின் கீழ் ஒப்படைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

IVS விநியோகப்பிரிவு...

விண்ணப்ப நிலையமான IVS Pvt Ltd அண்மையில் இடம்பெற்ற பாதுகாப்பு தொர்பான சில சம்பவங்களால், மறு அறிவித்தல் வரையில் மூடப்பட்டிருந்தது.

சகல விண்ணப்பதாரிகளும் IVS Pvt Ltd நிறுவனத்தில் மேற்கொண்ட தமது முன்பதிவுகளை மீள்பதிவு செய்யுமாறும் கோரப்பட்டிருந்தது.

அவசரமான கொன்சூலர் அல்லது விசா தேவைகளுக்காக உயர்

ஸ்தானிகராலயத்தை தொலைபேசி மூலமாக அணுகுமாறும் அறி'வுறுத்தப்பட்டிருந்தது.

எனினும், தற்போது நிலைமைகள் சீர் செய்யப்பட்டுள்ளதால் IVS Pvt Ltd நிறுவனத்தின் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளது.

பாடசாலைகள்...

தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகி, மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான இறுதித் தவணை கல்வி நடவடிக்கைகள் மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

இவ்வாண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பமாகும் தினம், பின்னர் அறிவிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விலங்குகளை....

மர அணில்கள், காட்டுப் பன்றிகள் மற்றும் முள்ளம் பன்றிகளை கொல்வதற்கு வழங்கியுள்ள அனுமதியை ஏற்றுகொள்ள முடியாது. மனிதர்களுக்கு ஆபத்து விளைவிக்காது உணவை தேடிச் செல்லும் இவ்விலங்குகளை கொல்வது பெரிய அநீதியாகும். இந்த விலங்குகள் வசிக்கும் காடுகளை அழித்து கட்டடங்களை கட்டுதல் மற்றும் இயற்கைக்கு ஒவ்வாத விடயங்களை மேற்கொள்வதால்தான், விலங்குகள் உணவு பற்றாக்குறையால், மனிதன் வசிக்கும் பகுதிகளுக்கு வருகின்றன.

ஆகவே காடுகளை அழித்து கட்டடங்களை நிர்மாணிக்க அனுமதி வழங்கிய அதிகாரியின் மீதும் திணைக்களத்தின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர விலங்குகள் மீது அல்ல.

எனவே, இந்த முடிவை உடனடியாக விவசாய அமைச்சு மீளப்பெற வேண்டுமென செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில்....

14 பேர் டெங்கு நோய்த் தாக்கத்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் குனசிங்கம் சுகுணன் தெரிவித்தார். இவ்வாறு உயிரிழந்தவர்,ஏறாவூர் ஐயங்கேணி பாரதிகிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர், டெங்கு நுளம்பு தாக்கத்துக்குள்ளாகி செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு (16) மட்டு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில்,சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை அதிகாலை 03 மணியளவில் இவர் உயிரிழந்தார்.

நீதிமன்றுக்கு விரைவில்...

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா,

நிதி இல்லாத காரணத்தினால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளதாக நீதிமன்றத்திற்கு, அறிவிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவானது ஏற்கனவே மார்ச் ஒன்பதாம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவது உறுதியென நீதிமன்றத்திற்கு தெரிவித்திருந்தது.

அந்த நிலையிலேயே தீர்மானித்தபடி தேர்தலை நடத்துவதற்கு தடைகள் எதுவும் கிடையாது என்றும் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தேர்தலை நடத்த முடியாது என்றும், இந்நிலையை தெளிவுபடுத்தி மனு ஒன்றை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹக்கலயில் 13,200 லீற்றர்...

கெப்பட்டிபொல எரிபொருள் நிலையத்துக்கு டீசல் ஏற்றிச் சென்ற பவுசரே, ஹக்கல பூங்கா பகுதியில் சுமார் 80 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சீரற்ற வானிலையால் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

பவுசரில் 13,200 லீற்றர் டீசல் இருந்ததாக, பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் கொள்கலன் பவுசர் கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

50 நாடுகள் பங்குபற்றிய அமான் பயிற்சியில் இலங்கை கடற்படைக்கு பாராட்டு

கராச்சியிலிருந்து மர்லின் மரிக்கார்

பாகிஸ்தான் கடற்படையினர் 'அமைதிக்காக ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் ஒழுங்கு செய்து நடாத்திய அமான் 2023 பன்னாட்டு பயிற்சியில் பங்குபற்றிய இலங்கைக்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் பாகிஸ்தான் கடற்படையின் பிரதான தளபதி அட்மிரல் எம். அம்ஜத் கான் நியாஸி பாராட்டுக்ககளையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

கடல் மற்றும் கடல் சார் பரப்புக்களில் அதிகரித்துவரும் பயங்கரவாத செயற்பாடுகள், போதைப்பொருள் மற்றும் ஆயுதக்கடத்தல், கடற்கொள்ளையர் அச்சுறுத்தல், மனித கடத்தல் போன்ற பாரம்பரியமற்ற குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பான கடல்சார் போக்குவரத்து உள்ளிட்ட கடல்சார் நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை பிராந்திய மற்றும் பிராந்தியத்திற்கு அப்பாலுள்ள நாடுகளின் கடற்படைகளின் ஒத்துழைப்புக்களுடன் மேற்கொள்ளும் வகையில் பாகிஸ்தான் கடற்படையினர் அமான் பன்னாட்டு பயிற்சியை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் இம்முறை நடைபெற்ற பயிற்சியில் இலங்கை உட்பட 50 நாடுகள் பங்குபற்றியுள்ளன.

இப்பயிற்சியின் பிரதான நிகழ்வு வடக்கு அரபுக் கடலில் கடந்த 14.2.2023 இல் நிறைவுற்ற பின்னர் சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, இச்சமயம் இலங்கை கடற்படைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனைய நாடுகளைப் போன்று இலங்கை கடற்படையும் அமான் பன்னாட்டு கடற்படைகளின் பயிற்சிக்கு எப்போதும் இதயபூர்வமாக ஆதரவு அளித்து வருகிறது. அந்த வகையில் இம்முறையும் கடற்படைக் கப்பலொன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளைக் கடந்து செல்கிறது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. என்றாலும் இவ்வாறான பயிற்சிக்கு கப்பலொன்றை அனுப்பிவைக்கக்கூடிய இயலுமையை அது அளிக்கக்கூடிய நிலைமையாக அல்லாத போதிலும் இலங்கை அரசும் அந்நாட்டு கடற்படையும் கப்பலொன்றை அனுப்பி வைத்துள்ளது. இது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இக்கப்பலின் பங்குபற்றல் மிகவும் பெறுமதியானது.

நாம் ஏற்பாடு செய்த இப்பன்னாட்டு பயிற்சி பல நாடுகளுடன் இணைந்து ஒரே கொடியின் கீழ் ஒரே தொனிப்பொருளில்சிறப்பாகநிறைவடைந்துள்ளது. இப்பயிற்சியில் பங்குபற்றிய இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் அவற்றின் கடற்படைகளுக்கும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட நாடுகளுக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றும் குறிப்பிட்டார்.

நிரஷ்ராயா கஜனின் பரத நாட்டிய அரங்கேற்றம்

அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குநர் "காலசூரி " திவ்யா சுஜேன் அவர்களின் மாணவி நிரஷ்ராயா கஜனின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தொல்காப்பியம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை எனக் காலந்தோறும் தமிழ் இலக்கியக் காட்சிகள் நாட்டிய மார்க்கத்தின் வழி முத்தமிழ்ப் படைப்பாய் அரங்கேறுகிறது.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி அவர்கள் இந்நிகழ்விற்கு இசை வழங்குவதோடு முதன்மை விருந்தினராகவும் வருகை தந்து சிறப்பிப்பார். பேராசிரியர் சி. மௌனகுரு, கெட்வே குழும நிறுவனங்களின் தலைவர் மருத்துவ கலாநிதி முனைவர் ஹர்ஷ அலஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்க, மறைமலையடிகளாரின் கொள்ளுப் பேர்த்தி கவிஞர் கலைச்செல்வி புலியூர் கேசிகன் அவர்களும், தெஹிவளை மற்றும் ரத்மலான கெட்வே கல்லூரிகளின் அதிபர் திருமதி பிரியந்தி சென விரத்னவும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

யோகக் கலை நிபுணர் திருமதி ஸ்ரீப்ரியா இந்திரமோகன், சென்னை சரசாலயா நடனப்பள்ளி நிர்வாக இயக்குநர் "நாட்டியச் செம்மல்" சண்முகசுந்தரம் ஆகியோருடன் இந்திய அணிசேர் கலைஞர்கள் பங்கு கொள்ளும் இந்நிகழ்விற்கு முத்தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

மாறிவரும் உலக ஒழுங்கில் ஈரான் வகிபாகம்

ஈரானைப் பற்றி எழுதாத, அதைப் பற்றி விரிவாகப் பேசாத ஊடகங்களையோ, சிந்தனையாளர்களையோ காண்பது அரிது. ஊடகங்கள் மற்றும் சிந்தனைக் குழுக்கள் குறைந்தது மூன்று கோணங்களில் இருந்து ஈரான் குறித்து கவனம் செலுத்தின.

முதலாவதாக, குறைந்தபட்ச இழப்புகளுடன் அதிகபட்ச சலுகைகளைப் பெறுவதற்காக JCPOA இன் மீள்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஈரானைக் கட்டாயப்படுத்த முடியும் என்ற மேற்கு நாடுகளின் நம்பிக்கைகள் அனைத்தும் ஈரான் கீறிய அதன் சிவப்புக் கோடுகளில் இருந்து பின் வாங்க மறுத்ததால் தோல்வியடைந்தன. இதன் விளைவாக, மேற்கத்திய ஆய்வாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சமீபத்திய மாதங்களில் ஈரான் அணு ஆயுதங்களைப் பெற விரும்புவதாகக் கூறி பிரச்சினையை எழுப்ப முயற்சிக்கின்றனர்.

அவர்கள் இதற்காக தங்கள் ஊடகங்களையும், மனித உரிமைப் பிரச்சினையையும் நெம்புகோலாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதற்கிடையில், ஈரானின் அணுசக்தி அமைப்பு (AEOI), IAEA ஆளுநர்கள் குழுவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு பதிலளிக்கும் விதமாக, ஃபோர்டோ செறிவூட்டல் ஆலையில் 60% யுரேனியத்தை செறிவூட்டத் தொடங்கியது. ஈரானின் பாதுகாப்பு உத்திகளில் அணு ஆயுதங்களுக்கு இடமில்லை என்று ஈரானிய அதிகாரிகள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தாலும், இஸ்லாமிய புரட்சியின் தலைவர் இமாம் கொமெய்னி கூட இஸ்லாமிய கொள்கைகளின் அடிப்படையில் அணு மற்றும் இரசாயன ஆயுதங்கள் உட்பட பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்து ஆணையிட்டுள்ளார். என்றாலும் கூட மேற்குலகம் இப்பிரச்சினையை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்த முயற்சிப்பதாகத் தெரிகிறது. ஈரானை உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூழ்கடிப்பது, பொருளாதாரத் தடைகளை அதிகரிப்பது, சர்வதேச அளவில் மனித உரிமைப் பிரச்சினைகளை எழுப்புவது, அதையும் தாண்டி ஈரானை உள்நாட்டுப் போருக்குள் சிக்கவைத்து சிதைப்பது போன்றவை பிராந்தியத்தில் மேற்குலகின் நலன்களைப் பாதுகாக்க உதவும் கைங்கரியங்களாகும்.

சமீப காலமாக மேற்கத்திய முக்கிய ஊடகங்களின் செயல்பாடும், ஈரானுக்கு எதிராக எதிர்மறையான செய்திகளை வெளியிடுவதற்கு அவர்கள் அணிவகுத்து நிற்கும் விதம், நம்பத்தகுந்த ஊடகங்களாக தம்மைக் காட்டிக்கொள்ளும் ஊடகங்கள் போலிச் செய்திகளைக் கூட வெளியிடத் தயங்காமல் இருப்பது மிகுந்த அதிர்ச்சியையும், அதே சமயம் சிந்திக்கத் தூண்டுவதாகவும் உள்ளது.

இஸ்லாமியப் புரட்சித் தலைவர் உடல்நலம் கெட்டு இருப்பதாகவும், அவரது பொதுக் கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் நியூயோர்க் டைம்ஸ் வெளியிட்ட போலிச் செய்தி இதற்கு மிகத் தெளிவான உதாரணங்களில் ஒன்றாகும். மறுநாள் ஈரான் முழுவதிலும் இருந்து மாணவர் பிரதிநிதிகளை அவர் சந்தித்தபோது இது பொய் என விரைவாக அம்பலமானது. அதன்பிறகு, சி.என்.என் போன்ற பிற ஊடகங்களும் ஈரானில் நடந்த கலவரங்கள் குறித்து தவறான செய்திகளை வெளியிட்டு, கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டதாக ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டு இந்த முயற்சியில் இணைந்தன.

இஸ்லாமியப் புரட்சித் தலைவர் இஸ்பஹான் மக்களுடனான சந்திப்பில், 'இஸ்லாமியக் குடியரசுடன் மேற்கத்திய நாடுகளும் திமிர்பிடித்த சக்திகளும் கொண்டுள்ள பிரச்சினைக்குக் காரணம், இஸ்லாமியக் குடியரசு சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருவது தான். அது செழித்து வளர்கிறது. முழு உலகமும் இம்முன்னேற்றத்தைக் கண்டு அதை ஒப்புக்கொண்டுள்ளது. இதை மேற்குலகால் சகித்துக் கொள்ள முடியாது. அவர்கள் அதை பொறுத்துக்கொள்ள தயாராக இல்லை. அங்குதான் பிரச்சினை இருக்கிறது. நாம் எந்த முன்னேற்றமும் அடையாமல் இருந்திருந்தால், அப்பிராந்தியத்தில் வலுவான இருப்பை வெளிப்படுத்தத் தவறியிருந்தால், அமெரிக்கா மற்றும் திமிர்பிடித்த சக்திகளின் முன் நமது குரல் நடுங்கினால், அவர்களின் ஆக்ரோஷமான, நிர்ப்பந்தமான நடத்தையை ஏற்க நாங்கள் தயாராக இருந்திருந்தால், எம்மீது செலுத்தப்படும் அழுத்தம் குறைந்ததாக இருந்திருக்கும். நிச்சயமாக, அவர்கள் வந்து எங்களை ஆதிக்கம் செலுத்தியிருப்பார்கள், எனினும் குறைவான தடைகள் மற்றும் இந்த வகையான அழுத்தங்கள் மற்றும் சவால்கள் இருந்திருக்கும்'.

ஈரானின் அணு ஆயுதங்களை நோக்கி பயணிக்கிறது அல்லது பிராந்தியத்தை சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது மற்றும் ஈரானில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற அவர்களின் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு அப்பாற்பட்டது என்பது இந்த அறிக்கைகளிலிருந்தும் தெளிவாகிறது.

புதிய நிர்வாகம் ஈரானில் பதவியேற்றது முதல், அது செயல்திறன், ஆற்றல் மிக்க இராஜதந்திரம் மற்றும் அண்டை நாடுகளுடன் உறவு கொள்கைகளை அதன் நிகழ்ச்சி நிரலில் வைத்துள்ளது. ஈரானுக்கும் அண்டை நாடுகளுக்கும் இடையே பல வர்த்தக, மூலோபாய ஒப்பந்தங்கள் பல கையெழுத்தாகியுள்ளன, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அதிகாரப்பூர்வ உறுப்பினராக ஈரான் மாறியுள்ளது, மேலும் ஈரானுக்கும் இந்த நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர வருகைகள் அதிகரித்துள்ளன. மேற்கின் கொள்கை ஈரானை தனிமைப்படுத்துவது என்றாலும், ஈரான் இப்போது அதன் அண்டை நாடுகளிடையே புதிய மூலோபாய பங்காளிகளைத் தேடுகிறது. அதே சமயம், ஈரான் மேற்கு நாடுகளுடன் பேச்சுவார்த்தை மேசையை விட்டு வெளியேறவும் இல்லை.

ஈரானை எதிர்கொள்வது என்பது சர்வதேச சக்தியின் மாறிவரும் வடிவியலின் செயல்முறையின் வேகத்தை குறைந்தபட்சம் குறைப்பது மேற்கத்திய நாடுகளின் முக்கிய தந்திரங்களில் ஒன்றாகும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இல்ஹாம் அபேடினி
(சர்வதேச உறவுகள் தொடர்பான ஊடகவியலாளர் மற்றும் ஆய்வாளர்)

சிலாபம் கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டராமுல்லை அல்ஹிரா மகா வித்தியாலயம் தரம் 4 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் கல்விச் சுற்றுலாவின் போது lake house நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் எடுத்துக் கொண்ட படம்.

உலக சைவ கொடித்தினம்

மஹா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவை இலங்கைக்கிளை ஏற்பாட்டில் உலக சைவ கொடித்தினம் தலைவர் எஸ். தனபாலா தலைமையில் சம்மாங்கோடு மாணிக்கப்பிள்ளையார் ஆலய அறங்காவலர் அருணாச்சலம்பிள்ளை மாணிக்கவாசகர் முன்னிலையில் அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் அ. இ. இ. மா. மன்ற செயலாளர், என். கந்தசாமி இராமகிருஷ்ணா, மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மனாந்தஜீ மகராஜ், இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா, தலைவர் எஸ். தனபாலா, செயலாளர் வே. சிவஜெயராஜா, பொருளாளர் ஆர். வைத்திமாநிதி. பணிப்பாளர் ய.அநிருத்தனன், எஸ். சுந்தரலிங்கம்,சட்டத்தரணி என்.குமரகுருபரன் ஆகியோர் கலந்து உலக சைவக்கொடியினை அணிவித்து சிறப்பித்தனர், படத்தில் கொடிகளை அணிவதை காணலாம். படங்கள்: எஸ்.எம்.சுரேந்திரன்

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.02.18 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 5035 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,325,386.00
ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 4 6 7 7 5 4

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1065 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,005,517.60
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 01 49 79 80

ஜாதிக சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 1490 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,926,304.80
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள்: 0 3 9 9 7 4

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 344 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,580,322.20
வெற்றி இலக்கினம்: கும்பம் — வெற்றி இலக்கங்கள்: 12 22 40 47 — விசேட இலக்கினம்: கும்பம்

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3277 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,797,578.00
ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 51 57 69 80

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1383 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 301,461,702.00
ஆங்கில எழுத்து: C — சுப்பர் இலக்கம் 23 — வெற்றி இலக்கங்கள்: 19 23 40 47
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.02.17 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 5034 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 33,377,526.00
ஆங்கில எழுத்து: U — வெற்றி இலக்கங்கள்: 3 1 9 9 6 7

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1064 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,005,517.60
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 03 25 38 43

ஜாதிக சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் 1489 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,862,406.00
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள்: 0 4 8 9 9 6

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 343 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,570,076.80
வெற்றி இலக்கினம்: சிம்மம் — வெற்றி இலக்கங்கள்: 15 18 45 55 — விசேட இலக்கினம்: சிம்மம்

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3276 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,476,930.00
ஆங்கில எழுத்து: Y — வெற்றி இலக்கங்கள்: 42 67 74 75

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1382 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 301,097,210.00
ஆங்கில எழுத்து: E — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள்: 05 24 41 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

விவசாயம்

ஆர். சுகா

நாற்றுமேடைகளின் பலனை அறிவோம்

விதைகள் மூலம் புதிய தாவரங்களை உருவாக்குவதற்காக விவசாயிகளினால் நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டு வருவதுடன், இந்த நாற்றுமேடைகளானவை, தாவரங்களை நிரந்தரமாகத் தரையில் நடும்வரை அத்தாவரங்களை குறுகிய காலத்துக்கு பாதுகாப்பாகக் கவனித்து வளர்க்கும் இடங்களாகவும் விளங்குகின்றன.

அதாவது, புதிய தாவரங்களை தோற்றுவித்தது முதல் அவற்றை நோய்த் தாக்கத்திலிருந்தும் சீராகவும் பேணிப் பாதுகாப்பதற்கு நாற்றுமேடைகள் உதவுவதுடன், சூழலின் தட்பவெப்ப நிலைமைக்கு ஏற்பவும் தாவரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு நாற்றுமேடைகள் மிகுந்த பங்களிப்புச் செய்வதாக, ஏறாவூர் விவசாய விரிவாக்கல் பிரிவின் விவசாயப் போதனாசிரியை எம்.எச்.முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்நாற்றுமேடைகளானவை பிரதானமாக மூன்று வகைகளாகக் காணப்படுகின்றன.

அவையாவன,

1.பாத்தி நாற்றுமேடை
2.சாடி நாற்றுமேடை
3.விசேட நாற்றுமேடை

பாத்தி நாற்றுமேடைகளானவை உயர் பாத்தி நாற்றுமேடை, தாழ் பாத்தி நாற்றுமேடை என்று இரண்டு வகைப்படுகின்றன.

அத்துடன், விசேட நாற்றுமேடைகளானவை ஐந்து வகைப்படுகின்றன.

அவையாவன:

1.மணல் நாற்றுமேடை
2. நெரிடோக்கா நாற்றுமேடை
3.கடற்பஞ்சு நாற்றுமேடை
4.இருநாற்றுமேடை
5.தட்டு நாற்றுமேடை

இவற்றில் உயர் பாத்தி நாற்றுமேடைகளையே எமது நாட்டிலுள்ள விவசாயிகள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், உயர் பாத்தி நாற்றுமேடைகள் தொடர்பாக சற்று நோக்குவோமாக...

உயர் பாத்தி நாற்றுமேடைகளானவை தாவரங்களின் உற்பத்திக்குச் சிறந்ததாகும் என்பதுடன், மழைக் காலத்துக்கு பொருத்தமானதாகவும் அமைகின்றது. ஏனெனில், மழையினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கின் போது, தாவரங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நிலைமை உயர் பாத்தி நாற்றுமேடைகளில் காணப்படுகின்றது.

உயர் பாத்தி நாற்றுமேடைகளை உருவாக்கும் போது, அதற்கு நிழல் வழங்குவது அத்தியாவசியமாகின்றது. இந்நிலையில், சிறிய தாவரங்களை பாதுகாக்கும் வகையில் உயர் பாத்தி நாற்றுமேடைகளுக்கு பந்தல் இடுவது அவசியமானதாகக் கொள்ளப்படுகின்றது. அதிகளவான சூரிய ஒளியிலிருந்தும் நேரடி மழையிலிருந்தும் தாவரங்களைப் பாதுகாக்கும் வகையிலேயே பந்தல் இடும் முறை முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது.

தாவரங்களின் உற்பத்திக்கு முன்னராக நாற்றுமேடைகளில் காணப்படும் மண்ணை மட்டப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், இந்தச் சந்தர்ப்பத்தில் நாற்றுமேடைகளானவை ஈரம் உடையதாகக் காணப்படவும் வேண்டும். அத்துடன், நாற்றுமேடைகளின் அனைத்து விளிம்புகளும் இறுக்கமுடையதாக இருத்தல் அவசியமாகின்றது.

நாற்றுமேடைகளில் நடப்படும் விதைகளுக்கு உரிய பரிகாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், அதன் பின்னரே நாற்றுமேடைகளில் விதைகளை விதைக்க வேண்டும். நாற்றுமேடைகளின் பரிகாரத்துக்காக பங்கஸ் நாசினியான கெப்டான் 50 சதவீதம் டபிள்யூ.பி 80 இல், 6 கிராமை 5 லீற்றர் நீரில் கலந்து விசிற முடியும். அல்லாவிடின், திராம் 90 டபிள்யூ.பி. 4.5 கிராமை பாவித்து அதை 5 லீற்றர் நீரில் கலந்து பயன்படுத்துவது அவசியமாகின்றது.

பங்கஸ் தொற்றுகளிலிருந்தும் கறையானிலிருந்தும் தாவரங்களைப் பாதுகாப்பதற்கே நாற்றுமேடைகளில் பரிகாரம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.

இந்த நாற்றுமேடைகளானவை 90 சென்ரிமீற்றர் அகலம் உடையதாகவும் 15 சென்ரிமீற்றர் உயரம் உடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், பராமரிப்பை இலகுவாக மேற்கொள்வதற்காக 3 மீற்றர் நீளத்தில் நாற்றுமேடைகளை உருவாக்கலாம்.

இரண்டு நாற்றுமேடைகளுக்கு இடையில் 30 சென்ரிமீற்றர் அகலத்தைக் கொண்டதாக வாய்க்கால் அமைய வேண்டும் எனவும், அவர் தெரிவித்தார்.

நாற்றுமேடைகளின் மேற்புறத்தில் காணப்படும் ஒரு சென்ரிமீற்றர் தடிப்பான மண் படையை அகற்றுவதுடன், இவ்வாறு அகற்றப்பட்ட மண் படைக்குப் பதிலாக மண்ணையும் கூட்டெருவையும் ஒன்றுக்கு ஒன்று எனும் சதவீதத்தில் கலக்க வேண்டும். இதன் பின்னரே விதைகளை நடுகை செய்ய வேண்டும்.

விதைகள் நன்றாக முளைப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பத்திரக் கலவை இடுதல் அவசியமாகின்றது. இந்தப் பத்திரக்கலவை இடலுக்காக சாக்குகள் அல்லது வைக்கோலைப் பயன்படுத்த முடியும். வைக்கோலாயின் சிதைவடையாததும் சுத்தமானதுமான வைக்கோலைப் பயன்படுத்த வேண்டும். சாக்குகளைப் பொறுத்தவரையில் ஒரு தடவை பயன்படுத்திய சாக்குகளை மீண்டும் பயன்படுத்துவதாயின், அவற்றை நன்றாகச் சுத்தம் செய்து சூரிய ஒளியில் உலர வைத்த பின்னரே பத்திரக்கலவை இடுதலுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

நாற்றுமேடைகளிலிருந்து தாவரங்களைப் பிடுங்குவதற்கு சில நாட்களுக்கு முன்னர் நீர் விடுதலை அதிகரிக்க வேண்டும். நாற்றுமேடைகளானவை ஈரப்பதத்துடன் காணப்படும் பட்சத்தில் தாவரங்களின் வேர்களுக்கு சேதம் ஏற்படாத வகையில் பாதுகாப்பாக பிடுங்க முடியும். விதைகள் நடுகை செய்யப்பட்டு 14 நாட்கள் முதல் 21 நாட்களில் முளைத்த தாவரங்களை பிடுங்க முடியும். இதன்போது, தாவரங்கள் இரண்டு இலை பருவத் தாவரங்களாகக் காணப்பட வேண்டும்.

மிளகாய், தக்காளி, கோவா, கத்தரி, கரட், பீட்ரூட், கறிமிளகாய், சலாது, முள்ளங்கி உள்ளிட்ட தாவரங்களை நாற்றுமேடைகளின் உதவியுடன் உற்பத்தி செய்ய முடியும் எனவும், அவர் தெரிவித்தார்.

ஆர்.சுகந்தினி

பாரம்பரிய நெல்லினங்களை மீண்டும் அறிமுகப்படுத்தும் விவசாயத் திணைக்களம்

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்”

யாவரும் உண்ணுவதற்கு உணவைத் தந்து, தாமும் உண்டு வாழ்பவரே உரிமை வாழ்வினர்; மற்றையவர் பிறரைத் தொழுது உண்டு, அவர் பின் செல்கின்றவரே யாவர் எனத் தெரிவிக்கின்றது உலகப் பொதுமறையான திருக்குறள்.

விவசாயப் பொருளாதாரத்தை நம்பியே மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தமது வாழ்வை நகர்த்துகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் குளத்துநீரை நம்பி செய்கை பண்ணப்படும் சிறுபோகமும் மழைநீரை நம்பி மேற்கொள்ளப்படும் மானாவாரி அல்லது பெரும் போகமுமாக 2 போகங்களை ஒரு வருடத்தில் விவசாயிகள் மேற்கொள்கின்றார்கள். இம்மாவட்டத்தில் சுமார் 69224.02 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்யப்படுகின்றது.

கடந்த காலத்தில் விவசாயிகள் தம்மிடமிருந்த பாரம்பரிய நெல்லினங்களை விதைத்து, இயற்கை உரங்களைப் பாவித்து, தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்தபோதில், இடைப்பட்ட காலத்தில் புதிய புதிய நெல்லினங்கள் அறிமுகமாகியதோடு, இரசாயன உரங்களும் இறக்குமதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மெல்ல மெல்ல பழையவற்றை விவசாயிகள் கைவிட்டு புதிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

காலம் செல்லச் செல்ல இரசாயன உரங்களினதும் கிருமி மற்றும் களைநாசினிகளினதும் பாவனை அதிகரிக்கத் தொடங்கியது. அதில் விளைகின்ற நெல்லரிசிச் சோற்றை உண்ணும் மக்களிடையே நோய் எதிர்ப்புச் சக்திகள் குறைவடைந்தும் தொற்றா நோய்களும் பரவலாயின. இந்நிலையில், அண்மையில் அரசின் விவசாயக்கொள்கைளில் மாற்றம் கொண்டுவரப்பட்டு இரசாயன உரங்கள் கிருமிநாசினிகள் முற்றாக நிறுத்தப்பட்டு இயற்கை உரப்பாவனைக்கு விவசாயிகள் திடீரென திணிக்கப்பட்டனர். இதனால், மீண்டும் இயற்கை உரப்பாவனைக்கு மாறுவதற்கு விவசாயிகள் சிரமப்பட்டனர். தற்போது மீண்டும் இரசாயன உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, விவசாயிகள் தாமாகவே உணர்ந்து விவசாயச் செய்கையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக விவசாயத் திணைக்களம் பாரம்பரிய நெல்லினங்களை அறிமுகம் செய்து வருகின்றது. இதனால் விவசாயிகள் மெல்ல மெல்ல பாரம்பரிய நெல்லினங்களை விதைப்பதற்கும் அதனூடாக இயற்கை உரப்பாவனைகளைப் பயன்படுத்தவும் தமது நடைமுறைகளை மாற்றி வருவதாக அறிய முடிகின்றது.

பாரம்பரிய நெல்லினங்கள் அறுவடை...

விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவின் மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய பழுகாமம் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் கீழுள்ள காந்திபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவுக் குட்பட்ட களுமுந்தன்வெளிக் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல் அறுவடை விழா விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தனின் ஒழுங்கமைப்பில் கடந்தவாரம் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன், விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ப.பேரின்பராசா, விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சித்திரவேல், போரதீவுப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சன், பாடவிதான உத்தியோகத்தர்களான லாவன்யா செந்தீபன், என்.லஸ்மன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு பாரம்பரிய நெல் அறுவடை விழாவை மெருகூட்டியிருந்தனர்.

இதன்போது ஏற்கனவே அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் அரை மானியத்தின் கீழ் ஒரு கிலோ நெல் 125 ரூபாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு அப்பகுதியில் 120 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல்லினமான பச்சைப் பெருமாள், மடத்தவழு ஆகிய நெல்லினங்களே அறுவடை செய்யப்பட்டன.

விவசாயிகள் மத்தியில் இவ்வாறு மீண்டும் பாரம்பரிய நெல்லினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதானது வரவேற்கத்தக்கதாகும். எனினும், இச்செயற்பாடுகள் ஏனைய விவசாயிகளுக்கு சென்றடையும் போதே அது விவசாயத் துறையில் மேலும் செல்வாக்குச் செலுத்தும் எனலாம்.

தற்போதைய நிலையில் வேளாண்மைச் செய்கை பாரியதொரு சவாலாக இருக்கின்றது. அசேதன உரங்களைப் பயன்படுத்தித்தான் வேளாண்மைச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள். உண்மையில் எமது பண்டைய காலத்தில் விவசாயிகள் எந்தவெரு இரசாயனங்களையும் பயன்படுத்தாமல் சேதன உரங்களை மாத்திரம் பயன்படுத்தி அதிக விளைச்சல்களைப் பெற்றிருந்தர்கள். இந்நிலையில் 'பசுமைப் புரட்சி' எனும் செயற்பாட்டின் கீழ் அசேதன உரங்களை இறக்குமதி செய்து, வேளாண்மைச் செய்கையில் விவசாயிகள் வெற்றிகண்டு அதில் அதிக விளைச்சலையும் பெற்றிருந்தார்கள். இது இவ்வாறிருக்க அப்போது பயன்படுத்திய அசேதன உரம் மற்றும் இரசாயனங்களின் பயன்பாடுகளால் தற்போது மக்கள் மத்தியிலும் விவசாயிகள் மத்தியிலும் தொற்றா நோயின் தாக்கங்களும் அதிகரித்து நோய்களுக்கு அதிகளவு நிதியை மக்கள் செலவு செய்து வருகின்றார்கள் என, அப்பகுதி விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தன் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்□

இந்நிலையில்தான் விவசாயிகள் இனிமேலாவது இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகளைப் பாவிப்பதை இயன்றளவு குறைக்க வேண்டும். அண்மையில் அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைக்கு அமைவாக இரசாயன உரங்களை கைவிட்டு இயற்கைப் பசளைகளுக்கு மாற்றப்பட்டிருந்தனர். அதனை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. அதற்கு காரணம் தற்போது செய்கை பண்ணப்பட்டுள்ள நெல்லினங்கள் திருத்திய பசளைக்கு தூண்டற்பேறைக் காட்டக்கூடிய நெல்லினங்களாக உள்ள காரணத்தினால் அதற்கு இரசாயன பசளைகளைப் வழங்குகின்ற போதுதான் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில்தான் மீண்டும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு விவசாயத் திணைக்களம் முடிவெடுத்திருக்கின்றது.

இந்நிலையில்தான் எமது திணைக்களத்தினால் விவசாயிகள் பாரம்பரியமாக மேற்கொண்டு வந்து தற்போது அது தூர்ந்து போயுள்ள பாரம்பரிய நெல்லினங்களான பச்சைப்பெருமாள், மடத்தவழு, சுகந்தல், கழுகிநெத்தி போன்றவற்றை விவசாயிகளுக்கு நாம் அண்மையில் அறிமுகப்படுத்தியிருந்தோம். இந்தப் பண்டைய காலத்து நெல்லினங்களுக்கு எதுவித இரசாயனங்களையும் பயன்படுத்தாமல் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய இனங்களாகும். இதில் இம்முறை குறிப்பிட்டளவு விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெற்றுள்ளார்கள். இதனை மேலும் விவசாயிகள் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளலாம்.

வ.சக்திவேல்

கிழக்கின் குரல்

பண்டா, செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் நாட்டில் இத்தனை இழப்புக்களும் ஏற்பட்டிருக்காது

ஜனா எம்.பி

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

பண்டா, செல்வா ஒப்பந்தம் நிறைவேறி யிருந்தால் பாரியளவிலான உயிர்ச் சேதங்களை நாடு,சந்தித்திருக்காது என்றும், ஊடகவியலாளர்களை யும் இழந்திருக்க நேரிட்டிருக்காது என்றும், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்குமாறு கோரி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம். (18) மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய கருணாகரன் எம்பி மேலும் தெரிவித்ததாவது,

ஊடகவியலாளர்கள் என்னிடம் கையளித்த மகஜரை, நிச்சயமாக ஜனாதிபதியின் கையில் கையளிப்பேன். இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணங்கள் நிறைவேறும் என, நான் நினைக்கவில்லை.

ஏனெனில் கடந்த காலங்களில் 50 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.இதுவரையில் எந்தவொரு ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைத்ததாகத் தெரியவில்லை.

மாறி, மாறி இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களின் காலத்தில் இவ்வாறு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அடிப்படை

மனித உரிமைகளுக்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் நாட்டில் மதிப்பில்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் இதுவரையில் நீதி கிடைக்கவில்லை. இதற்கான தீர்வையே தமிழ் மக்கள் வேண்டி நிற்கின்றனர்.. இந்த நிலையில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி நிருணயிக்கப்பட்டுள்ளது.

அந்த தேர்த்தல்கூட நடைபெறுமா? அல்லது நடைபெறாதா? என்ற நிலமையும் காணப்படுகின்றது. மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்குரிய தேர்தலை அரசாங்கம் எந்த காரணங்களைக் கூறியாவது குழப்ப முயற்சிக்கிறது.

புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு 13 வது திருத்தச் சட்டத்தை ஓரளவாவது நிறைவேற்ற, ஜனாதிபதி முன்வந்திருக்கிறார். ஆனால் கடும்போக்குகள் 13 திருத்தச் சட்டம் அல்ல, தமிழர்களுக்கு எந்தவிதமான உரிமைகளையும் கொடுக்கக் கூடாது என போராட்டம் நடாத்துகின்றனர்.

அன்று,பண்டா,செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால்

இவ்வளவு இழப்புக்களை சந்தித்திருக்கத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் ரிஷாட் எம்பி

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை தோப்பூர் பிரதேசத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தலைவர்.

ரிஷாட் பதியுத்தீன் கலந்து கொண்டார். இக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு (17) நடைபெற்றது.

இதன்போது சேருவில பிரதேச சபை மற்றும் மூதூர் பிரதேச சபை வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இரவு பதினொரு மணி வரை நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காத்திருந்து இக்கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

திடீரெனப் பெய்த மழையால் விவசாயிகள் கவலை

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் (சிவராத்திரி) இரவு பெய்த கனமழையால் அறுவடைகள் தாமதமடைந்தன. இதனால்,விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

துரித அறுவடை பல கண்டங்களில் இடம்பெற்று வந்த நிலையிலே, கனமழை பெய்துள்ளது.இதனால், விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.தாழ்நில பிரதேசங்கள் நீரினால் மூழ்கிக் காணப்படுகின்றன. நனைந்த நெல்லைக் கொள்வனவு செய்வதிலும். விற்பதிலும் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், சில விவசாயிகள் மூலதனத்தைக்கூட இழக்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. கிழக்குமாகாணத்தின் பெரும்பாலான மக்கள் தமது ஜீவனோபாய தொழிலாக விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். இந்நிலையில் காலநிலை மாற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சமும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்கள வருடாந்த கூட்டம்

பாலமுனை தினகரன் நிருபர்

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் 16 வது வருடாந்த பொதுக்கூட்டம், அண்மையில் மாளிகைக்காடு பாவா றோயல் வரவற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் யூ.எல்.எம். பைஸர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 2023/2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. சங்கத்தின் புதிய தலைவராக மீண்டும் யூ.எல்.எம், பைஸர் தெரிவு செய்யப்பட்டுள்ளார், செயலாளராக எம்.ஜே.எம்.சல்மான், பொருளாளராக எஸ். தினேஸ்குமார், பத்திராதிபராக எம்.எஸ்.எம்.ஹனிபா, ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, சங்கத்தின் உப தலைவர்களாக எம்.எச்.எம்.இர்பான், கே.எப்.றிப்கா, பிரதிப் பொதுச் செயலாளராக எம்.எம்.ஏ.முபாறக் உதவிப் பொருளாளராக எஸ்.டபிள்யு.எம். றிஸ்லி, உட்பட செயற்குழு உறுப்பினர்களாக ஏ.ஜே.அப்துல்லாஹ்.எம். ரீ.எம்.றமீஸ்,எம்.ரீ.எம்.பைறுஸ்,யூ. துஸான்,கே.பத்மநாதன்,எஸ்.நாகராஸா,எம்.ஐ.எம்.இனாஸ்,கே.எம். பர்ஹானா,பர்ஷானா றிஸ்கான் ஆகியோருடன் உதவி பத்திராதிபராக யூ.ஏ. மஜீத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தலைவர் யூ.எல்.எம்.பைஸர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக அர்ஸத் காரியப்பர் நியமனம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக, கல்முனை மாநகர சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய சாய்ந்தமருதைச் சேர்ந்த டாக்டர் அர்ஸத் காரியப்பர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார திணைக்களம் இவருக்கான நியமனக் கடிதத்தைக் கையளித்துள்ளது. இதையடுத்து தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மாநகர சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில், பொதுமக்களுக்குத் தேவையான பலவிதமான சுகாதார பிரச்சினைகளை தீர்க்க காத்திரமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், சமூக சேவை துறையில் மிகவும் முக்கியமான பாத்திரத்தையும் இவர் வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகா சிவராத்திரியை முன்னிட்டு கொக்கட்டிச்சோலை சிவன் ஆலயத்தில் பூஜைகள்

மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

மகா சிவராத்திரி முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிவன் ஆலயமான கொக்கட்டிச்சோலை, தான் தோன்றீஸ்வரர் பேராலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

பேராலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ மூ. கு சச்சிதானந்த குருக்கள் தலைமையில், நான்கு சாம பூஜைகள் நடாத்தப்பட்டன. இப்பூஜைகளில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பெருமளவு இந்து பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்த வழிபாடுகளில் கொக்கட்டிசோலை சிவன் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள 108 சிவலிங்கங்களுக்கு அடியார்கள் எண்ணைக் காப்பு சாத்தும் விசேட நிகழ்வு இடம் பெற்றது.

நேற்றிரவு முதல் நடைபெற்ற இந்த சிறப்பு பூஜைகள் அதிகாலை வரையில் இடம் பெற்றன. பல்வேறு பகுதிகளிலும் வருகை தந்த இந்து பக்தர்கள் ஆலய வளவில் தங்கியிருந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

ஆத்மீகம், அறிவைப் பகிரும் தளங்களாக பள்ளிவாசல்களை வளர்த்தெடுப்போம்

ஸஹீஹுல் புஹாரி பாராயன நிகழ்வில் அக்கரைப்பற்று பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம் சபீஸ்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று ஜும்ஆ பெரியபள்ளிவாசலில் நேற்று (19) ஸஹீஹுல் புஹாரி 66 ஆவது பாரயன நிகழ்வும் கந்தூரி வைபவமும் இடம்பெற்றது. இதல் , ஊரின் மூத்த உலமாக்கள் பிரஜைகள், சமூக முக்கியஸ்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். முப்பது தினங்கள் ஓதப்பட்டு வந்த இந்த மஜ்லிஸ் நேற்று 66 ஆவது முறையாக நடைபெற்றது. கொட்டும் மழைக்கு மத்தியிலும் பெருந்திராளான மக்கள்

இதில் கலந்து கொண்டு கந்தூரியின் அன்னதானத்தைப் பெற்றுக் கொண்டனர். இங்கு உரையாற்றிய பள்ளிவாசல் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும் கிழக்கின் கேடயத் தலைவருமான எஸ். எம் சபீஸ் கூறியதாவது,

பள்ளிவாசல்கள் என்பது சமூகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஆத்மீகத் தளங்களாகும். இங்கு ஆத்மீகக் கல்வி மட்டுமல்ல உலகியல் அறிவு மற்றும் இளைஞர்களுக்கான வழிகாட்டுதல்கள் இடம்பெறுவது அவசிய ம். அலைக்கழியும் எமது இளை ஞர்களை பள்ளிவாசல்களுடன் இணைக்க எம்மிடம் பல திட்டங்கள் உள்ளன. மார்க்க உபன் னியாசங்கள் இன்னும் பக்தாதுக்கு இணையான நூலகம் ஒன்றை அமைக்கவும் தீர்மானித்திருக்கிறோம்.

அல்லாஹ்,ரஸூலின் வழிகாட்டலில் எமது இளைஞர்களை வளர்த்தெடுப்பதில் பள்ளிவாசல்களைத் தவிர வேறு எந்தத் தளங்களுக்கும் பிரதான இடமில்லை. இதைக் கருத்திற்கொண்டு எமது எதிர்கால செயற்பாடுகள் அமையும் என்றார்.

முதலைமடு ஆற்றில் முதலைகள் நடமாட்டத்தால் மீனவர்கள் அச்சம்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பால்துறை ஆறு மற்றும் இடிமண் துறை முதலை மடு ஆறுகளில் உலாவும் முதலைகளால்,மீனவர்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். இவ்வாறு உலவும் முதலைகளால், விவசாயிகள், தோட்டச் செய்கையாளர்கள், கால்நடை வளர்ப்போர்கள், நன்னீர் மீன்பிடியாளர்கள் தங்களது தொழில்களில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, மீனவர்களே, இம்முதலைகளால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, இம்முதலைகளைப் பிடிப்தற்கு அல்லது கொல்வதற்கு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றுக்கு விரைவில் மனு தாக்கல் தேர்தலை நடத்த முடியாத சூழல்

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சி ஹேவா

லோரன்ஸ் செல்வநாயகம்

ஏற்கனவே உறுதியளித்துள்ளபடி எதிர்வரும் மார்ச் ஒன்பதாம் திகதி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளதென,உச்ச நீதிமன்றத்திற்கு மனு ஒன்றைத் தாக்கல் செய்ய,தேர்தல் ஆணைக்குழு த் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா, நிதி இல்லாத காரணத்தினால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளதாக நீதிமன்றத்திற்கு, அறிவிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவானது ஏற்கனவே மார்ச் ஒன்பதாம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவது உறுதியென நீதிமன்றத்திற்கு தெரிவித்திருந்தது.

அந்த நிலையிலேயே தீர்மானித்தபடி தேர்தலை நடத்துவதற்கு தடைகள் எதுவும் கிடையாது என்றும் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தேர்தலை நடத்த முடியாது என்றும், இந்நிலையை தெளிவுபடுத்தி மனு ஒன்றை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றில் நேற்று மாபெரும் இரத்ததான முகாம்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்றில் மாபெரும் இரத்ததான முகாம் அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி, மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம். அப்துல்லா, ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல அமைப்பாளர் தொழிலதிபர் எம்.ஐ.கே.ஆர்.புகாரி, பிரபல சமூக சேவகர் டாக்டர் கே.எல்.எம்.நக்பர், அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எம்,ஏ. றாசீக், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வாய்ப்புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

பாலமுனை விசேட நிருபர்

வாய்ச்சுகாதாரம் மற்றும் வாய்ப்புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை (17) இடம்பெற்றது.

பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எம். எம்.றஹீம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், பல் வைத்தியர்களான டொக்டர் ஏ.ஆர்.எம். கடாபி, டொக்டர் எம்.ஆர்.ஜி.என். குமாரி, டொக்டர் எஸ்.என்.டயஸ் ஆகியோர் வாய்ச்சுகாதாரம் மற்றும் வாய்ப்புற்று நோய் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதன்போது, தாதிய பரிபாலகர் பீ.ரகுநாதமூர்த்தி, விடுதி முகாமையாளர் எம்.எம்.அமானுல்லா ஆகியோருடன் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் நோயாளர்கள் எனப் பலரும் பலந்துகொண்டனர்.

நகர்வலம்

கட்டானை பிரதேசத்தை விமான நகரமாக அபிவிருத்தி செய்ய அரசு திட்டம்

10 வருட திட்டமாக முன்னெடுக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கட்டானை நகரை விமான நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

10 வருடத் திட்டமாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்துள்ள அமைச்சர், அதற்கான அபிவிருத்தி திட்ட சட்ட மூலத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை தயாரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமூலமாக்கப்படும் கட்டானை நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான முக்கிய கலந்துரையாடலொன்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

கட்டுநாயக்க சீதுவை நகர சபை மற்றும் கட்டான பிரதேச சபை ஆகிய நிர்வாக பிரதேசங்கள் இரண்டையும் இணைத்ததாக கட்டான நகர அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இந்தாண்டு முதல் 2033 ஆம் ஆண்டுவரை 10 வருடத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கட்டுநாயக்க சீதுவை நிர்வாக பிரதேசத்தை போக்குவரத்து, விமான பொருட்கள் மற்றும் சுற்றுலா சேவைகளை வழங்கும் உலகின் அங்கீகரிக்கப்பட்ட விமான நகரமாக உருவாக்கப்படும். அத்துடன் கட்டானை நிர்வாக பிரதேசமாகவும் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணும் பிரதேசமாகவும் அனைத்து வசதிகளையும் கொண்ட நகரமாகவும் கட்டியெழுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நகர அபிவிருத்தி நிர்வாக பிரதேசமாக நியமிக்கப்படும் எந்தவொரு பிரதேசமும் நகர அபிவிருத்தி திட்டத்திற்காக பயன்படுத்தப்படும். அதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடுகளை மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளது. 1978 / 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம் மூலம் அது உரித்தாகிறது.

பேருவளை புகாரி தக்கியாவில் 144வது வருட புகாரி மஜ்லிஸ்

(பேருவளை விசேட நிருபர்)

வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புகாரித் தக்கியாவில் 144வது வருட புனித ஸஹீஹுல் புகாரி தமாம் மஜ்லிஸ் பெரிய கந்தூரி வைபவம் நாளை 21ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காதிரியதுன் நபவிய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமும் பாழில் அஷ்செய்ஹ் காமில் அஷ்செய்க் அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தமாம் மஜ்லிஸுக்குத் தலைமை வகிப்பார்.

வெள்ளிக்கிழமை தவிர 30 நாட்கள் ஹதீஸ் பாராயணம் மற்றும் விளக்கவுரை நடைபெற்று வருவதோடு நாளை பகல் தமாம் பெரிய கந்தூரி நடைபெறும்.

இன்று 20ம் மற்றும் 21ம் திகதிகளில் இலங்கை ரயில்வே திணைக்களம் வழமைபோல் கொழும்பு பேருவளை மற்றும் காலி பேருவளை இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தும். அத்தோடு கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில் வண்டிகளும் பேருவளையில் நிறுத்தப்படும். 20ம் திகதி இரவு மற்றும் 21 ஆம் திகதி பகல் நடைபெறும் தமாம் மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த உலமாக்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள், பெருமளவில் பங்குபற்றுவர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்; 55,750 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 57 ஆயிரத்து 311 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்தது.

அதில் 1561 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி இம்முறை மாவட்டத்தில் இருந்து 55 ஆயிரத்து 750 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக அலுவலகம் மேலும் தெரிவித்தது.

'எங்கள் தேசம்' பத்திரிகை ஆசிரியர் அப்துல்லா அஸாம் காலமானார்

புத்தளம் தினகரன் நிருபர்)

அல்ஹஸனாத் மற்றும் எங்கள் தேசம் பத்திரிகைகளின் முன்னாள் நிர்வாக ஆசிரியர் அஷ்ஷெய்க் அப்துல் லாஹ் அஸாம் (இஸ்லாஹி) சனிக்கிழமை (18) கொழும்பில் காலமானார். அன்னாரின் ஜனாஸா,நேற்று ஞாயிற்றுக்கிழமை (19) காலை 09 மணிக்கு அன்னாரின் பிறப்பிடமான புத்தளம், பகாபள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.அன்னாரின் நல்லடக்கத்தில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பெருந்தரளானோர் கலந்து கொண்டனர்.

குருநாகல் நகர ATM இயந்திரம் உடைப்பு;

1 கோடி ரூபா பணத்தினை திருடிய சந்தேக நபர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

குருநாகல் நகரிலுள்ள அரச வங்கியொன்றின் ATM இயந்திரத்தினை உடைத்து ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான பணத்தினை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை குருணாகல் தலமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் (16) கைது செய்துள்ளனர்.

குருநாகல் கெட்டுவான சந்தியில் பொருத்தப்பட்டிருக்கும் அரச வங்கிக்குச் சொந்தமான ATM இயந்திரத்தினை புதுப்பிக்கும் போர்வையில் வந்து கடந்த 04 ஆம் திகதி அதனை உடைத்து ஒருகோடி ரூபாவிற்கும் அதிகமான பணத்தினை திருடிய சம்பவம் தொடர்பில் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பிங்கிரிய பொலிஸ் பிரிவிலுள்ள ஊரதென்ன வீதி பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த போது குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட 40 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா பணத்தினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் எப்பாவல பகுதியை வசிப்பிடமாக கொண்ட 33 வயதுடய அதிகாரி முதியன்சலாகே விதுஷ இந்துணில் அதிகாரி என்பவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலன்னறுவ மின்னேரிய இராணுவ முகாமிற்கு முன்னால் பொருத்தப்பட்டிருக்கும் ATM இயந்திரத்தையும் உடைத்து பணத்தினை திருடிய சம்பவம் மற்றும் அநுராதபுரம் பகுதியிலுள்ள இரண்டு ATM இயந்திரங்கள் மற்றும் பிங்கிரிய பகுதியிலுள்ள ATM இயந்திரங்களை உடைத்து பணத்தினை திருடுவதற்கு முயற்சித்துள்ளதும் சந்தேக நபரே என்பது மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் திருடிய பணத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள தங்க நகை மற்றும் மோட்டார் சைக்கில் அதி நவீன கையடக்க தொலைபேசி என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். திருடப்பட்ட எஞ்சிய பணத்தினையும் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி குருநாகல் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவு; 48 மணித்தியாலங்களில் மூவர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்

அநுராதபுரம் பொலிஸ் பிரிவு மற்றும் கெப்பித்திகொள்ளாவ பொலிஸ் பிரிவுகளில் கடந்த 48 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் பிக்கு ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்த மேலும் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் சிராவஸ்திபுர மற்றும் கவறக்குளம் பொலிஸ் பிரிவின் உணகஸ்வெவ பகுதியிலும் கெப்பித்திகொள்ளாவ பொலிஸ் பிரிவின் பூனேவ மஹகுபுக்கொள்ளாவ பகுதிகளிலேயே இவ்விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவர்களில் 13 வயது சிறுமி ஒருவரும் உள்ளடங்குகின்றார். காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் வவுனியா வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் மற்றும் கவறக்குளம், கெப்பித்திகொள்ளாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2023ஆம் வருடத்திற்கான ஹஜ் குழு நியமனம்

தலைவராக இப்ராஹிம் அன்ஸார்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்கள புதிய பணிப்பாளர் உட்பட 05 பேர், 2023ஆம் வருட ஹஜ் குழு உறுப்பினர்களாக புத்தசாசன மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் கலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் இவ்வருடத்திற்கான ஹஜ் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இசட்.ஏ.எம். பைஸல் (பணிப்பாளர், முஸ்லிம் சமய கலாசார திணைக்களம்), இபாஸ் நபுஹான், நிப்ராஸ் நஸீர், மில்பர்

கபூர், அஹ்கம் உவைஸ் ஆகியோர் புதிய ஹஜ் குழுவின் உறுப்பினர்களாகவும் அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வக்பு சபை புதிய உறுப்பினர்கள் நியமனம்

மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

வக்பு சபைக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம் புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் சனியன்று (15) நியமிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் உட்பட நியமிக்கப்பட்டுள்ள சபையின் புதிய தலைவராக மொஹிடீன் ஹுசைன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உறுப்பினர்களாக இசட். ஏ. எம். பைஸல் (முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர்.) பேராசிரியர் .பி.ஸீ.பி. ஜவ்பர், சட்டத்தரணி எம்.ஏ. மதீன், எம்.எம்.ஆர்.

எம். சபர், மாஹில்டூல் , ஏ.ஏ.நஸார், எம்.ரியாஸ்சாலி ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தில் மஹா சிவராத்திரி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்ற சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வுகள் நேற்று அதிகாலை வரை இடம்பெற்றன.

ஆலயத்தின் பிரதம குருவும் தர்தகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் தலைமையில் இந்த மஹா சிவராத்திரி நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன. மேற்படி நிகழ்வில் மாலை 3 மணிக்கு மஹாபிரதோஷ 108 சங்காபிஷேகம் சாயரக்ஷை பூஜையும், இரவு 7 மணிக்கு முதலாம் சாம பூஜை தொடர்ந்து 2 ஆம் கால பூஜையும், இரவு 10.30 மணிக்கு இரண்டாம் சாம பூஜையும், விஷேட பூஜையும் இடம்பெற்றன.சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் மஹா சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆலயத்தின் பிரதம குருவும் தர்தகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் தலைமையில் இந்த மஹா சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மல்வானை அல்மஹ்மூத் மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபர்

மல்வானை அல் மஹ்மூத் மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக எம்.எம். எம். ரிம்ஸான் (SLPS) நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா மற்றும் களனி வலய தமிழ் மொழி பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.டீ.எம். தௌஸீரினால் கடந்த 7ஆம் திகதி அவருக்கான நியமனக்கடிதம் உத்தியோகபூர்வமாக பாடசாலை வளாகத்தில் வழங்கி வைக்கப்பட்டது. அதனையடுத்து புதிய அதிபர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராக நீண்ட காலம் சேவையாற்றிய இவர், பதவி உயர்வு பெற்ற நிலையில் தற்போது மல்வானை உலஹிட்டிவல, அல் மஹ்மூத் மகாவித்தியாலயத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அல் மஹ்மூத் மகாவித்தியாலயத்தில் சுமார் 12 வருடங்கள் சேவையாற்றி பல அர்ப்பணிப்புக்களை செய்து பாடசாலையை முன்னேற்றுவதற்கு வழிநடத்திச் சென்ற முன்னாள் அதிபர் எம். ரீ.எம்.உஸ்மான் (SLPS) இடமாற்றம் பெற்றுச் செல்ல இருந்த நிலையில் திடீர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தம்புத்தேகமவில் 'பசுமையான நகர சூழல்' திட்டம் முன்னெடுப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

தூய்மையான மற்றும் பசுமையான நகர சூழல் ஒன்றை உருவாக்கும் நோக்கில், தம்புத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பிரதேச செயலாளர் திரு.சுமித் கே.சோமரத்னவின் வழிகாட்டலின் கீழ், இந்த வேலைத் திட்டத்தின் முதற்கட்ட வேலை திட்டமாக தம்புத்தேகம ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டு, பசுமையான மரங்கள், பூஞ்செடிகள் நட்டி வைக்கப்பட்டன. இவ் வேலைத் திட்டம் அண்மையில் தம்புத்தேகம நகரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தம்புத்தேகம இளைஞர் சங்க அங்கத்தவர்களின் முயற்சியால், இங்குள்ள ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மரங்களை துப்புரவு செய்தல் மற்றும் புதிய இன மரக்கன்றுகளை நடுதல் , அழகு தரும் பூக்கன்றுகளை நடுதல், ஏற்கனவே நடப்பட்டிருந்த மரங்கள் மற்றும் பூ மரங்கள் செடி கொடிகளை ஒழுங்குபடுத்தி அழகுறச் செய்தல் போன்ற பல்வேறு வேலை திட்டங்கள் இங்கு இடம் பெற்றன.

இதற்காக தமுத்தேகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பல கிராமிய பிரதேச இளைஞர்கள் இதற்காக முன் வந்து தமது பங்களிப்பையும் மேற்கொண்டிருந்தனர். இந் நிகழ்வில் தம்புத்தேகம பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் நலன்விரும்பிகள், பொது மக்கள் என பலர் இதில் கலந்து சிறப்பித்தனர்.

வெலிகம அறபாவில் இல்ல விளையாட்டு

வெலிகம தினகரன் நிருபர்

வெலிகம அறபா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 22, 23 ம் திகதிகளில் (புதன், வியாழன்) கல்லூரி பதியுத்தின் மஹ்மூத் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் எம். டி.எம் முதஹ்ஹர் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நாள் நிகழ்வுகள் 22 ம் திகதி காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

தேசிய, ஒலிம்பிக் மற்றும் பாடசாலை கொடிகள் ஏற்றி வைத்தல் , சமாதானப் புறாக்கள் பறக்கவிடல் மற்றும் பலூன்கள் பறக்க விடல் போன்றன இடம் பெறவுள்ளதோடு, இறுதி நாள் பரிசளிப்பு வைபவம் 23ம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு இடம் பெறவுள்ளன.

இதில் அணி நடை , உடற்பயிற்சி கண்காட்சி, விநோத உடை , இல்ல அலங்காரம் , பழைய மாணவர்களின் போட்டிகள், போன்ற பல்வேறு சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. இதில் முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அலிசப்ரி ரஹீம் எம்.பியின் சொந்த நிதியிலிருந்து

புத்தளம் தள வைத்தியசாலைக்கு ஒருதொகை மருந்து கையளிப்பு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தனது சொந்த நிதியிலிருந்து ஒரு தொகை மருந்து பொருட்களை புத்தளம் தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சுமித் அவர்களிடம் (16) கையளித்துள்ளார்.

புத்தளம் தள வைத்தியசாலையில் நிலவும் மருந்து பற்றாக்குறை சம்பந்தமாகவும், இதனால் மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் கவனத்திற்கு புத்தளம் தள வைத்திய சாலையின் அதிகாரி டாக்டர் சுமித் மற்றும் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் இளஞ்செழியன் ஆகியோர் கொண்டு வந்திருந்தனர்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இந்த மருந்து பொருட்களை வழங்கியுள்ளார்.

இந்த வைபவத்தில் புத்தளம் தள வைத்தியசாலை விசேட வைத்திய அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு கருத்து தெரிவித்த வைத்திய அதிகாரி சுமித்,

பாராளுமன்ற உறுப்பினரின் இந்த தன்னலமற்ற சேவை மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரிமிக்க செயல் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இதற்கு முன்பும் இவ்வாறான பல சேவைகளை வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளார் என்றும் வைத்தியசாலை என்றும் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) இன் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்	:	**கோல்டன் சிலோன் ரூட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவு இலக்கம்	:	**PV 00270283**
பதிவு முகவரி	:	**369/2B, பின்தாலிய வீதி, கடவத்தை**
கூட்டிணைக்கப்பட்ட திகதி	:	**26.01.2023**

பணிப்பாளர்

மத்திய சுற்றாடல் அதிகார சபை

உத்தேசிக்கப்பட்டுள்ள உணவக வீடுதி மற்றும் பன்குயீட் மண்டபம் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் காமினிஜெம் மற்றும் ஜுவலரி பிரைவட் லிமிடெட்

இல. 312/5, ஹட்சன் வீதி, வாராதென்ன, ஹல்லொலுவ கண்டி

ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கை (ஆசுஆ) இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்

மேற் கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை பூரண ஆய்வின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட சட்டம் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(i) இற்கமைவாக இல. 312/5, ஹட்சன் வீதி, வாராதென்ன, ஹல்லொலுவ விலாசத்தை கொண்ட காமினி ஜெம்ஸ் மற்றும் ஜுவலரியின் பணிப்பாளர் அவர்களுக்கு நடைமுறைபடுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற் கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகம்,
மத்திய சுற்றாடல் அதிகாரசபை,
'பரிசர பியச'
இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

128

டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

டயர்டியூப் கொழும்பு 14 இல் மிகவும் சலுகை விலையில் உத்தர வாதத்துடன் சகல டயர்கள், போத்லிப்ட் டயர்கள் மற்றும் காற்று 600X9 .700X12 28X9X 15. 250X1 5 ஆர்பிடெக் 700X1 6.750X16 900X2 0, 1000X20, இல.15 5 கிரவுன் டயர் கொழும்பு 14. 0773 1 3 4060. 010355

Repeat Your ad For Better Offers

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டம்

எனது இலக்கம்: கடா/க.சு./96
காணி அமைச்சின் தொடர்பு இலக்கம்: 4-3/9/2018/WS/181

இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியானது அரசாங்கத்திற்கு சுவீகரித்துக்கொள்ளப் பட்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம்: 2314/39 மற்றும் 2023.01.12ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

அட்டவணை

பிரதேச செயலகம்	:	கடான
கிராமத்தின் பெயர்	:	ஹரக்காலேகம
காணியின் பெயர்	:	மில்லகஹமுகலாந அல்லது மில்லகஹவத்த
திட்டப்பட இலக்கம்	:	நிலப்பரப்பு வரைபட இலக்கம் 511200
துண்டு இலக்கம்	:	02 மற்றும் 03
விஸ்தீரணம்	:	0.1265 ஹெக்டயார்

பிரியங்கா கொடிதுவக்கு
பிரதேச செயலாளர் மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி - கடான

2023.02.13ஆம் திகதி
கடான பிரதேச செயலகத்தில்.

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டம்

எனது இலக்கம்: கடா/க.சு./98
காணி அமைச்சின் தொடர்பு இலக்கம்: 4-3/9/2018/WS/208

இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியானது அரசாங்கத்திற்கு சுவீகரித்துக்கொள்ளப் பட்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம்: 2314/39 மற்றும் 2023.01.12ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

அட்டவணை

பிரதேச செயலகம்	:	கடான
கிராமத்தின் பெயர்	:	ஆடிஅம்பலம்
காணியின் பெயர்	:	முவகிரியகொடெல்ல அல்லது ஹெடவககஹவத்த அல்லது முகவிரியவெல் கொடெல்ல அல்லது பிஹிபியகஹவத்த
திட்டப்பட இலக்கம்	:	நிலப்பரப்பு வரைபட இலக்கம் 511204
துண்டு இலக்கம்	:	1
விஸ்தீரணம்	:	0.1086 ஹெக்டயார்

பிரியங்கா கொடிதுவக்கு
பிரதேச செயலாளர் மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி - கடான

2023.02.13ஆம் திகதி
கடான பிரதேச செயலகத்தில்.

விலைமனு கோரல்

மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்

வாகன சுத்திகரிப்பு செய்தல்

NP/04/42/DGH/MN/02/09/2023/Vehicle/01

1. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குப் பின்வரும் சேவைகளுக்காக தகுதியான, தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

பெறுகை இல	கேள்வி ஆவணம் வழங்குதல்/ பெற்றுக்கொள்ளுதல்		20.02.2023 முதல் 13.03.2023 வரை காலை 9.00 தொடக்கம் 15.00 (கிழமை நாட்களில்)	
NP/04/42/DGH/ MN/02/09/2023/01	முதற் கூட்டம்		**28.02.2023 பி.ப. 02.30 மணிக்கு கணக்குக் கிளை மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார்**	
கேள்வி மூடுதல்/ திறத்தல்	14.03.2023 பி.ப. 3.30		கேள்விப் பிணை விபரம்	
வேலை விபரம்	**ஒப்பந்த காலம்**	**மீளளிக்கப்படா தொகை (ரூ.)**	**தொகை (ரூ.)**	**தேவைப்படும் காலம்**
வாகன சுத்திகரிப்பு செய்தல்	01 வருடம்	ரூபா 2500.00	ரூபா 70,000.00	14.03.2023 - 30.05.2023

2. வாகன சுத்திகரிப்பு செய்பவர் ஒரு நபராகவோ அல்லது ஒரு தனி நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். தகுதிச்சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. தகுதியைப் பெற்றுக்கொள்வதற்கு வெற்றி கொண்ட விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இருத்தலாகாது.
   1. வியாபார பதிவுச் சான்றிதழ் காணப்படும்.
   2. அலுவலகம்/ கிளை வடமாகாணத்தில் அமைந்து இருத்தல் வேண்டும்.
4. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பெறுகைக்கான ஆங்கில விண்ணப்பப் படிவத்தினை அலுவலக நாட்களில் 20.02.2023 தொடக்கம் 13.03.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
5. 14.03.2023ந் திகதி 15.30 மணிக்கு முன்பாக பெறுகை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். குறித்த நேரத்திற்கு பின்னர் கிடைக்கும் பெறுகை ஆவணங்கள் நிராகரிக்கப்படும். பெறுகை ஏற்றுக்கொள்ளல் நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

தலைவர்
பிராந்திய பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
மன்னார்.
தொலை இல. 023-2222261

கேள்வி அழைப்பு

புத்த சாசன, மத, கலாசார விவகாரங்கள் அமைச்சு
தேசிய சுவடிகள் திணைக்களம்

2023/2024 ஆண்டு காலத்திற்காக துப்புரவேற்பாட்டு சேவையை வழங்குதல்

தேசிய சுவடிகள் திணைக்களம் 2023/2024 ஆண்டு காலத்திற்காக துப்புறவேற்பாட்டு சேவையை வழங்குவதற்கு அரசில் பதிவு செய்துள்ள துப்புறவேற்பாட்டு சேவை நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன

2023.02.20 முதல் 2023.03.07 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை மீளளிக்கப்படாத ரூ. 3000.00 தொகையை தேசிய சுவடிகள் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை நிறுவனப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2022.03.07 பி.ப. 2.00 வரை கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அன்று பி.ப. 2.00 இற்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் அன்று பி.ப. 2.00 இன் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

1. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்காக தேசிய சுவடிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவண மாதிரிப் பத்திரங்களை மாத்திரம் பாவித்தல் வேண்டும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பங்களும் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய சுவடிகள் திணைக்களம் இல. 07, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புதல் அல்லது அவ்வாறு இல்லையெனில் தேசிய சுவடிகள் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
4. விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'துப்புரவேற்பாட்டு சேவை வழங்குதல் 2023/2024' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
5. பெறுகை விண்ணப்பத்துடன் இலங்கையில் அங்கிகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் எழுதப்பட்ட 90 நாள் காலத்திற்கு பெற்றுக் கொண்ட ரூ. 60,000/- பெறுமதி உடைய கேள்வி பிணை முறையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அதன் சார்பாக தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு மேற்படி பெறுமதி உடைய நிதியை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
7. எந்தக் கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தேசிய சுவடிகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.
8. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இல. 011 2696072 ஊடாக நிர்வாக அதிகாரியை அழைக்கலாம்.

தலைர்,
திணைக்கள பெறுகைக்குழு.
தேசிய சுவடிகள் திணைக்களம்,
இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு -07.
தொ.பே. இல. 011-2696917, 011-2696072

கேள்விகளுக்கான அழைப்பு

(இலங்கை அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்படும் செயற்றிட்டம்)

விவசாயத் திணைக்களம் – பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் நிர்மாணத்திற்காக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இக்டாட் (ICTAD) அல்லது சிடா (CIDA) பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2023-02-20ஆம் திகதி முதல் 2023-03-10ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் இந்தத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திலிருந்து கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-03-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபாலின் மூலம் அனுப்பியோ கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த வேலைகள் தொடர்பில் மேலும் தகவல்கள் தேவைப்படின் விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறிந்துகொள்ளலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்வி இல.	கொள்வனவு செய்யும் பொருள் / சேவை	ICTAD / CIDA பதிவு	மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம்	கேள்விப் பிணை	
				பணமாகச் செலுத்துவ தானால் (ரூபா சதம்)	வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்ப தானால் (ரூபாசதம்)
விரி/ப/ 06/02/2023-09	பெல்வெஹெர விவசாயப் பாடசாலை அலுவலகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (ரூபா **3,621,175.10**)	C7 அல்லது C8	3,500.00	36,200.00	72,400.00
விரி/ப/ 06/02/2023-12	அனுராதபுரம் விவசாயப் பாடசாலையின் நிர்வாகக் கட்டிடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரவேச பாதைகளுக்கு கற்களைப் பதித்தல் (Interlock Block) (ரூபா 3,248,600.00)	C7 அல்லது C8	3,500.00	32,500.00	65,000.00
விரி/ப/ 06/02/2023-15	வீரவில மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் தொழிலாளர் விடுதிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (ரூபா 4,954,529.40)	C7 அல்லது C8	3,500.00	50,000.00	100,000.00

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம்,
விவசாயத் திணைக்களம்,
பழைய கலஹா வீதி, பேராதனை.

தொலைபேசி இலக்கம் : 081-2389127
தொலைநகல் : 081-2389127

கொழும்பு அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆ பள்ளிவாசலில் மிஃராஜ் தின நிகழ்வு

ருஸைக் பாரூக், எம்.எஸ்.எம்.ஸாகிர்

புனித மிஃராஜ் தின நிகழ்வு (18) சனிக்கிழமை இரவு கொழும்பு 12, கெஸல்வத்தை அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலில் இரவு 8 மணி முதல் நடைபெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில், அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி எம்.எஸ்.எம்.நூருல்லா 'மிஹ்ராஜ் இரவின் முக்கியத்துவம்' பற்றி உரை நிகழ்த்தினார்.

இஹ்ஸானிய்யா அரபிக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எப்.எம். பரூத் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறப்பு பிரார்த்தனைகளை (துஆ) நடத்தினார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் உலமாக்கள், முக்கிய பிரமுகர்கள், முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் உட்பட வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அந் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எச். அம்ஜதீன் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் விசேட அம்சமாக கொழும்பு 12, கெஸல்வத்தை அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலின் நூற்றாண்டை முன்னிட்டு, பள்ளிவாசலுக்கு டயஸ் செயார் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹனீபா ஹாஜியார் சோலா பவர் வழங்குவதற்கான ஆவணங்களையும் இதன்போது கையளித்தார்.

ஆசிய அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ்;

விவசாயிகளுக்கு உதவுவதற்கு ரூ. 800 கோடி நிதி ஒதுக்கீடு

வைப்பிலிடுவதில் இடையூறு என்கிறார் அமைச்சர் அமரவீர

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ், விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவுவதற்காக 800 கோடி ரூபா வழங்கப்பட்டது. இப்பணத்தினை 12 இலட்சம் விவசாயிகளினதும் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்தாவது, விவசாயிகளினது வங்கிக் கணக்குகளுக்கு பணத்தினை வைப்பிலிடும் செயற்பாடு தாமதமாவதற்கான காரணம் வங்கிக் கணக்கு இலக்கங்களினை தவறுதலாக வழங்கியமையாகும். இதனால் 130 கோடி ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. ஒருசில அதிகாரிகளின் இடையூறுகளினால் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. சில பிரதேசங்களிலிருந்து கமநல அபிவிருத்தி திணைக்களங்களுக்கு இதுவரை விவசாயிகளினது வங்கிக் கணக்கு இலக்கங்கள் கிடைத்திருக்கவில்லை எனவும் தெரிய வந்தள்ளது.

இரண்டு அரசியல் கட்சிகளின் ஆலோசனைப்படி ஒருசில அதிகாரிகள் இந்த இடையூறு செயலினை செய்துள்ளார்கள். இதனால் இந்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இவற்றிற்கு தேவையான ஆலோசனைகளை அமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ளேன். நெல் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 800 கோடி ரூபாயினை வழங்கியிருந்தது.

பெரும்போகத்தின் போது நெல் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரெயாருக்கு 10,000 ரூபாவும் இரண்டு ஹெக்ரெயார்களுக்கு 20,000 ரூபாவும் விவசாயிகளினது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைப்பதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென 650 கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட முடிந்துள்ளது. வங்கிக் கணக்குகளை தவறுதலாக வழங்கியதினால் 130 கோடி மீளதிரும்பப் பெற்றுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – 2023ஆம் வருடம்

ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் (PSSP)

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணம் மற்றும் திருத்தவேலை திட்டங்களுக்காக கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1	விலைக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம்	2023-02-20ஆம் திகதி முதல் 2023-03-13ஆம் திகதி வரையிலான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையில் போகம்பர எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இந்த காலத்தினுள் வருகை தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2	பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம்	2023-03-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் விலைமனுக்களை உள்ளிடலாம்.
3	விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம்	2023-03-14ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
4	விலைக்கோரல் பிணை முறி	கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண காப்பு நிதியத்தினால் அல்லது காப்புறுதிச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியிலான விலைக் கோரல் பிணை முறியொன்று சகல விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5	பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இடம்	பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 56, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி.
6	விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்	விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
7	விலைக்கோரலுக்கு இயைபான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு	• கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளர் அல்லது நிர்மாணத்திற்குப் பொறுப்பான அதிகாரியின் தொலைபேசி இலக்கம்: 081-2236452/ 081-2232456 • பொறியியல் சேவை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அல்லது பிராந்திய பொறியியலாளரிடமிருந்து (கண்டி / தெல்தெனிய / ஹாரிஸ்பத்துவ) தொலைபேசி இலக்கங்களில் முறையாக 081-2201624 / 081-2203611 / 081-2204806 / 081-2203693
8	ஏனையவை	• சகல விலைமனுக்களும் மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும் • விலைக்கோரலைக் கையளிக்கும் இறுதித் தீர்மானத்தை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தொ. இலக்கம்	நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்	பதிவு (CIDA Grade)	பொறியியலாளர் அளவுப் பத்திர தொகை (வெட் இன்றி) ரூபா	மீளளிக்கப் படாத தொகை (ரூபா)	விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி		பிணை முறியின் செல்லுபடிக் காலம்
					ரொக்கப் பணமாக (ரூபா)	ரொக்கப் பணமாக அல்லாவிடில் (ரூபா)	
01	கடுகண்ணாவ பிரதேச வைத்தியசாலையின் கழிவு நீர் முறைமையின் திருத்தவேலைகள்	C7,C8 or C9	2,956,720.80	2,000.00	59,000.00	29,500.00	91 நாட்கள்
02	ஹாரிஸ்பத்துவ சுகாதார வைத்திய அதிகாரியின் உத்தியோகபூர்வ விடுதி திருத்தவேலைகள்	C7,C8 or C9	3,293,901.86	2,000.00	66,000.00	33,000.00	91 நாட்கள்
03	அலவத்துகொட ஆரம்ப மருத்துவ பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C6,C7 or C8	4,565,292.24	2,000.00	91,000.00	45,500.00	105 நாட்கள்
04	முருத்தலாவ பிராந்திய வைத்தியசாலையில் குப்பைகளை எரியூட்டும் செயற்பாட்டாளர்களின் ஓய்வு அறையை நிர்மாணித்தல்	C7,C8 or C9	3,031,639.48	2,000.00	60,000.00	30,000.00	91 நாட்கள்
05	அக்குரணை பிரதேச வைத்தியசாலையின் 01, 02, 03 மற்றும் 04ஆம் இலக்க வார்ட்டுகளின் திருத்தவேலைகள்	C7,C8 or C9	3,653,492.00	2,000.00	73,000.00	36,500.00	91 நாட்கள்
06	ரம்புக்கேஎல ஆரம்ப மருத்துவ பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C7,C8 or C9	1,815,300.02	1,000.00	36,000.00	18,000.00	91 நாட்கள்
07	கடுகண்ணாவ பிரதேச வைத்தயிசாலையின் மருத்துவக் களஞ்சியசாலைக் கட்டிடத்தை மேம்படுத்துதல்	C7,C8 or C9	3,060,696.25	2,000.00	61,000.00	30,500.00	91 நாட்கள்
08	பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு சிகிச்சையகத்தின் திருத்தவேலைகள்	C8 or C9	1,106,148.15	1,000.00	22,000.00	11,000.00	77 நாட்கள்
09	கஹவத்த பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C6,C7 or C8	6,592,368.35	3,000.00	132,000.00	66,000.00	105 நாட்கள்
10	கட்டுகஸ்தொட்ட பாடசாலை மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் மக்கள் மனநல சுகாதார வள நிலையத்தில் நுழைவாயில் மற்றும் காத்திருக்கும் பகுதியை நிர்மாணித்தல்	C6,C7 or C8	7,214,642.10	3,000.00	144,000.00	72,000.00	105 நாட்கள்
11	புஸ்ஸெல்லாவ பிரதேச வைத்தியசாலையில் காச நோய் ஆய்வுகூடத்திற்கு சளி மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளும் கூடாரத்தை நிர்மாணித்தல்	C8 or C9	520,274.15	1,000.00	10,000.00	5,000.00	77 நாட்கள்
12	கலஹா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சிகிச்சை நிலையத்தை விஸ்தரித்தல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்	C5,C6 or C7	13,499,244.88	4,000.00	270,000.00	135,000.00	105 நாட்கள்
13	கட்டுகஸ்தொட்ட பிரதேச வைத்தியசாலையில் சுவதிவி சிகிச்சைக்காக விளையாடும் இடத்தை நிர்மாணித்தல்	C8 or C9	1,597,699.00	1,000.00	32,000.00	16,000.00	77 நாட்கள்
14	சுதுகம்பொல ஆரம்ப சுகாதார பிரிவின் வெளி நோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C5,C6 or C7	9,060,352.80	3,000.00	181,000.00	90,500.00	105 நாட்கள்
15	உடுகம அட்டபாகே பிரதேச வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் கராஜ் மற்றும் சாரதி ஓய்வறையை நிர்மாணித்தல்	C6,C7 or C8	7,613,004.45	3,000.00	152,000.00	76,000.00	105 நாட்கள்
16	பட்டிய பல்லேகம பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C6,C7 or C8	6,292,571.46	3,000.00	126,000.00	63,000.00	105 நாட்கள்
17	உலப்பனை பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவின் திருத்தவேலைகள் (மிகுதி வேலைகள்)	C7,C8 or C9	3,404,977.20	2,000.00	68,000.00	34,000.00	91 நாட்கள்
18	ஐம்புகஹபிட்டிய பிரதேச வைத்தியசாலையின் சிகிச்சையகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (மிகுதி வேலைகள்)	C8 or C9	1,167,441.30	1,000.00	24,000.00	12,000.00	77 நாட்கள்
19	தெல்தொட்ட பிரதேச வைத்தியசாலையின் தாழ்வாரம் மற்றும் சரிவுப் பாதையை நிர்மாணித்தல் (கட்டம் 2 - மிகுதி வேலைகள்)	C7, C8 or C9	4,497,918.30	2,000.00	90,000.00	45,000.00	105 நாட்கள்
20	குருந்துவத்த சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் பரகல சுகாதார நிலையத்தின் திருத்தவேலைகள்	C6,C7 or C8	6,247,163.60	3,000.00	125,000.00	62,500.00	105 நாட்கள்
21	கட்டுகஸ்தொட்ட பிரதேச வைத்தியசாலையில் வாதநோய் மற்றும் குடம்பியியல் ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல்	C5,C6 or C7	10,134,236.80	4,000.00	203,000.00	101,500.00	105 நாட்கள்
22	துன்ஹின்ன பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் சுவதிவி சிகிச்சை கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C6,C7 or C8	5,888,012.55	3,000.00	118,000.00	59,000.00	105 நாட்கள்
23	அம்பகஹபெலெஸ்ஸ பிரதேச வைத்தியசாலையின் நிறுவனப் பொறுப்பு வைத்திய அதிகாரி இல்லத்தின் திருத்தவேலைகள்	C7,C8 or C9	3,765,930.50	2,000.00	75,000.00	37,500.00	91 நாட்கள்
24	கொலொன்கொட பிரதேச வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு மற்றும் வார்ட்டுகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல்	C8 or C9	1,566,200.30	1,000.00	31,000.00	15,500.00	77 நாட்கள்
25	பட்டுமுல்ல பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் முன்பக்க நுழைவாயிலின் திருத்தவேலைகள்	C8 or C9	900,226.60	1,000.00	18,000.00	9,000.00	70 நாட்கள்
26	பட்டுமுல்ல பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C7, C8 or C9	2,687,461.70	2,000.00	54,000.00	27,000.00	84 நாட்கள்
27	ஹசலக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மத்திய சிகிச்சையகத்தின் திருத்தவேலைகள்	C6, C7 or C8	5,331,014.67	3,000.00	106,000.00	53,000.00	112 நாட்கள்
28	மகுள்தெனிய ஆரம்ப வைத்திய பிரிவின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் சுபதிவி சிகிச்சைக் கட்டிடத்தின் திருத்தவேவைகள்	C7,C8 or C9	3,884,216.78	2,000.00	78,000.00	39,000.00	98 நாட்கள்
29	கொலொன்கொட பிரதேச வைத்தியசாலையின் தாய்மார் மற்றும் மருந்துக் களஞ்சியசாலைக் கட்டிடத்தின் திருத்தவேலைகள்	C7,C8 or C9	4,146,564.07	2,000.00	83,000.00	41,500.00	98 நாட்கள்
30	மொரயாய மினிபே பிரதேச வைத்தியசாலையில் நிலக்கீழ் நீர் சேமிப்புத் தாங்கியை நிர்மாணித்தல்	C7,C8 or C9	3,863,771.50	2,000.00	77,000.00	38,500.00	98 நாட்கள்
31	மடுல்கெலே பிரதேச வைத்தியசாலையில் காச நோய் ஆய்வுகூடத்திற்கு சளி மாதிரியைப் பெற்றுக்கொள்வதற்கான கூடாரத்தை நிர்மாணித்தல்	C8 or C9	726,159.15	1,000.00	15,000.00	7,500.00	63 நாட்கள்
32	உடுதும்பர பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமாக மாற்றியமைத்தல் (தற்போதுள்ள வெளி நோயாளர் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்)	C6, C7 or C8	7,000,216.30	3,000.00	140,000.00	70,000.00	119 நாட்கள்
33	வத்தேகம பிரதேச வைத்தியசாலையில் காச நோய் ஆய்வுகூடத்திற்கு சளி மாதிரியைப் பெற்றுக்கொள்வதற்கான கூடாரத்தை நிர்மாணித்தல்	C8 or C9	521,159.15	1,000.00	10,000.00	5,000.00	63 நாட்கள்
34	ஐம்புகஹபிட்டிய பிரதேச வைத்தியசாலையின் குடும்ப சுகாதார சேவை அதிகாரியின் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள்	C7. C8 or C9	4,624,106.04	3,000.00	92,000.00	46,000.00	105 நாட்கள்
35	மடோல்கெலே பிரதேச வைத்தியசாலையின் கழிவுநீர் முறைமையின் திருத்தவேலைகள்	C7, C8 or C9	2,707,436.81	2,000.00	54,000.00	27,000.00	91 நாட்கள்
36	மடோல்கெலே பிரதேச வைத்தியசாலையின் நீர் வழங்கல் முறைமையின் திருத்தவேலைகள்	C8 or C9	1,461,039.44	1,000.00	30,000.00	15,000.00	77 நாட்கள்

தலைவர்,
பெறுகைக் குழு,
கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்.

2023-02-20ஆம் திகதி.

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

A FULLY OWNED SUBSIDIARY OF NSB

2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுகள்

2022 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறான நிதி நிலைமைகள் கூற்று

ஆயிரம் ரூபாய்களில்	நடைமுறை காலம் 31/12/2022இல் உள்ளவாறு	முன்னைய காலம் 31/12/2021இல் உள்ளவாறு
சொத்துக்கள்		
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	46,780	64,001
மத்திய வங்கியிலுள்ள மீதிகள்	-	-
வங்கியிலுள்ள இருப்பு	1,963,287	4,710,263
வழித்தோன்றல் நிதிக் கருவிகள்	-	-
கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிச் சொத்துக்கள்		
- கடன்கள் மற்றும் முற்பணங்கள்	805,947	1,356,677
- கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள்	4,426,049	1,282,461
ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள்	-	-
இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள்	102,925	165,196
துணைக் கம்பனிகளில் முதலீடுகள்	-	-
இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களில் முதலீடுகள்	-	-
ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	884,129	896,785
ஆதன பயன்பாட்டு உரிமைகள்	638	2,493
ஆதன முதலீடுகள்	204,977	210,577
நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள்	1,184	669
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	-	-
ஏனைய சொத்துக்கள்	19,204	15,716
மொத்தச் சொத்துக்கள்	**8,455,119**	**8,704,836**
பொறுப்புகள்		
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவைகள்	191	100
ஆக்க நிதியியல் கருவிகள்	-	-
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள்	-	-
- நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டது		
- நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்டது		
கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிப் பொறுப்புகள்		
- வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவைகள்	464,579	764,664
- ஏனைய கடன்பாடுகளுக்குச் செலுத்தவேண்டியவைகள்	301,615	319,244
குத்தகை பொறுப்புகள்	798	3,188
வழங்கிய கடன் பத்திரங்கள்	73,555	89,558
இளைப்பாறல் நலன்புரிகள்	51,461	41,652
நடைமுறையிலுள்ள வரி பொறுப்புகள்	174,383	318,727
பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்	4,155	1,939
ஏனைய ஏற்பாடுகள்	-	-
ஏனைய பொறுப்புகள்	275,281	358,760
துணை நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டியவை	-	-
மொத்தப் பொறுப்புகள்	**1,346,018**	**1,897,832**
பங்குரிமை		
அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம்	3,805,290	3,805,290
நியதிச் சட்ட ஒதுக்க நிதியம்	289,558	266,507
ஏ.வி.வ. ஒதுக்கம்	4,595	66,941
பிடித்துவைக்கப்பட்ட வருவாய்	4,285,872	3,938,822
ஏனைய ஒதுக்கங்கள்	(1,276,214)	(1,270,557)
பங்குதாரர்களுக்கான மொத்த உரிமை	**7,109,101**	**6,807,004**
கட்டுப்பாடற்ற ஈடுபாடு	-	-
மொத்த பங்குரிமை	**7,109,101**	**6,807,004**
மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள்	**8,455,119**	**8,704,836**
எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்	**1,737**	**4,542**
விஞ்ஞாபனத் தகவல்கள்		
மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை	**104**	**106**
கிளைகளின் எண்ணிக்கை	**4**	**4**

2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்குரிய பங்குரிமை மாற்றங்களின் கூற்று

ஆயிரம் ரூபாய்களில்	கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம்		ஒதுக்கங்கள்					மொத்தம்	கட்டுப்பாடற்ற வட்டி	மொத்த பங்குரிமை
	சாதாரண பங்குகள்	ஒதுக்கப்பட்ட மூலதனம்	நியதிகள் சட்ட ஒதுக்க நிதி	ஏ.வி.வ. ஒதுக்கம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	பிடித்து வைக்கப்பட்ட வருவாய்	ஏனைய ஒதுக்கங்கள்			
01/01/2022 அன்றுள்ளவாறான மீதி	**820,446**	**2,984,844**	**266,507**	**66,941**	**895,634**	**3,938,822**	**(2,166,190)**	**6,807,004**	**-**	**6,807,004**
பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம்										
பருவத்திற்கான இலாபம் / (நட்டம்)	-	-	-	-	-	461,007	-	**461,007**	-	**461,007**
ஏனைய பரந்தளவிலான வருமானம் (தேறிய வரியில்)	-	-	-	(62,346)	-	(661)	-	**(63,007)**	-	**(63,007)**
பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம்	**-**	**-**	**-**	**(62,346)**	**-**	**460,346**	**-**	**398,000**	**-**	**398,000**
பங்குடைமையாளர்களுடனான பரிவர்த்தனை/ நேரடியாக பங்குடைமையில் அங்கீகரிக்கப்படுகின்றன.										
வழங்கிய பங்குகள் / ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் அதிகரிப்பு		-	-	-	-	-	-	-	-	-
பயன்படுத்தப்பட்ட பகிர்வு விருப்பங்கள்	-	-	-	-	-	-	-	-	-	-
வழங்கப்பட்ட போனஸ்	-	-	-	-	-	-	-	-	-	-
வழங்கப்பட்ட உரிமங்கள்	-	-	-	-	-	-	-	-	-	-
காலப்பகுதியில் மாற்றப்பட்ட ஒதுக்கங்கள்	-	-	23,050	-	-	23,050	-	-	-	-
பங்குடைமையாளர்களுக்கான பங்கிலாபம்	-	-	-		-		-	-	-	-
ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடுகள் மீதான இலாபம் / (நட்டம்) (கிரய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது)	-	-	-		-	-	-	-	-	-
ஏனையவைகள்	-	-	-		(5,657)	(90,246)	-	**(95,904)**	-	(95,904)
பங்குடைமையாளர்களுடனான மொத்தப் பரிமாற்றங்கள்	-	-	**23,050**	**-**	**(5,657)**	**(113,297)**	**-**	**(95,904)**	**-**	**(95,904)**
31/12/2022 அன்றுள்ளவாறான மீதி	**820,446**	**2,984,844**	**289,558**	**4,595**	**889,976**	**4,285,872**	**(2,166,190)**	**7,109,100**	**-**	**7,109,100**

2022 டிசம்பர் 31ஆம் திகதி உள்ளவாறான நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பாய்வு

அ. வங்கி - 31/12/2022

ஆயிரம் ரூபாய்களில்	AC	FVPL	FVOCI	மொத்தம்
சொத்துக்கள்				
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	46,780			46,780
மத்திய வங்கியிலுள்ள மீதி				-
வங்கிகளிலுள்ள இருப்புகள்	1,963,287			1,963,287
வழித்தோன்றல் நிதிக் கருவிகள்	-			-
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	805,947			805,947
கடன் கருவிகள்	4,426,049			4,426,049
பங்குடைமை கருவிகள்			102,925	102,925
யுனிட் டிரஸ்ட் முதலீடுகள்		-		-
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**7,242,062**	**-**	**102,925**	**7,344,987**

ஆயிரம் ரூபாய்களில்	AC	FVPL	மொத்தம்
பொறுப்புகள்			
வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை	191		191
ஆக்க நிதியியல் கருவிகள்	-	-	-
கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள்	-		-
- வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	464,579		464,579
- ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	301,615		301,615
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	73,555		73,555
மொத்த நிதியியல் பொறுப்புகள்	**839,940**	**-**	**839,940**

ஆ. வங்கி - 31/12/2021

ஆயிரம் ரூபாய்களில்	AC	FVPL	FVOCI	மொத்தம்
சொத்துக்கள்				
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	64,001			64,001
மத்திய வங்கியிலுள்ள மீதி				-
வங்கிகளிலுள்ள இருப்புகள்	4,710,263			4,710,263
வழித்தோன்றல் நிதிக் கருவிகள்	-			-
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	1,356,677			1,356,677
கடன் கருவிகள்	1,282,461			1,282,461
பங்குடைமை கருவிகள்			165,196	165,196
யுனிட் டிரஸ்ட் முதலீடுகள்		-		-
மொத்த நிதியியல் சொத்துக்கள்	**7,413,402**	**-**	**165,196**	**7,578,597**

ஆயிரம் ரூபாய்களில்	AC	FVPL	மொத்தம்
பொறுப்புகள்			
வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை	100		100
ஆக்க நிதியியல் கருவிகள்	-	-	-
கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள்	-	-	-
- வைப்பாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை	764,664		764,664
- ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	319,244		319,244
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	89,558		89,558
மொத்த நிதியியல் பொறுப்புகள்	**1,173,566**	**-**	**1,173,566**

2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான வருமானக் கூற்று

ஆயிரம் ரூபாய்களில்	நடைமுறைக் காலம் 01-01-2022 முதல் 31-12-2022 வரை	முன்னைய காலம் 01-01-2021 முதல் 31-12-2021 வரை
வட்டி வருமானம்	1,119,715	602,160
வட்டிச் செலவினங்கள்	(30,726)	(55,207)
தேறிய வட்டி வருமானம்	**1,088,989**	**546,953**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	330	2,133
கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள்	(29)	(49)
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**301**	**2,084**
வியாபாரம் மூலமான தேறிய இலாபம்/ (நட்டம்)	-	-
இலாபம் அல்லது நட்டம் மூலமாக வடிவமைக்கப்பட்ட நிதியியல் கருவிகளிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்)	-	-
தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம்	128,386	73,699
மொத்த செயற்பாட்டு வருமானம்	**1,217,676**	**622,736**
பெறுமமதி குறைப்பு கட்டணங்கள்	(63,580)	76,073
தேறிய செயற்பாட்டு வருமானம்	**1,154,095**	**698,809**
ஆளணிச் செலவுகள்	(281,654)	(219,766)
பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவுகள்	(10,760)	(9,300)
ஏனைய செலவினங்கள்	(81,496)	(69,749)
நிதியியல் சேவைகள் மீதான VAT வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)	**780,185**	**399,994**
நிதியியல் சேவைகள் மீதான பெ.சே.வரி (VAT)	(141,712)	(69,763)
நிதியியல் சேவைகள் மீதான ச.பாப.வரி (SSCL)	(4,844)	-
VAT வரிக்குப் பின்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)	**633,630**	**330,231**
இணை மற்றும் துணை நிறுவன பங்குகளின் இலாபம்	-	-
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**633,630**	**330,231**
வருமான வரிச் செலவினங்கள்	(172,623)	(75,086)
காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)	**461,007**	**255,145**
பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:		
பங்குரிமையாளர்கள்	461,007	255,145
ஒரு பங்கின் மீது ஈட்டிய பங்கிலாபம்		
சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம்	56	21

2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான விரிவான வருமானக் கூற்று

ஆயிரம் ரூபாய்களில்	01-01-2022 முதல் 31-12-2022 வரை	01-01-2021 முதல் 31-12-2021 வரை
குறித்த காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)	**461,007**	**255,145**
வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்		
வெளிநாட்டு செயற்பாட்டு மொழிபெயர்ப்பு மீதான பரிமாற்றல் வித்தியாசம்		
காசுப் பாய்ச்சல் எல்லை மீதான தேறிய இலாபம் / (நட்டம்)		
கடன் கருவிகளிலுள்ள முதலீடுகள் மீதான தேறிய இலாபம் / (நட்டம்)		
ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை		
இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம்		
ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் உள்ள கடன் கருவிகள்		
கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை		
வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்		
ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட பங்குடைமை கருவிகளின் முதலீடுகள் மீதான நியாயப் பெறுமதியின் மாற்றம்	461,007	255,145
இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மீது வங்கியின் சொந்த கடன் இடர்காப்பில் பகிர்ந்தளிக்கப்பட்ட நியாயப் பெறுமதியின் மாற்றம்		
நலன்புரித் திட்டங்கள் சார்ந்தவை மீதான உண்மையான இலாபம் / (நட்டம்)	(661)	(5,174)
முன்னை ஊழியர்களின் இளைப்பாற்று நலன்புரியின் மீள் மதிப்பீடுகள்		
மேலதிக மீள் மதிப்பீடுகளின் மாற்றம்		
இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம்		
கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை		
குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரியில்	(63,007)	22,010
குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம்	**398,000**	**277,155**

2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

ஆயிரம் ரூபாய்களில்	நடைமுறைக் காலம் 31/12/2022	முன்னைய காலம் 31/12/2021
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
வரிக்கு முன்னரான இலாபம்	633,630	330,231
சீராக்கங்கள்:		
வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள்	(13,828)	(80,134)
செயற்பாட்டு சொத்துக்களின் மாற்றங்கள்	95,750	614,069
செயற்பாட்டு பொறுப்புகளின் மாற்றங்கள்	(334,608)	(806,390)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	-	-
துணை மற்றும் இணை நிறுவனங்களின் இலாபத்தின் பங்கு	-	-
துணை மற்றும் இணை நிறுவனங்களின் பங்கிலாப வருமானம்	-	-
கீழ்நிலைக் கடன்களுக்கான வட்டிச் செலவினங்கள்	-	-
முன்னைய வருடத்திற்கான சீராக்கங்கள்	(95,904)	-
நலன்புரித் திட்டங்களை மையப்படுத்தி செலுத்திய பங்களிப்பு	(1,032)	-
செலுத்திய வரி	(314,751)	(119,082)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு	**(30,743)**	**(61,306)**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்வனவு	(3,365)	(26,209)
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான பெறுகைகள்	18,897	47,329
நிதி முதலீடுகளிலிருந்தான கொள்வனவுகள்	-	-
முதிர்வின்போது விற்பனைக்குள்ள நிதி முதலீடுகளிலிருந்தான பெறுகைகள்	-	-
அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு	(2,100)	(1,070)
துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் முதலீட்டுப் பெறுகைகளின் தேறிய காசுப் பாய்ச்சல்	-	-
துணை நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	-	-
இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான பெறுகைகள்	-	-
துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம்	-	-
ஆதன முதலீடுகளின் கொள்வனவு	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தியவை)	**13,432**	**20,050**
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வழங்கப்பட்ட சாதாரண மூலதனப் பங்கிலிருந்தான தேறிய பெறுகைகள்	-	-
வழங்கப்பட்ட ஏனைய பங்குடைமை கருவிகளிலிருந்தான தேறிய பெறுகைகள்	-	-
வழங்கப்பட்ட துணை நிறுவனக் கடன்களிலிருந்தான தேறிய பெறுகைகள்	-	-
துணை நிறுவனக் கடன்களின் மீள்செலுத்துகை	-	-
துணை நிறுவனக் கடன்களுக்குச் செலுத்திய வட்டி	-	-
கட்டுப்பாடற்ற ஆர்வங்களுக்குச் செலுத்திய பங்கிலாபம்	-	-
தாய் நிறுவன பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம்	-	-
ஏனைய பங்குரிமை கருவி உரிமையாளர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம்	-	-
ஏனையவை	-	-
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு (பயன்படுத்தியவை)	-	-
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	(17,311)	(41,256)
குறித்த காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	63,900	105,156
குறித்த காலப்பகுதியின் முடிவிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**46,589**	**63,900**

2022 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான வைப்புகளின் பகுப்பாய்வு

ஆயிரம் ரூபாய்களில்	வங்கி	
	நடப்பு காலப் பகுதி 31-12-2022	முன்னைய வருடம் 31-12-2021
உற்பத்தி ரீதியில்		
கோரல் வைப்புகள்	-	-
சேமிப்பு வைப்புகள்	132,497	249,911
நிலையான வைப்புகள்	29,061	215,774
பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDB)	303,021	298,979
மொத்தம்	**464,579**	**764,664**

2022 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான கடப்பாடுகள், எதிர்பாராதவைகள் மற்றும் பெறுமதி குறைப்பு, கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு

ஆயிரம் ரூபாய்களில்	வங்கி	
	நடப்பு காலப் பகுதி 31-12-2022	முன்னைய வருடம் 31-12-2021
உற்பத்தி ரீதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்		
உற்பத்தி வகை - உள்நாட்டு நாணயம்		
மேலதிகப் பற்று	-	-
தவணைக் கடன்கள்	851,438	1,259,200
பெறவேண்டிய வாடகைக் குத்தகைகள்	172,973	276,606
கடன் அட்டைகள்	-	-
அடகுச் சேவைகள்	63	2,129
பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDP)	952,326	974,715
வீடமைப்புக் கடன்கள்	15,401	28,280
ஊழியர் கடன்கள்	326,928	293,889
மொத்தம்	**2,319,129**	**2,834,819**
நிலை ரீதியாக கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு		
கழி: 1ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு	(18,740)	(81,707)
2ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு	(36,892)	(17,867)
3ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு	(1,457,551)	(1,378,567)
கடன்கள் மற்றும் முற்பணங்களின் தேறிய பெறுமதி	**805,947**	**1,356,677**
காலப்பகுதிக்கான பெறுமதி குறைப்பின் நகர்வுகள்		
1ம் நிலையின் கீழ்		
ஆரம்ப மீதி	**81,707**	**110,947**
வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு)	**(62,968)**	**(29,240)**
இறுதி மிகுதி	**18,740**	**81,707**
2ம் நிலையின் கீழ்		
ஆரம்ப மீதி	17,867	75,874
வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு)	19,024	(58,007)
இறுதி மிகுதி	**36,892**	**17,867**
3ம் நிலையின் கீழ்		
ஆரம்ப மீதி	1,378,567	1,393,001
வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு)	112,052	9,456
ஏனைய நகர்வுகள்	(33,069)	(23,891)
இறுதி மிகுதி	**1,457,551**	**1,378,567**
மொத்த பெறுமதி குறைப்பு	**1,513,182**	**1,478,142**

2022 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள் (ஒழுங்குபடுத்தப்பட்ட அறிக்கையிடல் அடிப்படையில்)

விடயங்கள்	31/12/2022	31/12/2021
ஒழுங்குபடுத்தல் மூலதனப் போதுமை (ஆயிரம் ரூபாய்களில்)		
பொதுப் பங்குடைமை அடுக்கு 1 (Tier I)	5,708,700	5,742,060
அடுக்கு 1 (Tier I) மூலதனம்	5,708,700	5,742,060
மொத்த அடித்தள மூலதனம்	5,708,700	5,742,060
ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)		
பொதுப் பங்குடைமை அடுக்கு 1 மூலதனம் (%) (ஆகக் குறைந்த தேவை 7%)	161%	101%
அடுக்கு 1 மூலதன விகிதம் (ஆகக் குறைந்த தேவை 8.5%)	161%	101%
மொத்த மூலதன விகிதம் (ஆகக் குறைந்த தேவை 12.50%)	161%	101%
அந்நிய விகிதம் (Leverage ratio) (ஆகக் குறைந்த தேவை 3%)	69%	62%
ஒழுங்குபடுத்தல் திரவத்தன்மை		
நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் (ஆயிரம் ரூபாய்களில்)	5,526,802	4,792,614
நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் % (குறைந்த தேவைப்பாடு 20%)	954%	742%
மொத்தக் கையிருப்பின் உயர் தரத்திலான திரவநிலைச் சொத்து - ரூபா '000	3,015,200	389,139
திரவநிலை முழுத்தழுவல் விகிதம் (%) (ஆகக் குறைந்த தேவை 100%)	8826%	1548%
தேறிய நிலையான நிதி விகிதம் (%) (ஆகக் குறைந்த தேவை 100%)	181%	172%
சொத்துக்களின் தரம் (கடன் துறையின் தரம்)		
மொத்த செயற்படாத முற்பணங்களின் விகிதம் % (தேறிய ஐய வட்டி)	42%	23%
மொத்த செயற்படாத முற்பணங்களின் விகிதம் % (ஐய வட்டியினதும் ஏற்பாடுகளினதும் தேறிய வட்டி)	1%	-4%
கடன் பெறுமதி குறைப்பு (கட்டம் 3) விகிதம் %	5%	4%
கட்டம் 3 கடன் விகிதம் % இற்கான பெறுமதி குறைப்பு (கட்டம் 3)	87%	85%
இலாபத் தன்மை		
வட்டி எல்லை %	15%	7%
சொத்துக்களின் மீதான வருவாய் (வரிக்கு முன்), %	7%	4%
பங்குடைமை மீதான வருவாய் %	7%	4%

அத்தாட்சிப்படுத்துகை:

இலங்கை சேமிப்பு வங்கியைச் சேர்ந்த தலைவர், பொது முகாமையாளர்/பிநிஅ மற்றும் சிரேஷ்ட நிதி முகாமையாளர் ஆகிய கீழ் கையொப்பமிடப்பட்ட நாங்கள் கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனையவை கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்) **கேஷிலா ஜயவர்தன**
தலைவர்
17-02-2023

(ஒப்பம்) **M.A. சுஜித் பெர்னாண்டோ**
பொது முகாமையாளர்/பிநிஅ
17-02-2023

(ஒப்பம்) **H.K. எரஞ்சித் பத்மகுமார**
சிரேஷ்ட நிதி முகாமையாளர்
18-11-2022

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி, இல. 265, வோட் இடம், கொழும்பு-07.

(262 ஆவது அதிகாரம்) உள்ளூராட்சி நிறுவன தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 66 எ பிரிவின் கீழான அறிவித்தல்

2012 இலக்கம் 22 ஆவது உள்ளூராட்சி நிறுவன தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66எ பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தின், தும்பனே பிரதேச சபையின் உப தவிசாளரை தெரிவு செய்வதற்கான முதலாவது பொதுக் கூட்டம் 2023.03.01 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தும்பனே பிரதேச சபை ஒன்றுகூடல் அரங்கில் நடைபெறும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

எச்.எம்.எம்.யூ.பீ. ஹேரத்
உள்ளூராட்சி ஆணையாளர்,
உள்ளூராட்சி திணைக்களம்
மத்திய மாகாணம்.

2023 பெப்ரவரி 16 ஆம் திகதி
மாகாண சபை கட்டிடத் தொகுதி
பல்லேகலை.

இலங்கை வங்கி

(திருத்தப்பட்ட அறிவித்தல்)

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தலாகும்.

2023.02.10 ஆம் திகதி தினகரன் செய்தித்தாளின் 1ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் 1ஆம் நிபந்தனையில் “1 1/4” ஏக்கர் மேட்டுநிலம் என்பது “1/4” ஏக்கர் மேட்டுநிலம் என சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கே.கே.ஏ. சந்தமாலி
முகாமையாளர்,
இலங்கை வங்கி,
சேவாகம கிளை.

A(1ka) ரேட்டிங், AAA - Brand Finance ரேட்டிங்
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் - அனுமதிக்கப்படும் கணக்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
BOC

இலங்கை திரிபோஷ லிமிட்டட்

திரிபோஷ தொழிற்சாலையில் உற்பத்தியின் போது அகற்றப்பட்ட திரிபோஷ மா விற்பனைக்கான கேள்வி கோரல் – 2023

கேள்வி இலக்கம் - SLTL/PUR/05/2023

1. இலங்கை திரிபோஷ கம்பனியின் பெறுகைக் குழுவின் தலைவரால் ஜா-எல திரிபோஷ தொழிற்சாலையின் உற்பத்தியிலிருந்து அகற்றப்பட்ட திரிபோஷ மா விற்பனைக்காக 2023 பெப்ரவரி 28ம் திகதி பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   ✱ அரசு அனுமதித்த வரித்தொகை அறவிடப்படும்.

2. எழுத்துமூல வேண்டுதல் கடிதத்துடன் ஆவணங்களுக்காக காசாக ரூ. 8675.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்தியமைக்காக இலங்கை திரிபோஷ லிமிட்டட் இன் காசாளரால் விநியோகிக்கப்படும், பற்றுச் சீட்டை சமர்ப்பித்து ஜா-எல கப்புவத்தவில் அமைந்துள்ள இலங்கை திரிபோஷ லிமிட்டட் இன் கொள்வனவுப் பிரிவில் 2023 பெப்ரவரி 28 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரையான காலத்திற்குள் குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

   கேள்வி ஆவணங்களை 2023 பெப்ரவரி 28ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன்பு தலைவர், பெறுகைக்குழு, இலங்கை திரிபோஷ லிமிட்டட் த.பெ. 17, கப்புவத்த, ஜாஎல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது இலங்கை திரிபோஷ லிமிட்டட் நிறுனத்தின் நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையை சீல் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ‘திரிபோஷ தொழிற்சாலையின் உற்பத்தியிலிருந்து அகற்றப்பட்ட திரிபோஷ மா விற்பனைக்கான கேள்வி கோரல் - 2023’ என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் 2023 பெப்ரவரி 28ம் திகதி பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன் அது முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் கீழ்க்காணும் முகவரியில் இடம்பெறும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்க இடமளிக்கப்படும்.

4. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு சிரேஷ்ட முகாமையாளரை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
   தொலைபேசி இலக்கம் - 011-2236588/ 0112237418

தலைவர்,
பெறுகைக்குழு,
இலங்கை திரிபோஷ லிமிட்டட்
த.பெ.இல. 17,
கப்புவத்த, ஜா-எல.

சுகாதார அமைச்சு

இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு-10

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான அழைத்தல்

1. இலங்கை தேசிய வைத்தியசாலைக்காக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-10, வண. விமலவன்ச தேரோ மாவத்தை, 385 ஆம் இலக்கத்திலுள்ள ‘‘சுவசிரிபாய’’, சுகாதார அமைச்சின் சார்பாக, கொழும்பு-10, இலங்கை தேசிய வைத்தியசாலை, பிரதி பணிப்பாளர் நாயகம் முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்களை இப்போது அழைக்கின்றார்.

2. வேலைத்தளங்கள் கொழும்பு-10, இலங்கை தேசிய வைத்தியசாலையின் இடப்பரப்பினுள்ளேயே அமைந்துள்ளன. இடப்பரப்பின் சாதாரண மற்றும் ஏனைய நிறுவனங்களின் சாதாரண வேலைகளுக்கு இடையூறு விளைவிக்காமல் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பணிகளின் இனங்களின் அடிப்படையில் ஒப்பந்தமானது வேறுபடக்கூடும். குழாய் வேலை, கழிவுநீர் வடிகாலமைப்பு, மின்னியல் வேலை, பெயிண்ட் பூசுதல், கொன்கிறீட் வேலை, கட்டமைப்பு பழுதுபார்த்தல்கள், அலுமீனிய வேலைகள், செங்கல் வேலை, பிளாஸ்டர், வளிச்சீராக்கல், நீர் உட்புகாதமைப்பு போன்றவை அடங்கலாக தினசரி அவசரமான பழுதுபார்த்தல்களை அடக்குகின்றன.

3. தேசிய பெறுகை முகவராண்மையினால் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டியிலுள்ள தேசிய ஷொப்பிங் நடைமுறையை பின்பற்றி ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

   விஷேடத்துவம்: **கட்டிட நிர்மாணம், மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகள், விஷேடத்துவம் பெற்ற கட்டிட ஒப்பந்தக்காரர்கள் (எஸ்பி-சி)**
   தரம்: **சி-9 அல்லது மேற்பட்டது, ஈஎம்-5 அல்லது மேற்பட்டது, எஸ்பி-5 அல்லது மேற்பட்டது.**

5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   i. ஒப்பந்தக்காரரானவர் பராமரிப்பு/ பிரதான ஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது கடந்த இரு வருடங்களுக்கு பணியாற்றிருத்தல் வேண்டும்.
   ii. வைத்தியசாலைகள்/நிறுவனங்கள் செயற்படும் வேளையில் பழுது பார்த்தல்களை உடனடியாகவே சீர்செய்து திருப்திகரமாக பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   iii. தகுதித்தன்மை மற்றும் தகைமையை சரிபார்ப்பதற்காக அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றுபகரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. 2023.02.20 ஆம் திகதியிலிருந்து 2023.03.13 ஆம் திகதி வரையும் சாதாரண அலுவலக நேரங்களில் பெறுமதி சேர் வரி நீங்கலாக, 2,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-10, இலங்கை தேசிய வைத்தியசாலை, பிரதி பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விண்ணப்ப ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரியில் 2023.03.14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும்.

8. அனைத்து விண்ணப்பங்களும் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான பிரகடணமொன்றில் உரிய முறையில் கம்பனியின் அதிகாரம் வழங்கப்பட்ட கையொப்பதாரரினால் கைச்சாத்திடப்பட்டு இணைக்கப்படல் வேண்டும்.

பிரதி பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தேசிய வைத்தியசாலை,
கொழும்பு-10.

1964 இலக்கம் 28இன் காணி சுவீகரித்தல் (திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : DSWA/LND/4/ACQUI/FI/35
காணி அமைச்சின் குறிப்பு இல. : 4-3/6/2015/HW/82

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கபட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2021.12.28 ஆம் திகதிய 2260/44ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பிரிவு (111) ஐப் பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம்	:	தென்
மாவட்டம்	:	ஹம்பாந்தோட்டை
பிரதேச செயலாளர் பிரிவு	:	வலஸ்முல்ல
கிராம நிலதாரி பிரிவு	:	அகலபட - 569, ரதனிஆர -570
கிராமத்தின் பெயர்	:	பூவெல்கொட, ரதனிஆர
வரைபட இலக்கம்	:	156,215
துண்டு இலக்கம்	:	இ.கி.வ 156-(36,37) இ.கி.வ. 215, 242, 245, 246, 247, 248,249,250,252,254,259,260

ஐ.ஆர்.கே.வித்தாரண
பிரதேச செயலாளர்
வலஸ்முல்ல

பிரதேச செயலாளர் காரியாலயம்,
வலஸ்முல்ல
2023.01.27

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

லக்கல பிரதேச செயலாளரின்
குறிப்பு இல. 11/3/3/1/37
காணி அமைச்சின்
குறிப்பு இல. 4/3/2/2018/MV/422

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்ட வணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட் சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2314/02 கொண்ட 2023.01.09 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதி விஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	:	மாத்தளை
பிரதேச செயலகப் பிரிவு	:	லக்கல
கிராம அலுவலர் பிரிவு	:	இல. E.396 லேல்ஒய பிரிவு
கிராமம்	:	லேல்ஒய (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க)
காணியின் பெயர்	:	மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி
வரைபட இலக்கம்	:	பி.ஆ.வ.13 குறை நிரப்பி 280 பத்திர இல. 333
விஸ்தீரணம்	:	5.0529 ஹெக்டயார்
துண்டு இலக்கம்	:	11093,11094,11095,11096, 11098,11100,11101,11102, 11106,11107,11108,11109, 11110,11111,11112,11114, 11115,11116,11117,11118, 11119,11120,11121,
வரைபட இலக்கம்	:	பி.ஆ.வ.13 குறைநிரப்பி 164 பத்திர இல.334
விஸ்தீரணம்	:	1.1300 ஹெக்டயார்
துண்டு இலக்கம்	:	11123,11125,11126,11127, 11128,11129,11130,11132, 11133,11134,11136,11137, 11138,11139,11140,11141, 11142,11144,11146,11147, 11148,11149,11150

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

2023.02.15ஆம் திகதி
லக்கல பிரதேச செயலகத்தில்

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2023 பெப்ரவரி 22ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 75,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09123E266	LKA18223H258	LKA36424B238	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	35,000	20,000	20,000	75,000

ஏல விற்பனைத் திகதி	:	2023 பெப்ரவரி 22
தீர்ப்பனவுத் திகதி	:	2023 பெப்ரவரி 24
வழங்கப்படும் திகதி	:	2023 பெப்ரவரி 24
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும்	:	2023 பெப்ரவரி 22, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை	:	ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

✱ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

எம். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

பெறுகை அறிவித்தல்

வளிமண்டலவியல் திணைக்களம்

2023ஆம் ஆண்டில் எமது திணைக்களத்திற்கு பின்வரும் வளிமண்டலவியல் உபகரணங்களின் பெறுகைக்காக 2023 பெப்ரவரி 20 அன்று மு.ப. 9.00 முதல் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

■ **01/2023 - வளிமண்டலவியல் உபகரணங்களை வழங்கல்**

- ✪ 05 nos. Digital Barometer with Display
- ✪ 05 nos. Ultrasonic Anemometer Sensor
- ✪ 01 nos. Field Calibration Device for tipping bucket raingauge
- ✪ 05 nos. Vaisala WMT700 Cable
- ✪ 02 nos. Tipping Bucket Rain gauge
- ✪ 01 nos. Portable Hydrogen Generator Electrolytic membrane Technology
- ✪ Spare parts for Thermographs & Pluviographs

2023 பெப்ரவரி 20 முல் 2023 மார்ச் 14 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 கட்டணமொன்றைச் செலுத்தி வளிமண்டலவியல் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் இதற்கான பெறுகைப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2023 மார்ச் 15 அன்று பி.ப. 2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 011 2 684045 தொலைபேசி இலக்கத்தின் மூலம் திணைக்களப் பெறுகைப் பிரிவை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

2023.02.20

வத்தளை மாபோல நகர சபை

பாதுகாப்பு சேவை

விலைமனுக்கோரல்

2023.04.01 முதல் 2024.03.31 வரை வத்தளை மாபோல நகர சபையின் பாதுகாப்பு விடயங்களுக்காக அரச பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்துள்ள அனுபவமுள்ள அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென எழுதி இரு பிரதிகளுடன் 2023.03.13 மு.ப.10.30 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

01. கேள்விப் படிவங்களை விநியோகித்தல்	:	2023.02.20 முதல் 2023.03.12 வரை (மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரை) மற்றும் 2023.03.13 (மு.ப.8.30 முதல் மு.ப.10.00 வரை)
02. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல்	:	2023.02.20 முதல் 2023.03.13 மு.ப.10.30 வரை (அலுவலக நேரங்களில்)
03. கேள்விகளை திறத்தல்	:	2023.03.13 மு.ப.10.30 இற்கு

உருப்படி இலக்கம்	ஒப்பந்த இலக்கம்	உருப்படியின் பெயர்	கேள்விப்பிணை பெறுமதி (மீளளிக்கப்படும் ரூபா)	விண்ணப்பப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படாத ரூபா
01	WM/2/5/2/20	பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் - 2023	25000.00	5000.00

மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொண்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத விலைமனுதாரர்களின் பிணைத்தொகை மீளளிக்கப்படமாட்டாது அத்துடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் வத்தளை மாபோல நகர சபையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுக்களைச் சமர்ப்பிப்போர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு சமுகமளிக்கவும் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “பாதுகாப்பு சேவை விலைமனுக்கள்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2023.....
வத்தளை மாபோல நகர சபை அலுவலகத்தில்
தொ.பே : 0112932275

மார்க்.ஏ.எப்.குணசேக்கர
தலைவர்
வத்தளை மாபோல நகரசபை - வத்தளை

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

கேள்வி இலக்கம்	கேள்வியின் பெயர்	விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்)	பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம்	மூடும் திகதி மற்றும் நேரம்
CES/LP/22/PT/03/055	60 Lit – Zinc Rich Epoxy Primer Paint/60 Lit – Polyamine Cured Epoxy Primer/100 Lit-HI – Build Finish Paint (Golden Yellow)	20,000.00	1,000.00	2023.03.03 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 பெப்ரவரி 20 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),
வழங்கல் பிரிவு,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.
தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443.

விலைமனுக்களுக்கான அழைத்தல்

மாகாண கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கிழக்கு மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்த இலக்கம்	விளக்கம்	விலைமனு தாரரின் தேவைப் படுத்தப்படும் தரம்	விலைமனுப் பிணை (ரூபாவில்)	பொறியியலாளரின் மதிப்பீடு (மில். ரூபாவில்)	பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் (நாட்களில்)
TEDP/EP/MMMV/2022/(R-1)	ஏறாவூர், Bt/Bc மாக்கன் மாக்கர் மஹா வித்தியாலயத்தின் தற்போதுள்ள கட்டிடத்தை தொழில்நுட்பவியல் பீடத்திற்கு பதிலாக தொழில்நுட்பவியல் வேலைத்தளமாக மீள்நிர்மாணம் செய்தல்.	சி-7, சி-6 மற்றும் சி-5	222,000	22.175	120

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016 (iv) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிடத்தில் ICTAD (தற்போது CIDA) பதிவில் சி-6 அல்லது மேற்பட்ட தரத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்பாடுகள்.

தொழில்நுட்ப தேவைப்படுத்தல்கள்	நிதியிடல் தேவைப்படுத்தல்கள்	சட்டரீதியிலான தேவைப்படுத்தல்கள்
தகைமை மற்றும் அனுபவத்துடான ஆகக்குறைந்த நபர்கள் **01. தொழில்நுட்ப அலுவலர்-01** தகைமை: NDT (சிவில்) அல்லது நிகரான அனுபவம்: 3 வருடங்கள் **அல்லது** தகைமை: NCT **அல்லது** நிகரான அனுபவம்: 5 வருடங்கள் **02. வேலை மேற்பார்வையாளர்-01** தகைமை: NCT அல்லது நிகரான அனுபவம்: 3 வருடங்கள்	* மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து விலைமனு தொகையின் 20% இற்கான கடன் வசதியை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும். * கடந்த 3 வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது விலைமனுத் தொகையின் ஆகக்குறைந்தது 60% இற்கு சமமாகவிருத்தல் வேண்டும். * கடந்த 3 வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக்குறைந்தது விலைமனுத் தொகையின் 30% இற்கு குறையாத ஒரு ஒப்பந்தத்தையாவது விலைமனுதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். **(மூன்று பாரிய செயற்றிட்டங்களை மாத்திரம் குறித்துரைக்கவும்)**	* விலைமனுதாரர் பதிவு செய்யப்பட்ட சட்ட நிலபரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் (ஏக உரிமையாளர், பங்குடமை, கம்பனி போன்றவை) * அரச நிதித் திணைக்களம் அல்லது வேறேதாவது முகவராண்மையினால் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட / தவறிழைத்த ஒப்பந்தக்காரரென விலைமனுதாரர்கள் பிரகடனப்படுத்தியிருத்தல் ஆகாது

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை **கிழக்கு மாகாண, மாகாண கல்வித் திணைக்கள மாகாண பொறியியலாளரிடமிருந்து** பெற்று மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. **2023.02.20 ஆம் திகதியிலிருந்து 2023.03.13 ஆம் திகதி வரையும் மு.ப.9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக **10,000 ரூபாவைச்** செலுத்திய பின்னர், **திருகோணமலை, மாகாண கல்வித் திணைக்கள, மாகாண பணிப்பாளருக்கு** எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்று இரு பிரதிகளில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் **கிழக்கு மாகாண, மாகாண கல்வித் திணைக்கள கணக்கிடல் கிளையில்** மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் தனித்தனியான உறைகளில் இரு பிரதிகளில் **2023.03.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக** கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியான **மாகாண கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை** என்பதில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதியிலிருந்து **77 நாட்களுக்கு** செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் ஒன்றில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெறப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது **2023.03.15 ஆம் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு** செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. திருகோணமலை, கிழக்கு மாகாணம், மாகாண கல்வித் திணைக்களத்தில் **2023.03.01 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடாத்தப்படும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதாகும். திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு தனியான அல்லது அனைத்து விலைமனுக்களையும் அதனது சுய தீர்மானத்தில் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

ஏ. கனககூரியம்,
தலைவர்/மாகாணப் பணிப்பாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மாகாண கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள கடைகளை வாடகை அடிப்படையில் (ஐந்து) 05 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விக் கோரல்

ஒப்பந்த இலக்கம்: PD/UDA/RTB/Shops/Jaffna/007/2023

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பின்வரும் எட்டு (08) கடைகளை ஐந்து (05) ஆண்டுகளுக்கு மாத வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய பெறுகைக்குழுத் (கீழ்மட்டம்) தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அட்டவணை 01

இலக்கம்	கடை இலக்கம்	தரை விஸ்தீரணம் (ச. அடி)	அடிப்படை பெறுமதி (முற்பணம்) ரூபாவில்	மாத வாடகை (ரூபாவில்)	விலை மனுப் பிணைத் தொகை (ரூபாவில்)
01	02	**304**	524,000.00	4,500.00	15,500.00
02	03	**304**	524,000.00	4,500.00	15,500.00
03	04	**304**	484,000.00	4,000.00	14,500.00
04	05	**304**	484,000.00	4,000.00	14,500.00
05	06	**304**	484,000.00	4,000.00	14,500.00
06	07	**304**	524,000.00	4,500.00	15,500.00
07	08	**304**	524,000.00	4,500.00	15,500.00
08	09	**304**	605,000.00	5,000.00	18,000.00

2. இக்கடைகள் மாத வாடகை அடிப்படையில் 05 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் வளமுள்ள கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆகக்கூடிய அடிப்படை விலைகளைக் கவனத்திற் கொண்டு, இவற்றை வழங்குவதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
3. குறித்த கேள்விதாரர் கடை யொன்றிற்கு மேற்பட்ட கேள்வி விலைகளைச் சமர்ப்பிக்க முடியாது
4. இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர், ஒவ்வொரு கடை அலகுக்கும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைப் பெறுமானத்திற்கு மேல் கேள்வி விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு மேலதிகமக மாதாந்த வாடகை மற்றும் அவற்றிற்காக வரிகளும் செலுத்தப்படல் வேண்டும். சித்திகரமான விலைமனுதாரரினால் செலுத்தப்பட்ட அடிப்படை பெறுமதியானது மீளளிக்கப்படாத தொகையாகும்.
5. 2023 பெப்ரவரி 20 முதல் 2023 மார்ச் 10 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை வார வேலை நாட்களில் மீளளிக்கப்படாத இலங்கை ரூபாவில் இரண்டாயிரம் மற்றும் அதற்கான வரிகளும் பத்தரமுல்ல, படிநிலை I, நகர அபிவிருத்தி அதிகார சபை 7ஆம் மாடி பெறுகை அலகிலிருந்து அல்லது யாழ்ப்பாணம் பிரதான வீதி, இல. 20, இலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை, வட மாகாண அலுவலகத்தில் ஆர்வமுள்ள தரப்பினர் இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை குறித்த காலப் பிரிவில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
6. கடைகளுக்கான ஒவ்வொரு கேள்வி ஆவணங்களுடனும், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணையமொன்று, யாழ்ப்பாணம், பிரதான வீதி இல. 20 இல் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின், நிதிப் பிரிவில் ரொக்கப்பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. 2023 மார்ச் 13 அன்று மு.ப. 11.00 இற்கு, யாழ்ப்பாணம், பிரதான வீதி, இல. 20 இல் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்தில் கேள்விகள், மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகளித்திருக்கலாம்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் அலுவலக கேள்விப்படிவங்களில் இதற்கான கேள்வி விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் ஏனைய ஆவணங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்வி விலைகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்வி ஆவணங்களில் இதற்கான சமர்ப்பித்தல் செயல்முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
10. பத்தரமுல்ல, படிநிலை I, செத்சிரிபாய, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை (பெறுகை) பிரதிப்பணிப்பாளரிடம் தொலைபேசி: 011-3049008 மற்றும் 011-2875916-20 நீடிப்பு 2681 மூலம் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வட மாகாண அலுவலகம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தொலைபேசி 021-2213519 மற்றும் 021-2223269 மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இறைவரி கேள்விச் சபை (கீழ் மட்டம்)
நகர அபிவிருத்தி அதிகார சபை
6ஆம் மாடி, செத்சிரிபாய,
படி நிலை -I, பத்தரமுல்ல.

நோர்வூட் பிரதேச சபை

கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த மற்றும் தவறிழைத்தோர் பட்டியலுக்கு உள்வாங்கப்படாத கேள்விக் கோருநர்களிடமிருந்து நோர்வூட் பிரதேச சபையின் கேள்விக்குழுவின் தலைவரால் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இல.	வேலைத் திட்டம் மற்றும் கேள்வி இல	பொறியியலாளர் மதிப்பீட்டு பத்திரத்திற்கு அமைய பெறுமதி (வெட் வரியில்லாமல்)	ஒப்பந்த காலம் (வாரம்)	CIDA/ ICTAD பதிவு	கேள்விமனு பிணை			மீளளிக்கப் படாத கேள்வி ஆவண கட்டணம் (ரூ.)
					வங்கி பிணை பெறுமதி (ரூ.)	பணமாக செலுத்தப்பட வேண்டிய வைப்பு (ரூ.)	செல்லுபடி காலம்	
01	பொகவந்தலாவை பஸ்தரிப்பிட மேல் மாடியில் கடையறைகளை நிர்மானித்தல் (CPOAENOPS/DEV/202301-01)	32.0	12	C5 அல்லது C4 (கட்டிடம்)	320,000.00	160,000.00	2023.07.12	5,000.00

1. இக் கேள்விமனுக்கோரலானது தேசிய போட்டித்தன்மை மிகுந்த கேள்விமனுக்கோரல் நடைமுறைக்கமைய நடாத்தப்படும்.
2. இது தொடர்பான மேலதிக விபரங்களை .052-2267678 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை 20.02.2023 ம் திகதி முதல் 14.03.2023 திகதி வரை அலுவலக நேரத்தில் நோர்வூட் பிரதேச சபை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தாமல் பார்வையிட முடியும்,
3. கீழ் காணப்படும் முகவரிக்கு எழுத்து மூல வேண்டுகோள் கடிதத்தை முன்வைத்த பின்னர் மேற்குறிப்பிட்டுள்ளவாறு மீளச்செலுத்தப்படாத கேள்விமனு ஆவண கட்டணத்தை நோர்வூட் பிரதேச சபையின் காசாளரிடம் பணமாக செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை முன்வைத்து கேள்வி ஆவணங்களை 20.02.2023 ம் திகதி முதல் 14.03.2023 திகதி வரை முப.9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரையான அலுவலக நேரத்தில் நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.
4. மனுவின் பெறுமதி ரூ.மில்லியன் 05 ஐ விஞ்சுகின்ற சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் வழங்குவதற்கு தகுதியை பெறுவதற்கு வெற்றி எய்திய கேள்விதாரர் மூலமாக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆவது பந்தியின் கீழ் நிறுவன பதிவாளர் ஊடாக விநியோகிக்கப்படும் சான்றிதழ் முன்வைக்கப்பட வேண்டும்.
5. மேற்படி பந்தியில் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கு "நோர்வூட் பிரதேச சபை" எனும் பெயரில் அந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியம் (CGF) மூலமாக பெற்றுக்கொண்ட கேள்வி பாதுகாப்பு பிணை முன்வைப்பது அல்லது கேள்வி பாதுகாப்பு பிணை பணமாக செலுத்துவதாயின் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை நோர்வூட் பிரதேச சபையின் காசாளரிடம் வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை முன்வைக்க வேண்டும்.
6. உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் துணைப்பிரதியுடன் "தலைவர், கேள்விக்குழு நோர்வூட் பிரதேச சபை" டின்சின் பசார் பொகவந்தலாவை எனும் முகவரிக்கு 15.03.2023 ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து நோர்வூட் பிரதேச சபையின் சபை செயலாளரது அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட முடியும். உரிய நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த பின்னர் உடனடியாக கேள்வி திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பான பிரதிநிதி பங்குபற்றலாம்.
7. முன்வைக்கப்படும் கேள்வியினை முழுமையாகவோ அன்றி பகுதியாகவோ ஏற்பதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான அதிகாரம் நோர்வூட் பிரதேச சபையின் கேள்வி குழுவினை சாரும்.

இது தொடர்பான முன்கூட்டிய கேள்விக்கூட்டமொன்று 03.03.2023 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு நோர்வூட் பிரதேச சபையில் நடைபெறும். இதில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் பங்குபற்றலாம்.

கே.கே.ரவி,
தலைவர், கேள்விக்குழு
நோர்வூட் பிரதேச சபை
டின்சின் பசார், பொகவந்தலாவை.

2023.02.20 ம் நாள்,
தொலைபேசி இல. 052-2267678
தொலை நகல் இலக்கம் 052-2267811

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 பெப்ரவரி 20 திங்கட்கிழமை

மத்தியூஸ் ஒருநாள் அணிக்கு திரும்ப தொடந்தும் வாய்ப்பு

மஹேல ஜயவர்தன உறுதி

தொடர்ச்சியான திறமையை வெளிப்படுத்தினால் அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் திமுத் கருணாரத்ன ஆகியோர் எதிர்வரும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட இன்னும் வாய்ப்பு இருப்பதாக இலங்கை கிரிக்கெட்டின் ஆலோசனை பயிற்சியாளரான மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

'இவர்களால் ஏன் முடியாது. யாரும் நீக்கப்படவில்லை. யாருடனும் தேர்வுக் குழுவினருக்குப் பிரச்சினை இருப்பதாக நான் நினைக்கவில்லை. அனைவரும் தமது இருப்பை காட்டி தொடர்ச்சியாக திறமையாக செயற்பட வேண்டும். இது ஒரு முறை மாத்திரமானதாக இருக்க முடியாது' என்று சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை ஏ அணிக்காக ஆடும் அஞ்சலோ மத்தியூஸ் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 53 பந்துகளில் 4 பௌண்டரிகளுடன் 50 ஓட்டங்களை பெற்றதோடு அந்தப் போட்டியில் இலங்கை ஏ அணி 86 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

'குறிப்பிட்ட வயதில் மூத்த வீரர் திறமையை வெளிப்படுத்தவில்லை என்றால், அவர்களின் வயது செல்லும் நிலையில் இளம் வீரர்களில் கவனம் செலுத்துவதே நல்லது. ஆனால் மூத்த வீரர்கள் ஓட்டங்களை குவித்து, அவர் தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்தினால், இளம் வீரர்கள் ஒருபக்கம் வளர்ந்து வரும் நிலையில் அவர்கள் அணிக்குத் திரும்புவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை' என்று மஹேல தெரிவித்தார்.

பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான தற்போதைய இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவையும் மஹேல இதன்போது வரவேற்றார்.

'தற்போதைய தேர்வாளர்கள் கடந்த மாதங்களில் நல்ல அடைவை பெற்றுள்ளனர். டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 இல் வெற்றி வீதத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

உண்மை என்னவென்றால் இந்த தேர்வாளர்கள் கடுமையாக உழைக்கின்றனர். அவர்கள் உள்ளூர் மட்டப் போட்டிகள் பற்றி தெரிந்து திறமையான இளம் வீரர்களை கண்டறிகின்றனர்' என்றார்..

சம்பியனானது இலவன் ஸ்டார்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 75ஆவது சுதந்திர தின வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கழகத்தின் தலைவர் எம்.எச். நிஸார் தீன் ஆசிரியரின் தலைமையில் பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. இறுதிப் போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டு கழகம் பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டு கழகத்தை வீழ்த்தியது.

இங்கிலாந்து அபார வெற்றி

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 267 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

மௌன்ட் மவுன்கனியுவில் நடைபெற்ற போட்டியின் நான்காவது நாளான நேற்று (19) 394 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணி 126 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

முன்னதாக இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 325 ஓட்டங்களை பெற்ற நிலையில், நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸுக்காக 306 ஓட்டங்களை குவித்தது. தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து 374 ஓட்டங்களை பெற்றது.

இந்த வெற்றியுடன் இங்கிலாந்து அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1–0 என முன்னிலை பெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வெலிங்டனில் பெப்ரவரி 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தென்னாபிரிக்க டெஸ்டுக்கு முதல் கறுப்பினத் தலைவர்

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் முதல் கறுப்பின தலைவராக டெம்பா பவுமா நியமிக்கப்பட்டுள்ளார்.

டீன் எல்கருக்கு பதில் டெஸ்ட் தலைமை பொறுப்பு வழங்கப்பட்டிருக்கும் பவுமா ஒருநாள் அணியின் தலைவராகவும் தொடர்ந்து நீடிக்கவுள்ளதோடு டி20 தலைமைப் பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முன்னாள் அணித் தலைவர் எல்கரும் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தத் தொடரின் முதல் போட்டி வரும் பெப்ரவரி 28ஆம் திகதி செஞ்சூரியனில் ஆரம்பமாகவுள்ளது.

தென்னாபிரிக்க டெஸ்ட் அணி எல்கர் தலைமையில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 2–1 எனவும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 2–0 எனவும் தோற்ற நிலையிலேயே இந்த அதிரடி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரையிறுதியில் ஆஸி. மகளிர்

தென்னாபிரிக்க அணியை ஆறு விக்கெட்டுகளால் வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி மகளிர் டி20 உலகக் கிண்ண அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

தனது சொந்த நாட்டில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை (18) நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணிக்கு முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நிலையில் அந்த அணி 20 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து 124 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஆஸி. மகளிர் அணி 16.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 125 ஓட்டங்களை எட்டியது. இந்த வெற்றியுடன் இலங்கை அணி இடம்பெற்றிருக்கும் குழு ஒன்றில் இருந்து நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காட்டருக்கு வீட்டில் மருத்துவ பராமரிப்பு

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் மருத்துவப் பராமரிப்புடன் எஞ்சிய காலத்தை குடும்பத்தினருடன் வீட்டில் கழிக்க தீர்மானித்திருப்பதாக அவரது காட்டர் நிலையம் தெரிவித்துள்ளது.

98 வயதான காட்டர் நீண்ட காலம் உயிர் வாழும் அமெரிக்க ஜனாதிபதியாக உள்ளார்.

மருத்துவமனையில் தங்கி கூடுதல் மருத்துவ சிகிச்சையை பெற்று வந்த காட்டர் அதற்கு பதில் இந்த முடிவை எடுத்திருப்பதாக காட்டர் நிலையம் கூறியது. கல்லீரல் மற்றும் மூளையில் புற்றுநோய் பாதிப்பு உட்பட அவர் அண்மைக் காலத்தில் சுகாதார பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜிம்மி காட்டர் 1977 தொடக்கம் 1981 வரை ஒரு தவணை மாத்திரம் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிலையில் இரண்டாவது தவணைக்கான போட்டியில் ரொனால்ட் ரீகனிடம் தோல்வி அடைந்தார்.

வட கொரியா திடீர் ஏவுகணை சோதனை

வடகொரியா தான் அமெரிக்காவுக்கும் தென் கொரியாவுக்கும் எச்சரிக்கையாக ஏவுகணைச் சோதனையை நடத்தியதாகக் கூறியுள்ளது.

'திடீர்ச் சோதனை' என்று கருதப்படும் அது, பியோங்யாங்கின் அணு வாயுதத் தாக்குதலின் வலிமையை வெளிப்படுத்துவதாய் வட கொரியா குறிப்பிட்டது.

கடந்த சனிக்கிழமை (18) ஹவாசொங் எனும் ஏவுகணை பியோங்யாங் விமான நிலையத்திலிருந்து பாய்ச்சப்பட்டதாக வட கொரிய செய்தி நிறுவனமான குறிப்பிட்டது. அது 66 நிமிடம் பறந்து ஜப்பானின் பொருளாதார வட்டாரத்தில் விழுந்ததாக தென் கொரிய இராணுவம் தெரிவித்தது. அந்த ஏவுகணை அமெரிக்கத் தலைநிலம் வரை பறந்துசெல்லக்கூடியது என்று தென் கொரியா குறிப்பிட்டது.

சர்வதேச செய்திகள்

துருக்கி, சிரிய பூகம்பம்:

பலி எண்ணிக்கை 46,000ஐ தாண்டியது: பெரும்பாலான மீட்பு பணிகள் நிறைவு

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட பூகம்பம் நிகழ்ந்த 12 நாட்கள் கடந்த நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 46,000ஐ தாண்டியுள்ளது. துருக்கியில் சுமார் 345,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்து தொடர்ந்தும் பலர் காணாமல் போன நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி 7.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பம் அதன் பின்னர் பதிவான சக்திவாய்ந்த அதிர்வினால் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளில் பெரும் அழிவு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் வீடற்றவர்களாகவும் உதவி தேவை உடையவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் பெரும் பகுதியான மீட்புப் பணிகள் நிறுத்தப்படுவதாக துருக்கி அனர்த்த மற்றும் அவசர முகாமை அதிகாரசபையின் தலைமை தெரிவித்துள்ளது.

பூகம்பத்தால் துருக்கியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 40,642 ஆக உயர்ந்திருப்பதோடு அண்டை நாடான சிரியாவில் 5,800க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை மீட்புப் பணிகள் தொடர்ந்த நிலையில் கிரிகிஸ்தான் நாட்டில் இருந்து வந்த மீட்பாளர்கள் தெற்கு துருக்கியின் அன்டக்யாக் நகரில் இடிந்த கட்டடம் ஒன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை ஒரே குடும்பத்தின் ஐவரை மீட்டுள்ளனர். இதில் ஒரு குழந்தை உட்பட மூவர் உயிருடன் காப்பற்றப்பட்டனர். தாய், தந்தை உயிர் தப்பியபோதும் குழந்தை நீர்ச்சத்து குறைபாடு காரணமாக பின்னர் உயிரிழந்ததாக மீட்புக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி அந்தக் குடும்பத்தில் மூத்த சகோதரி மற்றும் இரட்டைக் குழந்தைகள் உயிழந்துள்ளனர்.

எனினும் வெளிநாட்டு மீட்பாளர்கள் தமது பணியை முடித்து வெளியேறும் நிலையில் இடிபாடுகளில் தொடர்ந்தும் உயிருடன் இருப்பார்கள் என்ற சிறிய நம்பிக்கையுடன் உள்ளூர் மீட்பாளர்கள் அங்கு தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிரியாவில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தும் கவலை எழுந்துள்ளது. அதிகாரிகள் உணவு விநியோகப் பாதைகளை மறைக்காமல் இருக்கும்படி உலக உணவுத் திட்டம் வலியுறுத்தி வருகிறது. அங்கு பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நூறாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு உதவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பூகம்பத்தால் இரண்டாக துண்டிக்கப்பட்ட கிராமம்

துருக்கி பூகம்பத்தால் கிராமம் ஒன்றின் பெரும் பள்ளம் தோன்றி அந்த கிராமமே இரண்டாப் பிளவுபட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் டமிக் கொப்ருஎன்றகிராத்தில்வீடுகள் மற்றும் வீதிகள் 13 அடி அளவு அமிழ்ந்து காணப்படுகிறது. பூகம்பத்தினால் பூமிக்கு அடியில் இருந்து நீர் மட்டம் உயர்ந்ததால் அந்தப் பள்ளத்தில் நீர்த் தேங்கி இருப்பதாக உள்ளூர்வாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த கிராமத்தில் இருந்த வீதிகள் தற்போது இல்லை. சில இடங்களில் ஒரு பக்கம் மற்றப் பக்கத்தை விடவும் தாழ்ந்துள்ளது.

எனினும் கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற சக்திவாய்ந்த பூகம்பம் மற்றும் பின் அதிர்வுகளில் அதிர்ஷ்டவசமாக இந்த கிராமத்தில் எந்த உயிர்ச் சேதமும் பதிவாகவில்லை.

நட்சத்திர கால்பந்து வீரரின் சடலம் மீட்பு

துருக்கி பூகம்கம் நிகழ்ந்து கிட்டத்தட்ட இரண்டு வாரங்களை எட்டும் நிலையில் கால்பந்து வீரர் கிறிஸ்டியன் அட்சுவின் உடல் அவரது வீட்டின் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

31 வயதான கானா தேசிய அணி வீரரான அட்சு, பிரீமியர் லீக் கழகங்களான எவர்டன், செல்சி மற்றும் நியூகாசில் அணிகளுக்காக விளையாடியுள்ளார். அவர் கடந்த ஆண்டு துருக்கியின் ஹடாய்பூர் கழகத்திற்காக ஒப்பந்தமானார்.

கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி பூகம்பத்தில் ஹடாய், அன்டக்யாவில் இருக்கும் அட்சுவின் அடுக்குமாடிக் குடியிருப்பு சரிந்து விழுந்ததை அடுத்து அவர் காணாமல்போன நிலையில் இருந்தார். இந்நிலையில் 12 மாடி ஆடம்பர அடுக்கமாடிக் குடியிருப்பின் இடிபோடுகளில் இருந்து கடந்த சனிக்கிழமை (18) அவரது சடலம் மீட்கப்பட்டது.

இந்த கட்டடத்தை கட்டிய ஒப்பந்ததாரர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்ற நிலையில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.